இது


# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 ஏப்ரல், 29.2015 வியூகம்-12 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com

Email - ithunamthesam@gmail.com





## சந்திரிகாவிற்கான

# அழைப்பு

## சர்வதேச விசாரணையை பலவீனப்படுத்தவா?

தேசத்தின் உண்மைக் குரல்

# வட-கிழக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும்



எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரசும் தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ள நிலையில் எமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அவதூறான செயற்பாடுகளைக்கூறி தமிழ் மக்களை குழப்புவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுவருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பாக திருகோணமலையில் நடந்த கூட்டத்தில் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாடு சாத்தியம் இல்லை. அது வெற்றுக் கோஷம் என்றும் மக்கள் அந்த நிலைப்பாட்டை நிராகரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தமிழர்களின் தாயகம் தனித்தேசம். தமிழ் தேசத்திற்கு அங்கீகாரம் பெற்றே ஆக வேண்டும். அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டி தீர்வுக்குள் போகலாம். தமிழ் தேசத்தினுடைய இறைமையின் அடிப்படையிலும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தான் சிங்கள தேசத்துடன் இணைந்து ஒரு சமஷ்டி தீர்வுக்கு நாங்கள் இணங்கலாம். தேசங்களின் கூட்டாக இந்த தீர்வு அமைய வேண்டும்.

இந்த நிலைப்பாட்டை சம்பந்தன் பகிரங்கமாக நிராகரித்துள்ளார். அப்படிப்பட்ட நிலையில் கொள்கை இணக்கப்பாடு வரப்போவதில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன கூட்டமைப்பில் இருந்து வெளியேறியது கொள்கை பிரச்சினையால்தான். இந்த நிலைப்பாட்டை விட்டு கூட்டமைப்பு வெளியேறி ஒற்றையாட்சிக்குள் 13ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது என்ற காரணத்தினால் தான் நாம் வெளியேறினோம். இன்றும் கூட சம்பந்தன் இதனை வலியுறுத்தியுள்ளார். இத்தகைய நிலையில் எங்களுக்கு கூட்டமைப்புடன் இணங்கிச் செயற்படுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. அது மட்டுமல்ல வருகின்ற தேர்தல்களில் தனியாக வடக்கு, கிழக்கில் போட்டியிட முடிவெடுத்துள்ளோம்.

எங்களுடன் எந்த புலம்பெயர்ந்த அமைப்புகளோ, கட்சிகளோ கூட்டமைப்புடன் இணைவதுபற்றிய பேச்சுவார்த்தைக்கு வரவும் இல்லை. அது தொடர்பில் எந்த முயற்சியும் இல்லை. தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் தனித்துப் போட்டியிடப்போகின்றன என்று அறிவித்துள்ள நிலையில் மக்களைக் குழப்பி எங்கள் பக்கம் மக்கள் திரும்பாமல் இருப்பதற்கு கூட்டமைப்பின் சதி இது" என்றார்.

## யாழ்.சர்வதேச மார்க்சியக் குழுவின் பகிரங்கக் கலந்துரையாடலில் எதிரொலித்த வலிகாமம் நீர் விவகாரம்

வலிகாமம் பிரதேச நிலத்தடி கழிவு எண்ணெய் கலந்த விவகாரம் குறித்து யாழ். சர்வதேச மார்க்சியக் குழுவின் மாதாந்தப் பகிரங்க கலந்துரையாடலின் போது கடும்வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சியக் குழுவின் மாதாந்த பகிரங்கக் கலந்துரையாடல் அண்மையில் யாழ்.நகரில் அமைந்துள்ள டி.சி.எம்.தனியார் கல்வி நிலையத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற சட்டத்தரணி டி.ரெங்கன் சர்வதேச மார்க்சியக் குழுவின் தலைவர் பொ.சிவபாலனைப் பார்த்து சுன்னாகம் அதனை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை தற்போது காணப்படும் ஆழமான பிரச்சினை. கூர்மையடைந்துள்ள பிரச்சினை. இது குறித்து நீங்கள் நிச்சயம் கருத்தரங்கு வைத்திருக்க வேண்டுமென்றார்.

இதற்குப் பதிலளித்த சர்வதேச மார்க்சியக் குழுவின் தலைவர் பொ. சிவபாலன். ஒரு விடயம் குறித்துக் கலந்துரையாட முழுமையான தகவல்கள் தேவை என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சட்டத்தரணி டி.ரெங்கன். நீங்கள் சமகால அரசியல் போக்குகள் மற்றும் அரசியல் தொடர்பான பல்வேறு விடயங்களில் கலந்துரையாடுவதற்குப் பூரணமான தகவல்கள் பெற்றுத்தான் கலந்துரையாடுகிறீர்களா? எனக் கேட்கவே இதற்குக் குழுவின் தலைவர் பதிலளிக்க முடியாது தடுமாறினார்.


தொடர்ந்து பேசிய சட்டத்தரணி டி.ரெங்கன் அனுராதபுரத்திலே கிட்னி பிரச்சினை இதைவிடப் பாரதூரமான நீண்ட காலப் பிரச்சினை. அப்போது அமைச்சராகவிருந்தவர்தான் இன்று ஜனாதிபதி.

இதன்போது ஜே.வி.பி. சார்பாக அரசாங்கத்திடம் பிரச்சினைக்கான தீர்வு கேட்டுச் சென்றபோது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் வட மாகாணத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமென்று கருதமுடியாது என்று கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் தலைவர் சுகுதோழர் கருத்துத் தெரிவிக்கையில்,

(04 ஆம் பக்கம் பார்க்க)

# இருபது தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டம்



ஆந்திராவில் 20 தமிழர்களை ஆந்திரப் பொலிஸார் படுகொலை செய்ததைக் கண்டித்து தமிழக தலைமைச் செயலகம் முன்னிலையில் தமிழக அமைப்புக்கள் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி முற்றுகைப் போராட்டம் ஒன்றினை நடாத்தின. 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

இப்போராட்டத்தில் சி.பி. எம்.எல். மக்கள் விடுதலை இயக்கம், திராவிடர் விடுதலைக்கழகம், இளந்தமிழகம் இயக்கம், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், மனித நேய மக்கள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி, காஞ்சி மக்கள் மன்றம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தொழிலாளர் சீரமைப்பு இயக்கம், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம் என்பன கலந்துகொண்டன.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் வே.பாரதி இப்போராட்டம் தொடர்பாக தமிழக அரசிற்கும், ஆந்திர அரசிற்கும், இந்திய அரசிற்கும் கோரிக்கைகளை முன்வைத்தார். அக்கோரிக்கைகளில் பின்வருவன அடங்கியிருந்தன.

**தமிழக அரசே!**

1) இருபது தமிழர் படுகொலையில் ஏழு பேர் தமிழக எல்லைக்குள் இருந்துதான் ஆந்திர காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளதால் தமிழக அரசு சார்பில் ஆள் கடத்தல், கொலை ஆகிய பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்க. மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்ய நீதிமன்றத்தில் உடனடியாக முறையிடுக.

2) இது குறித்து இந்திய அரசிடம் சி.பி.ஐ விசாரணையைக் கோருக.

3) தமிழக அரசு சார்பில் வழக்குரைஞர்கள், உயரதிகாரிகள் கொண்ட குழு ஆந்திரச் சிறைகளில் அடைபட்டுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களின் நிலையையும், அவர்கள் பற்றிய முழு விவரங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை ஒன்றை வெளியிடுக. இது தொடர்பாக சிறைகளில் வாடும் தமிழர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு ஆந்திர அரசை வலியுறுத்துக.

4) செம்மரம் வெட்டுவதற்கென்று அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் போனவர்கள் குறித்து வழக்குப் பதிவு செய்து மேல்நடவடிக்கை எடுத்திடுக.

5) இருபது தமிழர் படுகொலை தொடர்பாக ஆந்திர அரசைக் கண்டித்தும், இது தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுக.

6) தமிழகத்தில் வாழ வழியற்று கூலிக்கு மரம் வெட்ட மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் நிலைக்குத் தள்ளப்படாதவாறு வடதமிழ்நாட்டு பழங்குடியினர் உள்ளிட்ட அடித்தட்டு மக்களின் வாழ்வைச் சீர்செய்ய சிறப்புத் திட்டங்கள் வகுத்து உடனடியாக நடைமுறைப்படுத்துக.

**ஆந்திர அரசே!**

1) சென்ற ஏப்ரல் 7 ஆம் நாள் திருப்பதி வனப்பகுதியில் மோதல் சாவு எனும் பெயரில் இருபது தமிழர்களைப் படுகொலை செய்த ஆந்திரச் சிறப்புக் காவல் படையினர் அனைவர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்து அவர்களைச் சிறையிலடைத்திடுக. மேற்படி வழக்கின் புலனாய்வை சி.பி.ஐ வசம் ஒப்படைத்திடுக.

2) செம்மரம் வெட்டிய குற்றச்சாட்டுகளின் பேரில் ஆந்திரச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்க.

3) செம்மரக் கடத்தலில் ஈடுபட்டுவரும் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்திடுக.

**இந்திய அரசே!**

1) இருபது தமிழர் படுகொலை தொடர்பாக ஆந்திர அரசுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும். இக்கொலை குறித்து சி.பி.ஐ புலனாய்வுக்கு உடனே ஆணையிடுக.

2) செம்மரக் கடத்தல் குறித்தும் இது தொடர்பாக நடந்துள்ள மோதல் கொலைகள் குறித்தும் பொறுப்பில் உள்ள உச்சநீதி மன்ற நீதிபதியைக் கொண்டு முழுமையான நீதி விசாரணை நடத்துக.

3) இந்திய அளவில் மோதல், கொலைகள் தொடர்பான தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் வெள்ளை அறிக்கை வெளியிடுக.

4) உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றம், தேசிய மனித உரிமை ஆணையம் ஆகியவை பிறப்பித்துள்ள ஆணைகளுக்கு இணங்க மோதல், கொலைகளைத் தடுக்கவும் தண்டிக்கவும் ஒரு தனிச் சட்டமியற்றுக.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருமலை நகராட்சிமன்றத் தவிசாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் - உருவப்பொம்மையும் எரிப்பு



திருகோணமலை நகராட்சி மன்றத்தில்பணியாற்றும்ஊழியர்களுக்கான பதவியுயர்வு வழங்காமை, சுகாதார ஊழியர்கள் நியமனத்தில் முறைகேடு, உறவினர்களை பணிக்கு அமர்த்துதல், தன்னிச்சையாகச் செயற்படுதல் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகராட்சி மன்ற தவிசாளர் கந்தசாமி செல்வராசா ஈடுபட்டு வருவதைக் கண்டித்து திருகோணமலை நகராட்சி மன்ற ஊழியர்கள் இரண்டு நாள் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தவிசாளரின் உருவப் பொம்மையையும் எரித்துள்ளனர்.

கடந்தபுதன்கிழமை(22.04.2015) காலை 9 மணிக்கு நீதிமன்ற வீதியிலிருந்து ஆரம்பமான குறித்த போராட்டம் மரத்தடி சந்தி, விகாரை வீதி ஊடாக திருகோணமலை ஆளுநர் அலுவலகம் சென்றடைந்தது.

ஆளுநர் அலுவலகத்திற்கு முன் ஒன்றுகூடிய 150 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நகராட்சி மன்ற தவிசாளருக்கு எதிராக கோசங்களை எழுப்பியதுடன் 'நகரசபை சொத்துக்களை சூறையாடும் தலைவர் மக்களுக்குத் தேவையா, உழைப்பவர்கள் தெருவில் உறவினர்கள் அலுவலகத்தில், 75 வருடம் நகரசபை காணியில் வாழும் மக்களுக்கு சோலைவரி அறவிடாதது ஏன்' போன்ற பதாதைகளை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டனர்.

இதன்போது தவிசாளர் செல்வராசாவின் உருவப் பொம்மையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களினால் ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பு எரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அடுத்த நாளான வியாழக் கிழமையும் திருமலை நகர சபை ஊழியர்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தை மேற்க் கொண்டு அன்றைய தினமே நிறைவுக்கு கொண்டுவந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற தொழிலாளர் சங்கத் தலைவர் கண்ணன் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை நகராட்சி மன்ற தவிசாளர் ஏதேச்சாதிகாரமாக செயற்பட்டு ஊழியர்கள் நலன் தொடர்பில் மாறாக செயற்பட்டு வருகின்றார். பணியாளர்களை காரணமின்றி திடீர் இடமாற்றம் மேற்கொள்ளுதல், நகர சுத்திகரிப்பிற்கு மேலதிக ஊழியர்கள் தேவையாகவுள்ள நிலையில் உரிய முறையில் விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாது கடந்த கால தேர்தல்களில் அவருடைய வெற்றிக்காக பிரச்சாரம் மேற்கொண்டவர்களை அலுவலக பணிக்கு அமர்த்துதல் அத்துடன் நகராட்சி அலுவலக பணிக்கு தமது உறவினர்களை இணைத்துக்கொள்ளுதல்.

மேலும் சுகாதாரத் தொண்டர்களின் நியமனங்களில் தமது உறவினர்களை இணைத்துக்கொள்ளுதல், ஊழியர்களுக்கான விடுமுறைகளை வழங்காது இழுத்தடித்து வருதல், நோய் விடுமுறைகளிலும் வலுக்கட்டாயமாக ஊழியர்களை பணிக்கு அழைத்தல், துப்புரவுத் தொழிலாளர்களுக்கான சுகாதார முறைப்படியான உபகரணங்களும் வழங்காமல் இருத்தல் போன்ற செயற்பாடுகளில் தவிசாளர் ஈடுபட்டு வருகிறார் - எனத் தெரிவித்தார்.

திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் கோகுல்ராஜ் தவிசாளரின் செயற்பாடு தொடர்பில் தெரிவித்ததாவது,

திருகோணமலை நகராட்சி மன்ற தவிசாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டு முடிவை எடுக்கின்றார். நகராட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளையோ, முடிவுகளையோ அவர் பெற்றுக்கொள்வதில்லை.

இவருடைய இத்தகைய தன்னிச்சையான முடிவுகளினால் உறுப்பினர்களாகிய நாம் மட்டும் பாதிக்கப்படாமல் நகராட்சி மன்ற ஊழியர்களும் வாக்களித்த மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக நகராட்சி மன்ற அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு முறையில் எவ்வித அறிவிப்புகளோ விண்ணப்பங்களோ விடுக்கப்படாமல் தவிசாளர் தன்னுடைய உறவினர்களையும் தமக்குச் சார்பானவர்களையும் பணிக்கு அமர்த்தி வருகின்றார்.

அத்துடன் நகரசபையில் துப்புரவுப் பணியாளர்களாக பணியாற்றும் ஊழியர்கள், 75 வருடமாக வாழ்ந்து வரும்



நகராட்சிக்குச் சொந்தமான காணியை உரியவர்களுக்கு பங்கிட்டு வழங்காது இந்த மக்கள் சோலை வரியை கட்டுவதற்கும் தடைபோட்டு வருகின்றார்.

இத்தகைய நிலையில் குறித்த தவிசாளரின் செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தி வருவதுடன் வாக்களித்த எம் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவுள்ளது எனத் தெரிவித்தார். (அ)

## தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயாட்சி நிலை உருவாக வேண்டும்

**அ. இ.அ. பொது ஊழியர் சங்கம்**

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயாட்சி நிலை உருவாக வேண்டும். இதுவே எமது முதன்மைக் கோரிக்கையாகும் என்பதை வலியுறுத்தி கல்முனையில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமும் அதன் இணை நிறுவனங்களும் இவ்வாண்டிற்கான மேதின நிகழ்வை கல்முனையில் நிகழ்த்தவுள்ளது.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை சந்தியிலிருந்து கல்முனை வை. எம். சி. ஏ மண்டபம் வரை மே தின ஊர்வலம் இடம்பெற்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும். ஊர்வலம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

குறித்த தீர்மானங்களில், வடக்கு கிழக்கில் பொதுமக்களின் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அகற்ற வேண்டும். போர்ச் சூழல் நிலவிய காலத்திலும் அதற்குப் பின்னர் ஒட்டுக் குழுக்களினால் பிடிக்கப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்வதிலுள்ள இழுபறிநிலையை நீக்கி தமிழ் தேசியத்தின்பால் அக்கறை கொண்ட அனைத்துகட்சித்தலைமைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள் மீண்டும் உள்வாங்கப்பட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இக் கூட்டத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், பிரமுகர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், வடகிழக்கு ஊடகவியலாளர்கள், மற்றும் பொது மக்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வு ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# பாரதிபுர கிராமம் காடையர்களினால் சூறையாடப்பட்ட 9 வது ஆண்டு நினைவுகூரல்



திருகோணமலை பாரதிபுர கிராமத்திற்குள் இராணுவ ஒத்துழைப்புடன் காடையர்கள் 2006 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 21 ஆம் திகதி கிராமத்தை எரியூட்டி தமிழ் மக்களின் உடைமைகள் களவாடப்பட்டு பெண்களை இழிவுபடுத்தி இரண்டு பிள்ளையின் தந்தையான எஸ். சந்திரசேகரம் என்பவரை வெட்டிக் கொடூரமாகக் கொன்ற 9 ஆவது வருட நினைவு நாள் கடந்த செவ்வாய்க்கிழமை (21.04.2015) மாலை 3.30 மணியளவில் பாரதிபுரத்தில் பாதிக்கப்பட்ட மக்களால் ஒன்றிணைந்து நினைவுகூரப்பட்டது.

குறித்த நினைவு நிகழ்வு பாரதிபுரத்திலுள்ள கிராம அபிவிருத்தி சங்கம், பாரதி விதவைகள் நலன்புரிச் சங்கம் உட்பட இணைந்து கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பாஸ்கரன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாலை முரசு பத்திரிகை ஆசிரியரும் திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமையத்தின் செயற்பாட்டாளருமான கண்ணன், மனித உரிமை செயற்பாட்டாளர் பிலிப், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் இராஜக்கோன் கரிகரன் உட்பட பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

காடையர்களால் சூறையாடல் மேற்கொள்ளப்பட்டபோது கொல்லப்பட்ட இரு பிள்ளைகளின் தந்தையான சந்திரசேகரம் என்பவரின் மனைவிக்கு வாழ்வாதார உதவியாக மலைமுரசு ஆசிரியர் கண்ணன் அவர்களினால் தையல் இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டது.

அத்துடன் சந்திரசேகரத்தின் இரண்டு பிள்ளைகளிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் கரிகரனால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மூதூர் இந்துகுருமார் சங்கத்தின் தலைவரும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவருமான பாஸ்கரன் குருக்கள் உரையாற்றியதாவது,

கடந்த காலத்தில் ஆட்சி செய்த அரசாங்கம் முதல் இன்று வரையுள்ள அரசும் இது வரைக்கும் பாதிக்கப்பட்ட பாரதிபுர மக்களுக்கான நஷ்டஈடுகளோ வாழ்வாதார உதவிகளையோ வழங்கவில்லை.

பாரதிபுரம் கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் 132 பேர் வரையுள்ளனர். இவர்களுக்கு புதிதாக வந்த அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் எவ்விதமான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை.

மேலும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள் கூட இதுவரை எவ்விதமான வாழ்வாதார உதவிகளையும் வழங்கவில்லை.

இந்த நிலையில் தற்போதுள்ள அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (அ)



# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

தந்தை செல்வாவிற்கு செம்மணி படுகொலையாளி சந்திரிகா மூலம் அஞ்சலி செலுத்தியிருக்குது தமிழரசுக்கட்சி. நல்ல காலம் அந்தாள் இப்ப உயிரோட இல்லை. இருந்திருந்தா இரத்தக்கண்ணீர் வடிச்சிருக்கும். அதுக்கு விளக்கம் வேறை அளிச்சிருக்கினம். போரிலை வென்றாலும் அவை சமாதானத்திலை வெல்ல இல்லையாம். சமாதானத்திற்காக யுத்தம் செய்த அம்மணியெல்லோ.அவா சொன்ன சரியாகத்தான் இருக்கும்.

புதுசா வரப்போகின்ற தேர்தல் நடைமுறைகளின் மூலம் பின்கதவு எம்பி தனது கதிரைக்கு உத்தரவாதம் பெற்றிருக்கின்றாராம். அதாவது இனி விருப்பு வாக்கு கணக்கில்லையாம். யாரை கட்சி விரும்புதோ அவர் கடைசியில இருந்தாலும் அவருக்குத்தான் பதவியாம். இதன் மூலம் ஆள் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடவும் சுதந்திர தினத்திற்கு போய் கொண்டாடவும் வழிவகை செய்திருக்கின்றதாக கேள்வி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்காரர் கிழக்கில கால்வைச்சதும் கொஞ்சப்பேர் கலக்கத்தில இருக்கின்றதாக கேள்வி. அதுவும் சனங்கள் அவையளின்ர கூட்டங்களிற்கு திரண்டு போறதும் ஆதரவு தாறதும் தாங்களாகவே முன்வந்து கட்சி பணியாற்றிறதும் கலக்கத்தை தோற்றுவித்திருக்கின்றதாகக் கேள்வி. அதனால சம்பூர் பகுதியில முக்கிய செயற்பாட்டாளர் வீட்டின் மீது எடுபிடிகள் சிலதைக் கொண்டு கல்லடிச்சிருக்கின்றதாகவும் கேள்வி. கிழக்கு சனத்தை எல்லோரும் கைவிட்டு அரசியல் செய்ய புறப்பட்டிருக்கின்ற நிலையினில் இணைந்த வடகிழக்கு தான் தமிழற்ற தாயகமெண்டதை ஆர் உரத்து சொன்னாலும் கைகொடுக்க வேண்டியது காலத்தின் கடமை பாருங்கோ.

கொழும்பில குட்டை குழம்பி நாற்றமெடுக்குது பாருங்கோ. மகிந்த இராசாவின்ர ஆதரவு கும்பல் நடத்தின ஆர்ப்பாட்டத்தில பிடிச்சிருந்த கொடிகளில சிறுபான்மையினத்திற்கான அங்கீகாரமில்லையெண்டு கண்டுபிடிக்க அது அரசின்ர சதியெண்டு மகிந்த ராசா பதிலளிக்க கூத்துக்கு பஞ்சமில்லை பாருங்கோ. ரணிலின்ர இராசி பாருங்கோ. முன்னுக்கு ஆரிருந்தாலும் துண்டு துண்டாக உடைச்சுவிடுகின்றதில அந்த ஆள் விண்ணன். பாலா அண்ணன் சொன்ன மாதிரி உவன் படுநரியனெண்டது வெளிச்சுக்கொண்டு வருகுது பாருங்கோ.

தியேட்டர்கார தாடியற்ற அண்மைக்கால அறிக்கைகளை பார்த்தால் அந்த ஆள் சங்கரியரை வென்றுபோடும் போல. குறிப்பாக கடந்த காலங்களில் நடந்தது செய்ததுகள் எதுவும் தெரியாத மாதிரி அந்த ஆளும் அவற்றை ஆட்களும் சீன் காட்டிக்கொண்டிருக்கினம். சனத்திற்கு ஞாபக மறதியிருக்குதெண்டது சரிதான். ஆனால் இவை செய்ததை மறக்கிறது மாதிரியே இவை செய்தவை. எத்தனை கடத்தல், கப்பமெண்டு சனம் திரண்டு வாக்குமூலமளித்திருக்குது. புண்ணியம் தேடி காசிக்கு போனாலும் அது போகாது பாருங்கோ

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)


(யாழ்.சர்வதேச...)

வடமாகாண சபை நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் முதலமைச்சர் விக் னேஸ்வரன் தனக்கு எதுவும் தெரியாது என்கிறார். நிபுணர் குழுவின் அறிக்கை வெளிப்படையாக முழுவதும் வெளியிடப் படவில்லை எனவும் சாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சமூக ஆர்வலர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபையே நிபுணர் குழுவை நியமித்தது. நிபுணர் குழு வடமாகாண சபைக்கு அறிக்கையைக் கையளித்து அவர்கள் வெளியிட்டிருக்க வேண்டும். வடமாகாண சபை இந்த விடயத்தில் நழுவல் போக்கில் செயற்படுகின்றது என்றார்.


இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றற ஆசிரியரொருவர் தற்போது வடமாகாணத்தில் 200 மில்லியன் ரூபா வரை மாதாந்தம் குடிநீர் விற்பனை இடம்பெறுகிறது எனச்சுட்டிக் காட்டினார்.

# அமுதவாக்கு



ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கையின் ஆட்சி நிறுவனக் கட்டமைப்பில் எதேச்சாதிகாரப் போக்கை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றது. எனினும். அது ராஜபக்ஷவின் ஒரு தசாப்த கால ஆட்சியிலேயே உச்சநிலைக்குச் சென்றது.

**வீரகத்தி-தனபாலசிங்கம்**
**பிரதம ஆசிரியர் - தினக்குரல், சமகாலம்**



நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே நான் வாதாடி வந்திருக்கின்றேன். ஆனால் இன்றைய சூழ்நிலையில் அதனை முற்றாக ஒழித்தல் சாத்தியமில்லை. ஆயினும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்கு நான் தொடர்ந்தும் பாடுபடுவேன்.

**கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன**
**ஜனாதிபதி சட்டத்தரணி**



நாம் வெறுக்கிறவர்களுக்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை என்றால் நாம் அந்தச் சுதந்திரத்தில் எந்த வகையிலும் நம்பிக்கையில்லாதவர்கள் என்பதே அர்த்தம்.

**நோம்ஷோம்ஸ்கி**




நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி பலவீனப்படுத்தப்பட்டால் அது பெரும் ஆபத்தாக முடியும் என்று சிறிசேன நினைக்கிறார். அவ்வாறு செய்தால் மஹிந்த ராஜபக்ஷ தீவிர அரசியலுக்குத் திரும்ப வந்து பாராளுமன்றத்திற்கு வருவதற்கும் கூட வழிவகுப்பதாக அமைந்துவிடக் கூடும்.

**பேராசிரியர் கீத பொன்கலன்**




உண்மையில் ராஜபக்ஷவின் பெரிய வலிமையாக இருந்தது ஐ.தே.க. வின் பலவீனமேயாகும். 1994 இல் கண்ட சரிவிலிருந்து அக்கட்சி முற்றாக மீள்வது கடினம். அது தனித்து ஆட்சியைப் பிடிக்கும். வாய்ப்பு அறவே இல்லாமல் போய்விட்டது.

**பேராசிரியர் சிவசேகரம்.**




நேதாஜியின் மரணத்துடன் தொடர்புடைய ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் இதுவரையில் மறுத்துவருவதனால் அந்த மர்மம் தொடர்ந்து நிலைக்கிறது. மேற்கு வங்காளத்தில் உள்ளவர்கள் நேதாஜியின் மரணம் பற்றிய கதை சரியானதல்ல என்றே நம்புகிறார்கள்.

**எம்.பி. வித்தியாதரன்**
**இந்தியப் பத்திரிகையாளர்**



இயக்கங்கள் தங்களை அரசியல் கட்சிகளாக மாற்றிக் கொள்ளும் போது அவை தங்களின் மூல முதல் வடிவத்தை இழந்துவிடுகின்றன. கூட்டுத்தலைமைத்துவப் பண்பு பின்தள்ளப்பட்டு தனிமனிதர் தன்னை முனைப்புறுத்துகின்ற போக்கு வந்துவிடுகின்றது. அதி காரம் ஒருவரின் கையில் குவிக்கப்பட்டு விடுகிறது.

**குல்திப்நாயர்**
**இந்திய ஆய்வாளர்**



அணுவாயுத பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒரு நாடான ஈரான் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாத அணு வாயுத நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட-கொரியா ஆகியவற்றுடன் இணைந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய விரிவான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டுமென்று 59 வீதமான அமெரிக்கர்கள் விரும்புகின்றனர்.

**மிச்சேல் ஜான்சென்**
**ஜரிஸ்டைம்ஸ் பத்திரிகையின் மத்திய கிழக்கு நிருபர்**

சவூதி அரேபியா நேரடி இராணுவத் தலையீட்டை செய்திருப்பதையடுத்து ஜேர்மன் இப்போது ஈரானுக்கும் சவூதிக்குமிடையிலான மறைமுக பிராந்திய யுத்தம் ஒன்றிற்குள் இழுக்கப்பட்டுள்ளது.

**முஹமட்பாஸி**
**லெபனானிய அமெரிக்க பத்திரிகையாளர்**

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# மாற்றமொன்றுக்காக தமிழ் மக்கள் தயாராக வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை முன்னோக்கி நகர்த்தும் தகைமையை இழந்துவிட்டது. அது தமிழ்த் தேசிய அரசியலை சிங்கள பேரினவாதத் தினுள் கரைத்து தமிழ்த் தேசத்தை மீள முடியாத அழிவுக்குள் தள்ளிச் செல்கின்றது. இதனை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும்.

இதற்கான ஒரேயொரு வழி மாற்று அரசியல் இயக்கமொன்றைக் கட்டி வளர்ப்பதுதான். தற்போது களத்தில் மாற்று அரசியல் இயக்கமாக செயற்படுவது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே.

இக்கட்சி கடந்த 6 வருடங்களாக தனது கொள்கையின் நேர்மையை வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. 2010 பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்கள், 2015 ஜனாதிபதித் தேர்தல், சர்வதேச விசாரணைக்கான முன்னெடுப்பு போன்றவற்றில் தனது கொள்கையின் நேர்மையை வெளிப்படுத்த அது தவறவில்லை.

அமைப்புப் பொறிமுறை வேலைத்திட்டங்கள் என்பவற்றில் அதனிடம் குறை-பாடுகள் இருக்கலாம். அக்குறைபாடுகளைத் திருத்தி செம்மைப்படுத்துவதற்கான பகீரத முயற்சிகளில் அவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டே வருகின்றார்கள்.

பாராளுமன்றத் தேர்தல் விரைவில் வரலாம் என எதிர்பார்க்கக் கூடிய சூழலில் தமிழ் மக்கள் இந்தத் தடவை மாற்றம் ஒன்றுக்காக வாக்களிக்கத் தயங்கக்கூடாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1வது தமிழ்த் தேசிய அரசியல் இன்று தற்பாதுகாப்பு நிலையில் உள்ளது. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் அதற்குப் பின்னால் நிற்கும் இந்திய மேற்குலக சக்திகளாலும் பின்னோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த தமிழ் அரசியலில் ஒரு அதிகார சமநிலையை உருவாக்கவேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற மாற்று அரசியல் தலைமையை ஆதரிப்பதன் மூலமே இந்த அதிகார சமநிலையை உருவாக்க முடியும்.

2வது தமிழ்த் தேசிய அரசியலை முன்னோக்கி நகர்த்திச் செல்ல வேண்டும். அதற்கு இலக்கு, கொள்கை என்பவற்றில் உறுதிப்பாடு அவசியம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி "இரு தேசங்கள் ஒரு நாடு" என தனது இலக்கினைத் தெளிவாக முன்வைத்ததுடன் அதனை அடைவதற்கான வலுவான கொள்கைகளையும் கொண்டிருக்கின்றது.

தாயகத்தில் பலமான நிலையில் நின்றுகொண்டு புவிசார் அரசியலை உச்சவகையில் பயன்படுத்துவதன் மூலம் இலக்கினை அடையலாம் என்றும் கூறுவதில் நிறையவே சாத்தியப்பாடுகள் உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துவதன் மூலமே தமிழ் மக்கள் தமது இலக்கினை நோக்கி முன்னேற முடியும்.

3 ஆவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிரக்ஞை பூர்வ அரசியலை முன்னெடுப்பதற்குப் பதிலாக சுகபோக அரசியலை முன்னெடுத்து வருகின்றது. சுகபோக அரசியல் செய்யவிரும்புவோர் அதிகளவாகக் கூட்டமைப்பில் இணைந்து வருகின்றனர். அவ்வாறான இயல்பு அம்பாறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை காணப்படுகின்றது.

கட்சிக்குள் சுகபோக அரசியல்காரர்களே மேலோங்கிய நிலையில் உள்ளனர். பிரக்ஞைபூர்வ அரசியல் சக்திகள் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அயோக்கியர்களைச் சகித்துக் கொள்ளலாம் படு அயோக்கியர்களை எப்படி சகித்துக் கொள்வது என வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் உண்மையான தமிழ்த் தேசிய சக்திகள் செயற்படுவதற்கு ஒரு அரசியல் களம் தேவை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்தவதன் மூலமே அந்தக் களத்தை உருவாக்க முடியும். ஆயுதப் போராட்டம் முடிவடைந்த சூழலில் இந்தப் பலப்படுத்தலை மக்களின் வாக்குப் பலத்தினாலேயே ஏற்படுத்த முடியம்.

மாற்று அரசியல் இயக்கம் வளர்ந்தால் தமிழ் மக்களின் ஐக்கியம் உடைந்துவிடும் என்ற ஒருவாதம் முன்வைக்கப்படுகின்றது. இலக்கு, கொள்கைகளைக் கொண்ட ஐக்கியமே முக்கியமானது. அவை இல்லாத ஐக்கியத்தினால் எந்தப் பயனும் இல்லை. கூட்டமைப்பிடம் உள்ள ஐக்கியம் என்பது வெறும் பதவிகளுக்கான ஐக்கியமே தவிர கொள்கைக்கான ஐக்கியமல்ல.

இன்றைய தமிழர் அரசியலில் சுகபோக சக்திகள் பலமான நிலையிலும் பிரக்ஞைபூர்வ சக்திகள் பலவீனமான நிலையிலும் உள்ளனர். இந்நிலையை மாற்றாமல் தமிழ்த் தேசிய அரசியலின் தற்பாதுகாப்பு நிலையினைக் கூட பேண முடியாது.

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லும் கொள்கையான "இரு தேசங்கள் ஒரு நாடு" என்பது ஒருபோதும் தோல்வியடைக் கூடாது. ஏனெனில் தமிழ் தேசத்தின் இருப்பும், தமிழ் மக்களின் வளமான வாழ்வும், இருப்பும் அதில்தான் தங்கியுள்ளது.

# நட்டமெனக் கூறும் பெருந்தோட்டக் கம்பனிகள் வெளியேறுமா

அருட்தந்தை மா.சத்திவேல்
மலையக சமூக ஆய்வு மையம்




கம்பனிகள் நட்டமடைவதாயின் நட்டத்தில் இயங்கும் கம்பனிகள் பெருந்தோட்டத் தொழிலைவிட்டு வெளியேறலாமே. ஏன் வெளியேறவில்லை எனக் கேட்கின்றார் மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை சத்திவேல். முதலாளிமார் சம்மேளனம் ஒரு ரூபாவேனும் அதிகரிக்க முடியாது எனக் கூறுவது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள மற்றும் நல விடயங்கள் தொடர்பில் இவ்வாண்டு செய்யப்பட வேண்டிய ஒப்பந்தம் காலம் தாழ்த்திய போதும் எப்போது செய்யப்படுமெனத் தெரியாத நிலையில் முதலாளிமார் சம்மேளனம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு ரூபா வேனும் அதிகரிக்க முடியாது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத பொறுப்பற்ற அடாவடித்தனமாகும். இதனை மலையக சமூக ஆய்வு மையம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

**"மலையக அரசியல் கட்சிகளும், அவற்றிற்கு துணை நிற்கும் தொழிற்சங்கங்களும் தமது மலட்டு அரசியலை கைவிட்டு முதலாளித்துவத்தின் எடுபிடிகளாக நின்று தொழிலாளர்களை ஒடுக்கும் வன்புணர்ச்சியில் ஈடுபடாது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி சுதந்திர வாழ்வை அடிப்படையாகக் கொண்டு செயற்பட சமூக சக்திகளோடு கை கோர்க்க வேண்டும்"**

ஆட்சியிலிருக்கும் புதிய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு மலையக மக்கள், குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தலைவர்கள் என்று கூறிக் கொள்வோரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்படாது தமது வாக்குகளை அளித்தனர். புதிய அரசாங்கம் தமக்கு வாக்களித்த அரசாங்க ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக சம்பள அதிகரிப்பைச் செய்துள்ளது. தனியார் துறையினருக்கும் அதிகரிக்கவே சொல்லியுள்ளது. ஆனால், முதலாளிமார் சம்மேளனம் ஒரு ரூபா வேனும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்க முடியாது என்பது மைத்திரிக்கு வாக்களித்தமைக்கு பழிவாங்கவா? எனும் வினா எழுகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்றால் தொழிலாளர்கள் வேறு வழியின்றி உழைப்பிற்காக தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு வெளியேறினால் 'தேசிய பௌதிகவியல் திட்டம் - 2030 (National Physical Plan – 2030)' எனும் மஹிந்த சிந்தனையை இலகுவில் நடைமுறைப்படுத்தலாம். வேறு தேவைகளுக்காகவும் மலையக நிலங்களை கையகப்படுத்தப்படுவதோடு, குறிப்பாக புதிய குடியேற்றங்களையும் உருவாக்கலாம். இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்படும் கூட்டுசதிமுயற்சிகளில் சம்பளம் அதிகரிக்க முடியாது என்பதும் ஒன்று. இது பெருந்தோட்டத் தொழிலாளர்களைச் சுயமாக இடம்பெயர வைத்து மேற்கொள்ளப்படவிருக்கும் இன அழிப்புச் செயற்பாட்டுக்கு முன்னோடி எனலாம்.

இன்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பல்வேறு விதமான கடன் சுமையோடு வாழ்விற்காகத் தினமும் போராடுகின்றனர். அரசாங்கம் அறிவித்த ரூபா 2,500/= சம்பள அதிகரிப்பும் இல்லை. நாட் சம்பள அதிகரிப்பும் இல்லையாயின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழிலாளர்கள் என்பதற்காகவும், தமிழர்கள் என்பதற்காகவும் பொருளாதார ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றே நாம் கருதுகின்றோம்.


புதிதாக ஒப்பந்தம் செய்யப்படும் காலத்தில் மட்டுமே கம்பனிகளின் நட்டம் தொடர்பாக முதலாளிமார் சம்மேளனம் கூறுகிறது. இலாபம் அடையும் காலத்தில் இலாபத்தை மக்களுக்கு கூறாதது ஏன்? இலாபம் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதில்லையே ஏன்?

கம்பனிகள் நட்டமடைவதாயின் நிர்வாகச் சீர்கேடு, பயிற்சி பெற்ற நிர்வாகிகள், உத்தியோகஸ்தர்கள் இன்மை, மீள் நடுகை இன்மை, முறையான பராமரிப்பின்மை, சுகபோக நிர்வாக செலவீனம் என்பவற்றோடு ஏல விற்பனை எனும் சதியினையும் குறிப்பிடலாம். இவற்றுக்கு எந்த வகையிலும் தொழிலாளர்கள் பொறுப்பில்லை. மேலும், கம்பனிகள் நட்டமடைவதாயின் நட்டத்தில் இயங்கும் வருவாய் தொழிலை விட்டு வெளியேறலாமே. இவர்கள் ஏன் வெளியேறுவதில்லை? இவர்கள் சமூக சேவையா செய்கின்றார்கள்? எனவே,

(23 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவிற்கான அழைப்பு சர்வதேச விசாரணையைப் பலவீனப்படுத்தவா?

-முத்துக்குமார்-




தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை நிகழ்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தடவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவினை அழைத்திருக்கின்றது. அவர் "யுத்தத்தின் முடிவு சமாதானமாகாது" என்ற தலைப்பில் தனது நினைவுப் பேருரையை ஆற்றியிருக்கின்றார்.

தந்தை செல்வா தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு காலகட்டத்தை நகர்த்திய பெருமைக்குரியவர். 1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்றுவித்ததன் மூலம் தமிழ் இன அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் என்ற கட்டத்திற்கு வளர்த்துச் சென்றார். மக்களை இணைத்த வெகுஜனப் போராட்டம் என்ற அரசியல் அணுகுமுறையினை ஆரம்பித்து வைத்தார்.

தந்தை செல்வாவினது இந்தப் பண்புகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டபோது அவரது அரசியல் வாரிசாக பிரபாகரன் எழுச்சியடைந்தார். கொள்கை, நேர்மை, விலைபோகாமை என்ற பண்புகளைக் கொண்ட பிரபாகரன் அதற்கு மேலாகச் சென்று தியாகம் நிறைந்த போராட்டத்தை வளர்த்தெடுத்தார். இதனூடாக தமிழ்த் தேசிய அரசியலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றார். பிரபாகரன் தந்தை செல்வாவின் நிழலில் நின்று அரசியல் செய்தார். இன்று அரசியல் செய்பவர்கள் அனைவரும் பிரபாகரன் வழங்கிய அடித்தளத்தில் நின்றே அரசியல் செய்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான விமர்சனங்கள் அனைத்தும் பிரபாகரன் தந்த அடித்தளத்தில் நின்று கொண்டு தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல் செய்வது தொடர்பாகவே தோற்றம் பெற்றன.

இங்கே கவனிக்க வேண்டிய முக்கியவிடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலூன்றி நிற்பது பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில். ஆனால் 2009ற்கு முன்னர் புலிகள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வை வலியுறுத்த சம்பந்தனோ



> **தந்தை செல்வாவினது இந்தப் பண்புகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டபோது அவரது அரசியல் வாரிசாக பிரபாகரன் எழுச்சியடைந்தார். கொள்கை, நேர்மை, விலைபோகாமை என்ற பண்புகளைக் கொண்ட பிரபாகரன் அதற்கு மேலாகச் சென்று தியாகம் நிறைந்த போராட்டத்தை வளர்த்தெடுத்தார். இதனூடாக தமிழ்த் தேசிய அரசியலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றார்.**

அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதன் மூலம் முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு துணை நின்றார். புலிகளை அழித்த பின்னர் பிரபாகரன் உருவாக்கிய அடித்தளத்தில் நின்று இன்று செய்வதோ தமிழ்த் தேசியத்திற்கு எதிரான அரசியல்.

இந்த தமிழ்த் தேசிய நீக்க அரசியலின் ஒரு வேலைத் திட்டம்தான் இன அழிப்புக் குற்றவாளிகளுக்கு பாவ மன்னிப்பு வழங்குவது. கூட்டமைப்பினர் முதலில் இன அழிப்புக் குற்றவாளியான சரத் பொன்சேகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கினர். 2010 ஜனாதிபதி தேர்தலில் கொத்துக் கொத்தாக தமிழ் மக்களைக் கொலை செய்த சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக கூட்டமைப்பு பிரச்சாரம் செய்தது.

இரண்டாவது நிலையில் இன்னோர் இனப்படுகொலையாளியான ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாவமன்னிப்பு வழங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பு மே தினத்தை நடத்தியதுமல்லாமல் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து சம்பந்தன் யாழ். மண்ணிலேயே சிங்கக் கொடியேற்றினார்.

தற்போது மூன்றாவது பாவ மன்னிப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வழங்கியுள்ளது. அதுவும் தமிழ்த் தேசியத்தின் பிதாமகன் எனக் கருதப்படுகின்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் வழங்கியிருக்கின்றது. இதன் மூலம் தனது துரோகத்தனங்களுக்கு தந்தை செல்வாவையும் பங்காளியாக்கியிருக்கின்றது. வாரிசுகள் தமது தலைவரின் பெயரை பாதுகாக்க வேண்டுமே தவிர அவர் மீது மண் அள்ளிக் கொட்டக்கூடாது. கூட்டமைப்பு மண் அள்ளிக் கொட்டும் வேலையைச் செய்திருக்கின்றது. இன்னும் சிறிது காலத்தில் பாவ மன்னிப்பு வழங்குதல் தொடர்பாக கூட்டமைப்பு கின்னஸ் சாதனை நிகழ்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மைத்திரியை ஆட்சிக்குக் கொண்டு வந்தது போல சந்திரிகாவும் தமிழ் மக்களுக்கு சமஸ்டித்தீர்வு தருவேன் என்று கூறியதனால் 1994 தேர்தலில் தமிழ் மக்கள் அபரிமிதமாக வாக்களித்து ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். சந்திரிகா எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் பெறாத 62.5 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். அவருக்கு அதிக வாக்கு வீதத்தில் வாக்களித்தவர்கள் தமிழ் மக்களே!

ஆனால் சந்திரிகா வெற்றிபெற்றதும் முதன் முதலில் வெளியிட்ட அறிக்கையில் பெரும்பான்மை மக்கள் விரும்பாத அரசியல் தீர்வை தான் முன்வைக்கப் போவதில்லை எனக் கூறியிருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் ஆயுதப் போரின் உக்கிரம் காரணமாகவும் அரசியல் தீர்வுப் பொதி ஒன்றினை முன்வைத்தார்.

ஆனால் அந்தத் தீர்வுப் பொதி மூன்று தடவைகள் வெட்டப்பட்டு வெறும் சக்கைதான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முயற்சிக்கப்பட்டது. அந்தச் சக்கையினையும் நிறைவேற்ற விடாமல் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதி நகலை கிழித்தெறிந்ததும் சந்திரிகா 1957 இல் அவரது தந்தையார் பேரினவாதிகளிடம் சரணடைந்தது போல சரணடைந்தார். தொடர்ந்து அதனைக் கொண்டு செல்லும் துணிவோ, விருப்பமோ அவரிடம் இருக்கவில்லை.

ரணிலுக்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தனர். இலங்கை என்ற அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்கள் ஒரு தேசமாக இணைவதற்கான யோசனைகள் தான் அது. சர்வதேச சமூகமும் அதனை வரவேற்றிருந்தது.

ஒரு நாட்டிற்குள் தீர்வைக் காணக்கூடிய இடைக்காலத் தீர்வு யோசனையை முன்வைப்பார்கள் என்பதனை சற்றும் எதிர்பாராத ரணில் அரசாங்கம் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் சந்திரிகாவிடம் இருந்த பேரினவாத உணர்வு கிளர்ந்தெழுந்தது. அதுவரை காலமும் தாராள முகத்தைக் காட்டிய சந்திரிகா பேரினவாதத்தின் கோரமுகத்தைக் காட்டினார். விளைவு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து முக்கிய அமைச்சுப் பதவிகள் பறிப்பும் தொடர்ந்து பாராளுமன்றக் கலைப்பும் இடம்பெற்றது. புலிகளின் இடைக்கால யோசனைகள் தானாகவே கிடப்புக்குள் சென்றன.

எனவே சந்திரிகா அரசியல் தீர்வு தொடர்பாக தாராளமாக நடந்து கொண்டார், தமிழ்த் தரப்பு அதனை ஒழுங்காகப் பயன்படுத்தவில்லை என சம்பந்தன் கதையளப்பதெல்லாம் சுத்தப் பொய். தயான் ஜயதிலக, குமார் ரூபசிங்க போன்ற சிங்கள புத்திஜீவிகளைப்போல சந்திரிகா, சமாதானம், சமஸ்டி என நிறைய கதையளந்தாலும் இறுதியில் பேரினவாதத்திடமே தஞ்சமடைந்தார்.

இங்கேதான் இப்பத்தியாளர் தொடர்ச்சியாக வலியுறுத்துவது போல சிங்கள சமூக உருவாக்கமும் அதன் வழி சிங்கள அரசுருவாக்கமும் மிகவும் முக்கியமானது. இதன்படி இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது. ஏனையவர்கள் வாழ்ந்துவிட்டுப் போகலாம். ஆனால் உரிமைகள் எதுவும் கேட்கக் கூடாது. இந்த அரசுருவாக்கக் கருத்து நிலையை மீற எந்த சிங்கள



புத்திஜீவியும் எந்த சிங்கள அரசியல்வாதியும் தயாராக இல்லை.

பண்டாரநாயக்கா தொடக்கம் சந்திரிகா ஊடாக, வாசுதேவ நாணயக்கார வரை அரசியல்வாதிகள் தொடர்பாக இது தான் அனுபவம். அதேபோல குமார் ரூபசிங்க தொடக்கம் தயான் ஜயதிலக வரை புத்திஜீவிகள் தொடர்பாகவும் இது தான் அனுபவம். சந்திரிகா போன்ற சிங்களத்தவர்களிடம் விருப்பமும் இல்லை. இயலுமையும் இல்லை என்பதே உண்மை நிலை.

சந்திரிகா பேரினவாதி மட்டுமல்ல இனப்படுகொலையாளியும் கூட, யாழ்ப்பாண இடப்பெயர்வு, நவாலி தேவாலயப் படு

(23 ஆம் பக்கம் பார்க்க)

வணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

கொழும்பில குடுமிபிடிச்சண்டை உச்சம் பெற்றிருக்குது. மேற்குலகின்ர அசீர்வாதத்தோட, இந்தியா ஆட்சிக் கதிரையில இருத்தின மைத்திரி – ரணில் கூட்டு ஆட்டங் காணத் தொடங்கியிருக்குது. ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம், பிரதமருக்கெதிராக தீர்மானமெண்டு மஹிந்த இராசா ஆட்டத்தை தொடங்கியிட்டார். இப்ப தெற்கில அரசியல் பரபரப்பிற்கு பஞ்சமில்லாமல் இருக்கு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை 19 வந்தால் என்ன? 20 வந்தால் என்ன? எல்லாமுமே ஒன்று தான். சனம் இதைப் பற்றி அலட்டிக்கொள்கிற மாதிரியில்லை. வேடிக்கை மட்டும் பார்க்கிறது மாதிரித் தான் இப்ப எங்கடை அரசியல் கிடக்குது. நூறு நாள் வேலைத்திட்டம் முடிஞ்சாச் செண்டு கணக்கு காட்டுகினம். தமிழ் சனத்திற்கு மிச்சமெண்டால் இருக்கிற குழுக்கள் போதாதெண்டு நல்லிணக்கக்




குழுவொன்றை அமைச்சிருக்கினம். இதில யாருக்கு நல்லிணக்கமென்றால் அதற்கு விடை குழுவில இருக்கிறவைக்கே தெரியுமோ தெரியவில்லை. ஆளாளுக்கு கூடிகதைக்கிறதும் பேப்பர்களுக்கு அறிக்கை விடுகிறதும் தான் நல்லிணக்கமோ தெரியவில்லை.

உவையின்ர நூறு நாளில வலி வடக்கில ஆயிரம் ஏக்கரை விடுவிக்கிறதாக சொல்லிச்சினம். விட்டது பாதி, தொட்டது பாதி மாதிரி கிணறை வெளியால விட்டிட்டு, வீட்டோடை வேலிபோட்டு, புதிய காம்ப் போட்டிருக்கிறாங்கள். சில இடங்களில வீட்டை விடாமல் தோட்டக் காணிகளையும், பயன்பாட்டில இருந்திராத தரவைகளையும் விட்டிருக்கிறாங்கள். அந்தா விடுகிறம், இந்தா விடுகிறமெண்ட கதைகளை நம்பி ஓடோடி வந்த குடும்பமொன்று ஒன்றுமில்லாமல் அங்கின இருக்கிற சனசமூக நிலையமென்றில அடைக்கலம் புகுந்திருக்கிது. அதுவும் 16 ஆவது இடப்பெயர்வாக, சொந்த ஊரில முகாம் வாழ்க்கை தமிழ் சனத்தைவிட வேறொருத்தருக்கும் கிடைக்காது.

ஆனால் கூட்டமைப்பில ஒரு சிலரைத் தவிர மற்றைய ஆட்கள் இந்த விசயம் பற்றி ரணில் – மைத்திரி யோட இருக்கிற நல்லிணக்கம் பாதிக் கப்பட்டுப் போடுமென்று கதைக்கிறதில்லையெண்டு கேள்வி. கோவிச்சுக் கொண்டால் பிறகு மேடையில ஏறவோ, பின் கதவால அரசியல் செய்யவோ முடியாது போயிடுமென்றது அவையளிற்கு வடிவாகத்தெரியும். அதனால் தான் ஆளாளுக்கு மௌனம் காப்பதாக சொல்லப்படுகிறது. சிலர் இருக்கினமோ இல்லையோவெண்டது கூட தெரியாது அரசியல் பிழைப்பு நடக்குது.

படைத்தரப்பு விடுவிச்ச வலி. வடக்கு பகுதிகளைப் பார்த்தால் வன்னிக் காடுகள் தான் உங்களுக்கு கண்ணில நிற்கும். அதிலயும் ஏற்கனவே இருக்கிற படைமுகாம்களை சூழ பெருமளவு நிலப் பரப்பை பயன்படுத்தாமலேயே வைத்திருக் கிறாங்கள். அங்கின வளர்ந்திருக்கின்ற ஒவ்வொருமரமும் காட்டுமரங்கள் போல வீடுகளுக்குள்ளேயும், வளவுகளிற்குள்ளேயும் வளர்ந்திருக்குது.

இப்ப அந்த இடத்தில பிரபலமான வியாபாரமெண்டால் விறகுக்கு மரம்வெட்டுறதுதான். அது தான் சனங்களிற்கு மிச்சமாயும் கிடக்குது. ஆனால் குடிக்கிற தண்ணீர் கிணறு முதல் கொண்டு எல்லாத்தையும் புதிசா வேலி போட்டு ஆமி வளைச்சு வைச்சிருக்குது. அதிலயும் அவங்கள் புதிசா நாட்டி வைத்திருக்கிற கொங்கிறீற் தூண்களின்ர கதையைப் பார்த்தால், மிச்சமிருக்கிற இடம் இப்போதைக்கு விடுவிப்பென்ற கதையே இல்லையெண்டதை சொல்லி நிக்குது. சர்வதேசத்தின்ர காதில பூவைக் கிறதில வழமை போலவே இம்முறையும் ரணில் அரசு வெற்றி பெற்றிருக்குது.

எங்கட வடமாகாணசபை இடைக்கிடை கூத்துக்களை அரங்கேற்றுவது எல்லோருக்கும் தெரிஞ்ச விசயம் தான். கடைசியாக வடக்கில நடந்த ஊழல்களை பற்றி விசாரணை செய்ய குழுவொன்றை அமைச்சிருக்கினமாம். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன கதைதான் உது பாருங்கோ.

வடக்கில இருக்கிற உள்ளூராட்சி மன்றங்களில எல்லாமுமே கூட்டமைப்பு வசம் தான் இருக்குது. அதுகளில என்ன நடக்குமெண்டு வெளியாட்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உள்ளுக்குள்ள அவையளே போட்டுப்பிடிச்சுக் கொண்டிருக்கினம். பலதும் வெளிவந்துட்டுது. இன்னும் சிலது வெளியில இந்தா வாறனெண்டு நிக்குது. இந்த சீத்துவத்தில சொந்த ஊத்தையைக் கழுவிற வழியக்காணோம். இவையள் ஊரார் வீட்டு தோம்பினை கிளற வெளிக்கிட்டிருக்கினம்.

ஏற்கனவே யாழ். மாநகர சபையால கட்டப்பட்ட நவீன சந்தை கட்டிட ஊழல், "நெல்சிப்" நிதி ஒதுக்கீட்டின் கீழான வேலைகளில நடந்த பல மில்லியன் ஊழல்களை ஊத்திமூட வைச்ச பெருமை வட மாகாணசபையின்ரை பெரிய தலைகளையே சாரும். யாழ். மாநகரசபையின்ர ஊழல்களை மூடி மறைக்கிறதில பின் கதவு பேச்சுக்கள் பற்றியெல்லாம் கதை அடிபடுகுது.

ஏற்கனவே மாகாணசபை போடுகிற தீர்மானங்களெல்லாம் வெறும் கடதாசிகளில கிடக்குதென்று கிண்டலடிச்சுக் கொண்டு திரியறாங்கள். அதேபோல இவையள் அமைக்கிற விசாரணைக் குழுக்கள் எல்லாம், நடந்த முறைகேடுகளை மூடிமறைக்கிறதாகத்தான் அமையப் போகுதெண்டு சனம் சந்தேகப்படுகுது. காலம் எல்லாவற்றிற்கும் நல்ல பதிலைத் தருமென்று நம்புவோம்.

அதுக்குள்ள கூத்தமைப்பின் பின் கதவு எம்பி, புலிகளை தாங்கள் எப்போதும் ஆதரிக்கவில்லையென்றும், மீள அவை எழும்பினால் சனம் ஆதரிக்காதெண்டும் பேட்டியொன்றை தட்டிவிட்டிருக்கிறார். தேர்தல் கிட்டினால் மாவீரர்கள், தியாகம், தேசியமெண்டு கடைபரப்பி வியாபாரம் செய்யிறதும் இவைதான். பிறகு புலிகளும் போர்க்குற்றம் செய்தவை, அவைக்கும் விசாரணை தேவையெண்டு விஞ்ஞாபனம் விடுகிறதும் இவைதான் பாருங்கோ,

இவங்கடை கூத்துக்கள் ஒருபுறமிருக்க எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கு கிழக்கு எல்லாம் போட்டியிடுமென அறிவிச்சிருக்கிறதுக்கு சனத்திட்ட நல்ல வரவேற்பு பாருங்கோ. வெறுமனே யாழ்ப்பாணம்மெண்டு இருக்காமல் அண்மை நாட்களில அவையள் எடுத்து வாற விஸ்வரூபம் பலரையும் பிரமிப்போட பார்க்க வைத்திருக்குது.

சனத்தின்ரை ஆதரவு அலை அவையள் பக்கம் அடிக்கத் தொடங்கியிருக்குது. அதனால ஆளாளுக்கு அறக்கப் பறக்க கூத்தமைப்பு பக்கம் பறக்கினம். முன்னணிக்கு வாக்களிச்சால், தமிழ் மக்களின்ர வாக்குகள் பிரிந்துபோய் ஐ.தே.க வெல்லுமெண்டு கதைவிடுகினம். இந்த கும்பல் தான் முன்னர் மஹிந்தவோட தொடர்பு படுத்தி சாயம் பூசினதெண்டதை மறந்து போகக்கூடாது பாருங்கோ.

# நையாண்டியார்

## பதில்கள்

**சே. அனுஸா**
**யாக்கரு, கரவெட்டி**

**கேள்வி :–** உயர்பாதுகாப்பு வலய காணிகள் விடுவிப்பு சாத்தியமா?

**பதில் :–** இலங்கை அரசு திட்டமிட்டு முன்னகர்த்தும் இராணுவ குடியிருப்புத் திட்டத்தின் ஒரு அங்கமாகவே விடுவிப்பைப் பார்க்கவேண்டியுள்ளது. மக்கள் குடியிருப்புக்களிடையே பாரிய இராணுவ தளங்களிற்கென நிலப்பரப்புக்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து வருடங்களுள் பிடித்தது ஒரு இலட்சம் ஏக்கர். விடுவித்ததோ வெறும் ஆயிரம் ஏக்கர் மட்டுமே.

**ப.திருச்செல்வம்**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்**

**கேள்வி :–** வடமாகாண அதிகார உயர்மட்ட இடமாற்றம் மக்களிற்கு பலனளிக்குமா?

**பதில் :–** பக்கத்து வீடுகளிற்கான மாற்றமாகவே அது இருக்கின்றது. இருந்தவர்கள் மன நிலைகள் மாறாமல் கதிரைகளை மாற்றுவதால் ஏதும் நடந்துவிடப்போவதில்லை. இப்போதும் ஆளுநர் அலுவலகத்திற்கு பலர் காவடி எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

**த.தவனேசன்**
**பூநகரி**

**கேள்வி :–** யாழ்.கிளிநொச்சி மீனவர்கள் பிரச்சினையில் அரசியல் எட்டிப் பார்க்கிறதே?

**பதில் :–** யுத்தத்தின் கடும் பாதிப்பினைச் சந்தித்தவர்கள் வன்னி மீனவர்கள். அவர்களைக் கைகொடுத்து தூக்கிவிடவேண்டியது எமது தார்மீகக்கடமை. ஆனால் வாக்குகளை மட்டும் கருத்தினில் கொண்டு அரச அமைச்சர் விஜயகலா முதல் கூட்டமைப்பு வடமாகாணசபை உறுப்பினர்கள் வரை தலையை நுழைத்துள்ளார்கள். கிளிநொச்சியின் கட்டைப்பஞ்சாயத்து எம்பி இவ் விடயத்தினில் மூச்சு விடக்கூட காணோம்.

**ப.மயூரிகா**
**உடுவில், சுன்னாகம்**

**கேள்வி :–** "தகிக்கும் தண்ணீர்" ஏன் பலரும் ஒத்துழைக்கவில்லை?

**பதில் :–** மக்கள் முழுமையாக ஒத்துழைத்துள்ளனர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தினில் வெளியிடப்பட்ட செய்தி ஆவணப்படம். விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் வெற்றிபெற்றிருக்கின்றது. பார்வையாளர்கள் பல ஆயிரங்களைத் தாண்டியிருக்கின்றனர்.

**ச.சிவரூபன்**
**கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு**

**கேள்வி :–** பஸில் கைது, கோத்தாவிற்கு விசாரணை? தெற்கினில் என்னதான் நடக்கின்றது.

**பதில் :–** படுக்கையிலும், வீதியிலும் காரணகாரியமின்றி கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் சாதாரணமானதொன்று. விளக்கமளிக்க கோத்தாவிற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்குகின்றதாம் விசாரணைக்குழு. அவரோ தன்னை சத்தியத்தில் அரிச்சந்திரன் என்கிறார்.

கவிமகன்

# வாழ்க்கை என்பது காதலா...



மேசை மீது இருந்த அந்த புத்தகத்தின் மீது மறுபடியும் பார்வையை பதித்தான் நிருபன். அந்த புத்தகம் அவனால் பலதடவைகள் வாசிக்கப்பட்டாலும் ஒரு காரணத்தைத் தேடி மீண்டும் மீண்டும் அந்த புத்தகத்தின் மீது பார்வையைப் பதிக்கிறான். மாமா எதற்காக இப்படிச் செய்தார்...? அவனது மனதில் பல்லாயிரம் முறை எழுந்த அந்த வினாவுக்கான விடை இன்னமும் கிடைக்கவில்லை. ஆனாலும் தன்னுடைய முயற்சியில் அவன் தளரவில்லை. புத்தகத்தோடு இணைந்து அவனின் கண்முன்னே அன்றைய நாளும் தோன்றியது.

மங்கள இசை அந்த மண்டபம் முழுவதும் நிறைந்திருந்தது. நறுமணங்கள் சுவாசத்தோடு உள்நுழைந்து தம் பணியை சீராகவே செய்து சுகந்தம் தந்தன. பட்டாடைகள் சர சரக்க உறவுகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது. வாசல் மஞ்சள் வாழைக்குலை தனது இருப்பை வருபவருக்குக் கூறி கொண்டிருந்தது. ஆவண கருவிகள் திக்கெட்டும் சுழன்று கொண்டிருந்தன. சமயக்குருக்கள் தனது பணியை செய்து கொண்டிருந்தார். இவை எல்லாவற்றுக்கும் நடுவே அந்த மனிதனும் ஓடிக் கொண்டிருந்தார். தம்பி வார ஆக்கள கவனியுங்கோ. இல்லை என்றா குறை நினைப்பினம். இல்ல மாமா அதெல்லாம் யோசிக்காதீங்க. நான் பார்த்துக் கொள்ளுறன்.

மருமகன் லாவகமாக பதில் உரைத்து. மாமனாரை மகிழ்வடைய வைக்கின்றான். ஆனாலும் அவனுக்கு மனதில் சங்கடம் தான். இன்று நான் ஒரு வரவேற்பாளனாக இருக்கவா ஆசைப்பட்டேன்...? அவன் மனதில் வேதனையோடு கூடிய நினைவுகள் வந்து போனது. ஆனாலும் அவன் தனது மாமனுக்காக அந்த நிகழ்வை முன் னின்று நடாத்திக் கொண்டிருந்தான். வந்தவர்களுக்கு வரவேற்பையும் தேவை அறிந்து அவர்களுக்கு அவற்றை நிறைவேற்றவும் அவன் பின் நிற்காது உழைத்தான். வந்தவர்களுக்கு உபசாரம் முதல். நிகழ்வு முடித்து செல்பவர்களுக்கு தாம்பூலத்துடன் ஒரு புத்தகத்தையும் பரிசாகக் கொடுத்து அனுப்பி வைத்தான்..

அன்று மேனகாவுக்கு திருமணம். யார் அந்த மேனகா? நிருபனை பெற்றவளுடைய தம்பி பொண்ணு. அதனாலோ என்னவோ அவன் துணை அவள். அவளுக்கு இவன் என்று பிறப்பிழுதல் முடிச்சு போட்டு வளர்த்தனர் அக்காவும் தம்பியும். ஆனால் ஒரு நிலையில் மேனகா தன் தாய் தந்தையோடு புலம்பெயர் நாடு ஒன்றில் வாழ்வை நிலை நிறுத்தியபோது இவன் தனது தாய் தந்தையோடு தாயகத்தின் போராட்ட விழுமியங்கள் சுமந்த வன்னி மண்ணிலே தனது வாழ்க்கையை நிலை நிறுத்திக் கொண்டான். அதனாலோ என்னவோ அவர்களிடையில் இருந்த தொடர்பாடல்கள் எதுவும் தொடர முடியாமலே இடை நடுவே அறுந்து போனது எப்போ ஒரு நாள் வரும் கடிதத்தில் அவன் அவள் நினைவுகளை மறக்காது சுமக்கத் தொடங்கினான்.

தம்பி நீ எதுக்கும் கவலைப்படாதடா மேனும்மா உனக்குத் தாண்டா என்று தகவல் சுமந்து வரும் மாமனாரின் வார்த்தைகளை அவனும் நெஞ்சிலே அணையாத தீபமாக காத்து வந்தான். எப்பிடி என்றாலும் இந்த சண்டைய வெற்றிகரமா முடிக்கணும் அதுக்குப் பிறகு மேனுவ இங்க கூப்பிட்டு சந்தோசமா இருக்கணும் என்பதுவே அவனது எண்ணமாக வன்னி களங்கள் எல்லாம் அவன் திரிந்தான். அவனுக்கு அவன் மாம னாரை அத்தையாரை பற்றி எல்லாம் நிறைவான எண் ணங்கள் உண்டு. ஆனாலும் அவர்களின் வாழ்க்கை யின் பல ரகசியங்களை அவன் அறிந்திருக்கவில்லை.

யாழில் தலை தூக்கி ஆடிக் கொண்டிருந்த சாதிய கொடுமைகளை எல்லாம் எதிர்த்து தம்முடைய வாழ்க்கைத் தேர்வுகளை சீராக அடித்தளம் இட்டுக் கொண்டவர்கள் அவர்கள். தாம் கற்றுக் கொண்ட பட்டய கல்வியின் மூலம் தமது வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திக் கொண்டவர்கள். விஞ்ஞான பட்டதாரியான மனைவியும் கலை பட்டதாரியான அவரும் எந்த வேறுபாடுகளும் இன்றி தமது காதலில் சாதியம் பண ஏற்றத்தாழ்வு என்று பல தடைக்கற்களைத் தாண்டி வாழ்வில் துணையாக இணைந்து கொண்டவர்கள். தனது மனைவியின் உறவுகள் இருவரையும் அழித்து விடக் கங்கணம் கட்டி அலைந்த போதெல்லாம் அவர்களிடம் இருந்து தம்மை காத்து வாழ்க்கையில் முன்னேறியவர்கள். எத்தனையோ தடைகளைத் தாண்டி தமது கரத்தை காதலால் இணைத்த அந்த ஜோடி எந்த உண்மை காதலர்களுக்கும் உதவுவதைத் தவற விடுவதில்லை. அத்தகைய காதல் மோகம் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. தாம் காதலித்து பல தடைகளை எதிர்த்து கரம் கோர்த்தவர்கள் என்ற நினைவு அவர்களை மீண்டும் மீண்டும் காதலுக்காக எதையும் இழக்கத் தயாராக்கியது.

அதனாலோ என்னவோ தன் மகள் காதலித்துள்ளேன் அவனையே கரம் பிடிப்பேன் என்று கூறிய போது எந்த மறுப்பும் இல்லாது அவர்களை கரம் கோர்க்க முனைப்புக் காட்டினர். அதன் பின்னணி அவர்களின் உறவுகள் யாருக்குமே பிடிப்பற்றுப் போனது என்பது நிஜம். மீண்டும் பலதாக குடும்பம் பிளவு கண்டது.

ஆனால் தமது காதலின் தொடக்கம் முதல் அந்திமம் வரை பல இடர்களைக் கடந்து எதிர்ப்புக்களை எல்லாம் உடைத்தெறிந்து கரம்பற்றிய தாமே தமது மகளின் காதலுக்கு எதிரிகள் ஆவதை அவர்கள் விரும்பவில்லை. தாய்மையான காதலுக்கு முன் எந்த உறவுகளும் அவர்கள் வாழ்வில் தேவை இல்லை என்று தூக்கி எறிந்த வர்கள். அவர்கள் அதே போலவே மகளின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டி வாழ்த்துரைத்தார்கள் அந்த இரு உள்ளங்களும்.

ஆனால் அவர்கள் இருவருமே தமது மனதில் நிலைத்திருந்த அந்த ஆசையை நிர்மூலம் ஆக்கியதில் இருந்து காதலுக்காக தாம் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை சுமந்ததாலோ என்னவோ, நிருபன் மட்டுமே முற்றுமுழுவதுமாக பாதிப்பை அடைந்திருந்தான். இது எவற்றையும் அறியாது தனக்காக ஒருவன் இத்தனை வருடங்களாக காத்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாது. அம்மா நாட்டில இருந்து வாற மாப்பிள்ளையோட என்னால வாழ முடியாது. அவர்களுக்கு பழமையான கருத்துக்களும் அங்க இருக்கிற ஆக்கள் மாதிரி என்னைக் கட்டுப்படுத்தி தமிழ் தமிழீழம் என்று சுதந்திரமான வாழ்க்கையை கெடுத்து விடுவார்கள். தயவு செய்து என்னை என் பாட்டுக்கு விடுங்கள். நான் காதலித்தவனை கட்டி வையுங்கள். இல்லை என்றால் நானே என் வழியைப் பார்த்துச் செல்கிறேன். அவளின் தீர்க்கமான முடிவு இவர்களையும் சிந்தனைக்குள்ளாக்கியது.

இவர்களது எண்ணங்களை உணராமல் தனது காதலில் உறுதியாக இருந்தாள் மேனகா. புலத்தில் வளர்ந்த அவளால் தாயகத்து மாப்பிள்ளையை கட்டுவதில் எந்த விருப்பமும் இல்லை என்பதை தனது காதலை அடைவதற்காக கூறினாள் என்றே இவர்கள் எண்ணி னார்கள். ஆனால் அவளின் பக்கம் நியாயங்களும் இருப்பது உண்மையே. உறவுகளின் கருத்துக்களை எல்லாம் முன்னிலைப்படுத்தாது தான் விரும்பிய அந்த வெளிநாட்டு வேற்றினத்து மணவாளனது கரத்தைப்பற்றியவளாக புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.

அவளின் சிரிப்பில் மனம் மகிழ்ந்தாலும் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் தமிழ் மீது அவள் கொண்ட பற்றில்லாத் தன்மையையும் நினைத்து நொந்து கொண்டான் அவன். ஆனாலும் மாமாவின் மன நிம்மதிக்காக வெளியில் சிரித்து உள்ளே வெதும்பிக் கொண்டிருந்தான் நிருபன்.

திருமணம் இனிதே நிறைவு கண்டது. ஆனால் வந்திருந்தவர்களின் மனதில் எழுந்திருந்த அந்த வினாவுக்கான விடை எங்குமே கிடைக்கவில்லை. தாம்பூலத்துடன் வந்திருந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த புத்தகத்தில் எனது "வாழ்க்கை என்பது காதலா" என்று தலைப்பிட்டு திருமண பந்தம் என்று தொடங்கி தனது வாழ்க்கை பற்றிய உள் மனக்கிடைக்கைகளை முற்று முழுவதுமாக கொட்டி இருந்தார் நிருபனது மாமா. காதலால் இணைந்து காதலால் வாழ்ந்து காதலுக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்த அந்த மனிதர் தனது மகளின் காதல் கல்யாணத்துக்குக் கூட எந்த மன உளைச்சலும் இன்றி பச்சைக்கொடி காட்டியவர். தனது சுய வாழ்வோடு தொடர்புபடுத்தி எழுதிய அந்த புத்தகத்தில் இறுதியாக தனதும் தன் அன்பு மனைவியினதும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை குறிப்புக்களோடு அனைவரையும் சிந்திக்க வைத்த அந்த வார்த்தையையும் பொறித்திருந்தார்.

"மனமகிழ்ச்சியாக மகளின் திருமணத்தை நிறைவேற்றி வைத்த பெருமிதத்தோடு எங்கள் மகிழ்வுகரமான வாழ்க்கைப் பயணத்தினை முறித்துக் கொள்ள முடிவு செய்துள் ளோம்... இது பலருக்கு அதிர்ச்சி தரும் விடையமாகக் கூட இருக்கலாம். இருபத்தைந்து ஆண்டுகள் மகிழ்வாக வாழ்ந்த நாம் எமது திருமண உறவை எதற்காக முறிக்கின்றோம் என்ற கேள்வி எழலாம். ஆனால் அதற்கான விடையை ஆராய்வதை விட்டு தங்கள் மகிழ்வுகரமான வாழ்க்கையைத் தொடருங்கள்..." புத்தகத்தை மூடி வைத்து நிமிர்ந்தவன் அன்றும் தோல்வியுடன் எழுகிறான் "இந்த மனுஷன் ஒரு பிடி கூட விடலையே..." ஒரு வேளை தான் சகோதரிக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியலையே என்ற ஏக்கம் நிறைந்து தமது வாழ்க்கையை முறித்து கொண்டார்களோ.... மனதில் எழுந்த வினாவும் விடை காணாது பயணித்துக் கொண்டிருந்தது...

> தம்பி நீ எதுக்கும் கவலைப் படாதடா மேனும்மா உனக்குத் தாண்டா என்று தகவல் சுமந்து வரும் மாமனாரின் வார்த்தைகளை அவனும் நெஞ்சிலே அணையாத தீபமாக காத்து வந்தான்.

# பொருள் தேடும் வாழ்க்கை

"நான் கூகுளிலிருந்து ஏன் வெளியேறினேன்?" என்ற ஒரு குறும்படத்தை யூடியூபில் பார்க்க நேர்ந்தது. கூகுள் ஒரு கனவு நிறுவனம். ஒரு பணியாளரால் நினைத்துப் பார்க்க முடியாத அத்தனை சௌகரியங்களையும் கொண்ட அலுவலக வளாகம் அவர்களுடையது. ஒரு உல்லாசக்கூடத்தில்கூட கிடைக்காத கேளிக்கைகள் அங்கு உள்ளன. உடற்பயிற்சி செய்யலாம். படிக்கலாம், பீர் குடிக்கலாம். சைக்கிள் ஓட்டலாம். படுத்துத் தூங்கலாம். வேலைகூட செய்யலாமாம்!

**சொர்க்கத்தின் நிர்ப்பந்தம்**

மக்களைக் கவர்வது இந்த வசதிகள் தரும் கவர்ச்சிகள் அல்ல. அதன் அடிநாதமாய் உள்ள சுதந்திர உணர்வு. பரிபூரண சுதந்திர உணர்வை அனுபவித்தவர்கள் அதைத் துறப்பது மிகவும் கடினம். அந்தக் குறும்படத்தில் 'இது போல இன்னொரு இடம் வாய்க்காது. இருந்தும் இதைத் துறந்து புது அனுபவத்தை தேடிப் போகிறேன்' என்று செல்கிறார் அந்த இளைஞர். மற்றவர் பொறாமைப்படும் பணியிடத்தை வேண்டாம் என்று உதற எப்படி மனம் வந்தது?

சொர்க்கம் என்னை நிர்ப்பந்தம் செய்வதாய் உணர்ந்தால் அதிலிருந்து சுவர் ஏறிக் குதித்து நான் நரகத்துக்குப் போகத் தயங்கமாட்டேன் என்று ஒரு கவிஞர் எழுதியது நினைவுக்கு வந்தது. இந்த இளைஞர் கூகுளில் எந்தப் பிரச்சினையுமில்லை என்று அதன் அத்தனை வசதிகளையும் படம் பிடித்துக் காட்டி "கூகுளுக்கு நன்றி" என்றுதான் கிளம்புகிறார்.

ஆனால் ஒரு புதுக் கிளர்ச்சியைத் தேடி அவர் போவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. எந்த உச்ச அனுபவமும் தரை தொடும். நெருக்கடிகளைத் தரும் புது அனுபவங்களைத் தேடிப் போகும் இளைஞர்கள் பெருகிவிட்டார்கள் எனத் தோன்றுகிறது.

**வெற்றியின் அலுப்பு**

மிக நல்ல நிறுவனங்களிலிருந்தும் பெரிய காரணம் எதுவுமின்றி விலகுவோர் ஒரு உளவியல் தேவைக்காகத்தான் வெளியேறுகின்றனர்.

ஐ.டி. கம்பெனி வாலிபர் விவசாயம் செய்ய முயலுகிறார். கார்ப்பரேட் மானேஜர் ஒருவர் வேலையைத் துறந்துவிட்டு கிராமத்தில் பள்ளிக்கூடம் நடத்துகிறார். இன்னொரு கார்ப்பரேட் நண்பர் பக்தி மார்க்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு பெரிய வேலையைத் துறந்துள்ளார். மனித வளம் படித்த என் மாணவி தற்போது தன் சொந்தப் பணத்தில் பிராணிகள் காப்பகம் நடத்துகிறார்.

பொறியில் மாட்டியதுபோல பொறியியலில் மாட்டிய மாணவர்கள் பலர் டிஜிட்டல் காமராவைத் தூக்கிக் கொண்டு படம் எடுக்க ஏற்கனவே வந்து விட்டார்கள். அதே போல படிக்கும் படிப்பை கடைசி வருடத்தில் விட்டு விட்டு வேறு துறைப் படிப்பைத் தேடி ஓடும் போக்கும் அதிகரித்து வருகிறது.

**இவர்களின் தேவை என்ன?**

வெற்றி கூட அலுப்பைத் தரும். சௌகரியத்தில் கூட சுவாரஸ்யம் குறையும். மனம்ஒரு புரியாத இடத்தைத் தேடி ஓடும். எங்கு செல்வது என்று தெரியாவிட்டாலும் இருக்கும் இடம் தனதல்ல என்று தெளிவாகத் தெரியும்.

ஒரு மனித வள மேலாளருக்கும் வேலையை ராஜிநாமா செய்த ஒரு மேலாளருக்கும் நடந்த உரையாடல் இது:

"நீங்கள் வேலையை விட்டுப் போகும் காரணம் சொல்லுங்கள்?"

"நான் இங்கு வேலையில் இருப்பதற்கான காரணமே எனக்குத் தெரியவில்லையே!"

சம்பளம் போதவில்லை. பதவி உயர்வு கிடைக்கவில்லை. வசதிகள் போதவில்லை. இப்படிக் காரணங்கள் இருந்தால் பரவாயில்லை. "எனக்கு என்ன வேண்டும் என எனக்குத் தெரியவில்லை?" என்றால் என்ன செய்வது?

**ஆன்மிகத் தேடல்**

"படித்து நல்ல வேலையில் இருக்கும் இளைஞர்கள்தான் சாமியார் மடங்களிலும் சேர்கிறார்கள். தீவிரவாத அமைப்பிலும் சேர்கிறார்கள்." என்றார் ஒரு பேராசிரியர். அவர் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை.

இன்றைய பணிச்சூழல் ஒரு உள் மன நெருக்கடியை ஏற்படுத்தி ஒரு ஆன்மிகத் தேடலைத் தோற்றுவிக்கிறது என்று தோன்றுகிறது. ஆன்மிகம் என்றால் கடவுள் அல்லது மதம் சம்பந்தமானதாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. "ஏன்" என்ற கேள்வி மட்டும் போதும். நாம் செய்யும் பணியின் நோக்கம் பற்றி யோசிக்கையில் ஒரு வெறுமை பிறந்தால் இந்தத் தேடல் தீவிரப்படும்.

அந்த நேரத்தில் மனதுக்கு நெருக்கமாகப்படும் மதமோ, கொள்கையோ, செயல்பாடோ ஒரு புதிய பரிமாணத்துடன் காணப்படும். அதை நோக்கி மனம் பயணிக்கையில் அவர்களின் வாழ்க்கை திசை மாறிப் போகிள்றது.


"எங்க காலத்தில் வேலை கிடைச்சாலே பெரிய விஷயம். அதுவும் நல்ல வேலை என்றால் எந்த வலி வந்தாலும் பொறுத்துக் கொள்ளக்காரணம் அவ்வளவு குடும்பப் பொறுப்புகள் இருக்கும். எல்லாரையும் கரையேற்றி தனக்காக ஒரு வீடு கட்டி உட்கார்ந்தாலே முக்கால் வாழ்க்கை முடிந்துவிடும். அதனால் இந்த மாதிரி பாதியில் போகும் எண்ணமும் வராது. தைரியமும் இருக்காது. இன்னிக்கு ஒரு சின்னக் குடும்பத்துக்கே பெரிய சம்பளம் வருகிறது. வேற குடும்பப் பொறுப்புகள் கிடையாது. அப்புறம் மனம் இப்படித் தறி கெட்டுத் தானே போகும்?" என்றார் ஒரு முதியவர்.

**வாழ்வின் பொருள்**

வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடி அலைபவர்கள் பலர். வாழ்க்கையின் பொருள் தேடி அலைபவர்கள் சிலர். பொருளாதார வசதி நிறைய உள்ள பணிகளில் தான் உளவியல் வெறுமை அதிகம் உண்டாகிறது என்பது உண்மை தான். நம் வாழ்க்கையின் குறிக்கோளுக்கு நெருக்கமான ஒன்று நாம் செய்யும் வேலையிலேயே கிடைத்து விட்டால் வெளியே தேடி அலைய வேண்டாம். அல்லது அப்படிப்பட்ட வேலையை முதலிலேயே தேடிக் கொள்வது புத்திசாலித்தனம்.


- சிவகார்த்திகேயன்

வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடி அலைபவர்கள் பலர். வாழ்க்கையின் பொருள் தேடி அலைபவர்கள் சிலர். பொருளாதார வசதி நிறைய உள்ள பணிகளில் தான் உளவியல் வெறுமை அதிகம் உண்டாகிறது என்பது உண்மை தான்.



## தாயாகப் போகும் உங்களுக்கு - 10

- டாக்டர் எம்.கே.முருகானந்தன்-



கரு நன்கு வளர்ச்சியடைந்த பின் மாதங்களில் குழந்தைகளின் இரு தலைகள் அல்லது இரு முதுகுப்புறங்களைத் தொட்டு உணர்வதன் மூலமும், இரு குழந்தைகளினதும் இதயத்துடிப்புகளை வெவ்வேறு இடங்களில் கேட்பதன் மூலமும் இரட்டைக் குழந்தைகள் தான் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வார்.

# இரட்டைக்குழந்தைகள்

கணவன் அல்லது மனைவியின் பரம்பரையில் இரட்டைக் குழந்தைகள் இருந்தால், அவர்களுக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பது நன்கு தெரிந்த விடயம்தான்.

கர்ப்பகாலத்தில் ஏற்படக் கூடிய எல்லா அசௌகரியங்களுமே, இரட்டைக் குழந்தைகளை சுமப்பவர்களுக்கு அதிகமாகத் தோன்றக்கூடும். எனினும் இது எல்லோருக்குமே பொருந்தும் என்று சொல்ல முடியாது. சத்தி, ஓங்காளம், எச்சில்ஊறல் போன்ற மசக்கைக் குணங்கள் அதிகமாக இருக்கக்கூடும். அதேபோல எளிதில் களைப்படைதல், நெஞ்செரிவு, நாளப்புடைப்பு, கால்வீக்கம், மூலமுளை போன்ற சிறு துன்பங்கள் அதிகமாகவும், அடிக்கடியும் தோன்றக்கூடும்.

இரட்டைக் குழந்தை தானா என்பதை நிச்சயப்படுத்த நீங்கள் உங்கள் வைத்தியரை நாடுவீர்கள். நீங்கள் ஒழுங்காக கர்ப்பவதி நலன் பேணும் கிளினிக்குகளுக்குச் சென்று வந்து கொண்டிருந்தால், இதை உங்களுக்கு அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கக்கூடும்.

பெரும்பாலும் உங்கள் சந்தேகம் பிழையாக இருக்கலாம். எனினும் இரட்டைக் குழந்தைகளைப் பெறுவது அரிதான விடயமல்ல. ஒவ்வொரு எண்பது பிரசவத்திற்கும் ஓர் இரட்டைக் குழந்தைப் பிரசவம் நிகழ்கிறது என்று கணிக்கப் பட்டுள்ளது. எனவே உங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்காவிட்டால்கூட இரட்டைக் குழந்தைப் பிரசவம் பற்றி சிலமுக்கிய தகவல்களை அறிந்திருப்பது அவசியமாகின்றது.

குறிப்பிட்ட கர்ப்பகாலத்தில், கர்ப்பப்பை வழமையாக இருப்பதைவிட அதிகமாகப் பருத்திருப்பதைக்கொண்டு, மூன்றாம், நாலாம் மாதங்களிலேயே இரட்டைக் குழந்தைகள் இருப்பதை வைத்தியர்கள் அனுமானிக்கக்கூடும். எனினும் சில நோய்களாலும் கர்ப்பப்பை இவ்வாறு அதிகமாகப் பருத்திருக்கக்கூடும். உதாரணமாக கர்ப்பப்பையில் அதிகமாகப் பனி நீர் சேர்ந்திருந்தாலும் (Hydramnios), சில வகைக் கட்டிகளாலும் (eg: Ovarian Cyst) இது நேரலாம். சில நுண்ணிய பரிசோதனைகள் மூலம் அவரால் இவற்றை வேறுபடுத்தி உணரமுயும்.

கரு நன்கு வளர்ச்சியடைந்த பின் மாதங்களில் குழந்தைகளின் இரு தலைகள் அல்லது இரு முதுகுப்புறங்களைத் தொட்டு உணர்வதன் மூலமும், இரு குழந்தைகளினதும் இதயத்துடிப்புகளை வெவ்வேறு இடங்களில் கேட்பதன் மூலமும் இரட்டைக் குழந்தைகள் தான் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வார்.

எக்ஸ்-ரே (X-ray) படம் எடுப்பதன் மூலம், இரட்டைக் குழந்தைகள் தான் என்பதை ஐயந்திரிபற நிச்சயம் செய்து கொள்ளலாம். ஆனால் கர்ப்பகாலத்தில் எக்ஸ்-ரே எடுப்பதைக் கூடியவரை தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இக்கதிர்கள் கர்ப்பப்பையிலிருக்கும் குழந்தைக்கு பல்வேறு தீமைகளை ஏற்படுத்தக்கூடும். இத்தீய விளைவுகள் பெரிதும் ஏற்படக்கூடிய முதல் 12 வாரங்களுக்குள் எக்காரணம் கொண்டும் எக்ஸ்-ரே எடுக்கக்கூடாது. எனவே வேறு நோய்களுக்காக வைத்தியரிடம் இக்காலத்தில் சென்றால், நீங்கள் கர்ப்பமாய் இருப்பதை அவருக்குத் தெரிவியுங்கள். இரட்டைக் குழந்தைகள் தானா என்பதை நிச்சயப்படுத்த பின் மாதங்களிலேயே பொதுவாக எக்ஸ்-ரே எடுப்பார்கள். இதனை நிச்சயப்படுத்த 28 வாரங்களுக்கு முன் எக்ஸ்-ரே எடுக்கப்படுவது உசிதமானதல்ல. குழந்தைகள் கர்ப்பப்பையில் இருக்கும் நிலையை (Position) அறியவும், அவற்றிற்கு ஏதாவது பாரதூரமான அங்கக் குறைபாடுகள் இருக்கின்றதா என அறியவும் எக்ஸ்-ரே படம் உதவும். இப்பொழுது எக்ஸ்-ரேக்குப் பதிலாக, "அல்ராசோனிக் ஸ்கான்" (Ultrasonic Scan) போன்ற பாதுகாப்பான முறைகளைக் கையாள்கிறார்கள். இலங்கையில் கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் இது அறிமுகப்படுத்துப்பட்டுள்ளது.

இரட்டைக் குழந்தைகள் என்றாலே பல கர்ப்பிணிகள் பயப்படுகிறார்கள். கர்ப்பமாய் இருக்கும்போது ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமா? பிரசவத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா? குழந்தை உடல்நலக் குறைவுடன் பிறக்குமா? புத்தி மந்தமாய்ப் பிறக்குமா? என்று சந்தேகமும் பயமும் அடைகிறார்கள்.

பெரும்பாலான சந்தேகங்களில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனையவை ஏற்படாமல் தடுப்பதற்கு வைத்தியர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பார்கள். அத்தகைய கர்ப்பிணிகளுக்கு மேலதிக ஊட்டச்சத்து உணவுகளையும், மேலதிக இரும்பு, கல்சியம், விற்றமின் மருந்துகளையும் வைத்தியர்கள் கொடுத்து பெரும்பாலான பாதிப்புக்கள் ஏற்படாமல் தடுப்பார்கள்.

கர்ப்பகால வலிப்பின் முன்னிலை, இரத்தசோகை, அதிக பனிநீர் சேர்தல், கர்ப்பமாய் இருக்கும்போது தீட்டுப்படுதல், குழந்தை காலால் அல்லது ஏனைய முறைகளில் பிறக்க முயற்சிப்பது, பிரசவத்தின் பின் இரத்தப் போக்கு போன்ற பிரச்சினைகள், சாதாரண கர்ப்பத்தைவிடக் கூடுதலாக ஏற்படலாம்.

வைத்தியர்கள் இவற்றை எதிர்பார்த்து, அவை ஏற்படாமல் தடுக்கவும், அவை ஏற்பட்டாலும் அதனால் பாதிப்புக்கள் உண்டாகாமல் தடுக்கவும் வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பார்கள். அத்துடன் இரட்டைக் குழந்தைப் பிரசவங்கள் போதிய வைத்திய வசதியுள்ள வைத்தியசாலையிலேயே நடக்க வேண்டும் என்றும், ஆலோசனை கூறுவார்கள்.

ஒருமுறை இரட்டைக் குழந்தை பிறந்தவர்களுக்கு மீண்டும் அவ்வாறு பிறப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

**இரட்டைக் குழந்தைகள் இரண்டு வகையானவை.**

பெண்ணின் இரு வெவ்வேறு கரு முட்டைகள், ஆணின் விந்துகளுடன் சேர்வதன் மூலம் இரட்டைக் குழந்தைகள் உண்டாகலாம். இத்தகைய இரட்டைக் குழந்தைகளே அதிகமானவை. இக்குழந்தைகள் ஒரே பாலினராக இருக்க வேண்டும் என்பதில்லை. உருவத்திலும் அவை ஒரே மாதிரி அமைவதும் இல்லை. ஒரே குடும்பத்திலுள்ள வெவ்வேறு அங்கத்தவர்களில் காணக்கூடி அளவு உருவ ஒற்றுமையே இருக்கும்.


பெண்ணின் ஒரு கரு முட்டை ஆணின் விந்துடன் கலந்த பின், அது இரண்டாகப்பிரிவதன் மூலம், இரண்டாவது வகை இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இக்குழந்தைகள் ஒரே பாலினராகவே இருப்பர். உருவமும் ஒரு அச்சில் வார்த்த இரு சிலைகள் போல ஒரே மாதிரியாகவே இருக்கும். அவற்றின் குண இயல்புகள் கூட ஒரே மாதிரி அமையும். இவ்வகை இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரு சூழ்வித்தகம் தான் இருக்கும்.

இரு கரு முட்டைகளிலிருந்து உற்பத்தியாகும் முன்னைய வகை இரட்டைக் குழந்தைகளுக்கு தனித்தனியே சூழ்வித்தகங்கள் (இரண்டு) இருக்கும். இதனைக் கொண்டு இரட்டைக் குழந்தைகள் எவ்வகையைச் சேர்ந்தது என்பதை பிரசவத்தின் போது வைத்தியர் கண்டறிய முடியும்.

இரட்டைக் குழந்தைகளின் பிரசவம், பெரும்பாலும் கணிக்கப்பட்ட தினத்திற்கு பல நாட்கள் முன்னதாகவே நிகழக் கூடும். நீங்கள் இரட்டைக் குழந்தைகளைச் சுமப்பவராக இருந்தால், பிரசவத்திற்காகச் செய்யவேண்டிய ஆயத்தங்களையும், முன்னேற்பாடுகளையும் கடைசி வரை காலம் தாழ்த்தாது, நேரகாலத்துடனேயே செய்து வையுங்கள்.

(தொடரும்.....)

# தமிழ்த் தேசிய அரசியலுக்கான சவால்களும் வாய்ப்புக்களும்



■ சி.அ.யோதிலிங்கம்

ஒரு தேசிய இனத்தின் போராட்டம் என்பது சவால்களையும் வாய்ப்புக்களையும் கொண்டவைதான். தனித்து சவால்கள் மட்டும் இருக்கின்றது என்றோ அல்லது தனித்து வாய்ப்புக்கள் மட்டும் இருக்கின்றது என்றோ கூறி விட முடியாது. முதலில் நாம் சவால்களை அடையாளம் காண்போம்.

**முதலாவது சவால் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிட்டு அதற்கு எதிரான நிலைக்குச் செல்கின்றது.**

தமிழ்த் தேசியப் போராட்டம் அக ரீதியாகச் சந்திக்கும் மிகப் பெரிய சவால் இதுவென்றே கருதுகின்றேன். முன்னரே கூறியது போல ஆயுதப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிட்டதுமல்லாமல் அதற்கு எதிராகச் செல்லத் தொடங்கியது. ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலத்தில்கூட சம்பந்தன் தலைமை தமிழ்த் தேசிய அரசியலுக்கு விசுவாசமாக இருக்கவில்லை. அது புலிகளுக்கும் தெரியும். புலிகள் இவர்களை வெளியில் விட்டால் ஆபத்து ஏற்படும். தமக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயற்படுவார்கள். தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்போம் எனக் கருதித்தான் கூட்டமைப்பில் இணைத்து வைத்திருந்தார்கள். அதேவேளை தம்மை மீறிப் போகாத வகையில் தமக்குச் சார்பான பிரதிநிதிகளையும் கூட்டமைப்பில் இணைத்தார்கள்.

சம்பந்தன் தலைமை புலிகளுடன் நிற்பது போலக் காட்டிக் கொண்டு வெளியில்தான் நின்றது. தமது உண்மைச் சொரூபத்தை பிராந்திய வல்லரசுக்கும் சர்வதேச வல்லரசுகளுக்கும் காட்டிக் கொண்டிருந்தது. போரின் உச்ச நிலையில் போரை நிறுத்த சம்பந்தன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இறுதி நேரத்தில் தமது தொலைபேசிகளையும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் நிறுத்திவைத்திருந்தனர். புலிகள் அழிய வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாக இருந்தது.

அரசியல் தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். சர்வதேச பிராந்திய சக்திகளுக்கும் இது விடயத்தில் உத்தரவாதம் கொடுத்திருந்தனர். இந்தியாவே பின்னணியில் நின்று இவர்களை இயக்கிக் கொண்டிருந்தது.

போர் முடிந்த பின்னர் சம்பந்தன் தலைமை முதல் செய்த பணி கூட்டமைப்புக்குள் இருந்த தமிழ்த் தேசிய சக்திகளை அகற்றியமையே. இதன் அடிப்படையில் செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நீக்கப்பட்டனர். கஜேந்திரகுமாரை தங்களுடன் வைத்திருக்கவே விரும்பினர். ஆனால் தமிழ்த் தேசியம் நீக்கப்பட்ட ஒரு அரசியலைச் செய்வதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. அதனால் கூட்டமைப்பினை விட்டு வெளியேறினார். பின்னர் அவரும் வெளியில் நின்ற தமிழ்த் தேசிய சக்திகளும் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கியமை வரலாறு.

ஆயுதப் போர் முடிவடைந்த பின்னர் பின்நோக்கிச் செல்லும் செயற்பாட்டில் சம்பந்தன் தலைமையின் முதலாவது கட்ட வேலைத் திட்டம் கூட்டமைப்புக்குள் இருந்த தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளை நீக்கியமையே. புலி நீக்கம் என்ற பெயரில் செய்தது முழுக்க முழுக்க தமிழ்த் தேசிய நீக்கமே. இந்தியா இதனை உடனடியாக செய்யுமாறு கட்டளையிட்டிருந்தது.

இரண்டாவது கட்ட வேலைத் திட்டம் தமிழ்த் தேசிய அடிப்படைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பதை கைவிட்டமையாகும். 2010 ஆம் ஆண்டு தேர்தல் இடம்பெற்றபோது வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக "இரு தேசங்கள் ஒரு நாடு" என்பது தங்களது கொள்கை என்றும் குறிப்பிட்டனர். தேசிய கோசங்களையும் உரத்து குரலெழுப்பினர். இது தேர்தல் காலத்திற்கு மட்டும்தான். ஏனைய காலங்களில் இந்த அடிப்படைகளை உச்சரித்தவர்களும் கண்டிக்கப்பட்டனர். பேராசிரியர் சிற்றம்பலம் இவ்வாறு கண்டிக்கப்பட்டார்.

> **"சம்பந்தன் தலைமை புலிகளுடன் நிற்பது போலக் காட்டிக் கொண்டு வெளியில்தான் நின்றது. தமது உண்மைச் சொரூபத்தை பிராந்திய வல்லரசுக்கும் சர்வதேச வல்லரசுகளுக்கும் காட்டிக் கொண்டிருந்தது. போரின் உச்ச நிலையில் போரை நிறுத்த சம்பந்தன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இறுதி நேரத்தில் தமது தொலைபேசிகளையும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் நிறுத்தி வைத்திருந்தனர்.**



**4**

மாமனிதர் சிவனேசன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை

மூன்றாவது கட்ட வேலைத்திட்டம் இணக்க அரசியலுக்கான சைகைகளைக் காட்டியமையாகும். இதன் அடிப்படையில்தான் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மே தினம் நடத்தியதுமல்லாமல் ரணிலுடன் இணைந்து சம்பந்தன் சிங்கக் கொடி ஏற்றினார். இங்கு இரண்டு துரோகத்தனங்களை சம்பந்தன் மேற்கொண்டார். ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மேதினத்தைக் கொண்டாடியமை, இரண்டாவது அரச அதிகாரக் கட்டமைப்பில் தமிழ் மக்களுக்கான இடத்தை மறுத்த சிங்கக் கொடியை ரணிலுடன் இணைந்து ஏற்றியமை.

இலங்கையின் அரசுருவாக்கம் என்பது சிங்கள – பௌத்தம் என்ற சிந்தனையின் அடிப்படையில் உருவான அரசுருவாக்கமே. தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் சிங்கள – பௌத்தம் என்பதை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் அரசாங்கத்தை முன் கொண்டு செல்பவர்களே! தமிழ் மக்களை வரலாற்று ரீதியாக ஒடுக்கியதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்கு குறைவானதல்ல. சிங்களக் குடியேற்றங்களிலிருந்து தொடங்கி தேசியக் கொடி, 1977, 1983 இன அழிப்புகள் ஊடாகத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்த 6வது திருத்தம் வரை ஐக்கிய தேசியக் கட்சியின் ஒடுக்கு முறைகள் கொஞ்சநஞ்சமல்ல. தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிப்பதற்கும் கட்சி தயாராக இருந்ததில்லை. இக்கட்சியுடன் இணைந்து மேதினத்தை நடத்த முன்வந்தமை தமிழ்த் தேசிய அரசியலை சிங்கள அரசியலுக்குள் கரைக்கும் முயற்சியே தவிர வேறில்லை.



இலங்கையின் தேசியக்கொடி என்பது அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தமிழ் மக்களை வெளியகற்றிய கொடியே. இக்கொடியில் தமிழ் மக்களையும் முஸ்லீம் மக்களையும் குறிப்பதற்கு இரு சமாந்தரக் கோடுகள் மட்டும் செம்மஞ்சள், பச்சை நிறத்தில் இடப்பட்டன. அதேவேளை வாளேந்திய சிங்கம் இலங்கையின் இறைமையைக் குறித்து நின்றது. இதற்கு வெளியேதான் அங்கு இரு கோடுகளும் இடப்பட்டன. இது இலங்கையின் இறைமைக்கு வெளியே தமிழ் மக்கள் இருப்பதைக் குறித்து நின்றது. குறைந்த பட்சம் வாளேந்திய சிங்கத்திற்குள் தமிழ் மக்களைக் குறிக்கும் கோட்டினை இடுங்கள் என தமிழ்ப் பிரதிநிதிகளினால் முன்வைத்த கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. இதனால் தேசியக் கொடி குழுவிலிருந்த தமிழ்ப் பிரதிநிதி நடேசன் எதிர்ப்பைத் தெரிவித்து வெளியேறியிருந்தார்.

தந்தை செல்வா தேசியக் கொடி வெளிவந்த நாளில் சிங்கக் கொடிக்குப் பதிலாக யாழ்ப்பாணக் கடைசி மன்னன் சங்கிலியனின் நந்திக் கொடியை தனது காரில் ஏற்றி கொழும்பு வீதிகளில் வலம் வந்தார். தொடர்ந்து சிங்கக் கொடியை தமிழ் மக்கள் புறக்கணித்து வந்தனர். வட- கிழக்கில் நடைபெறுகின்ற அரச விழாக்களைத் தவிர ஏனைய விழாக்களில் தேசியக் கொடி ஏற்றப்படுவதில்லை. இந்தச் சிங்கக் கொடியைத்தான் ரணிலுடன் இணைந்து சம்பந்தன் ஏற்றியிருந்தார்.

சம்பந்தனின் இந்த இணக்க அரசியல் பின்னர் சுதந்திர தினத்தில் கலந்து கொள்வதாக வளர்ந்து மைத்திரி அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கத்தவரானதுடன்உச்ச நிலைக்குச் சென்றது. தற்போது அதையும் தாண்டி இனப்படு கொலையாளி சந்திரிகாவை தந்தை செல்வா நினைவுப் பேருரை ஆற்ற அழைக்கும் அளவிற்கு சென்றுள்ளது. இதனூடாக தமது துரோகத்தனங்களுக்கு தந்தை செல்வாவையும் பங்காளியாக்கியுள்ளது.

சுதந்திர தினம் என்பது இலங்கை அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தமிழ் மக்களை வெளித்தள்ளிய தினமே. இங்கு சுதந்திரம் பேரினவாத சக்திகளுக்கே வழங்கப்பட்டது. அவர்கள் அச் சுதந்திர தினத்தைப் பயன்படுத்தியே தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இலங்கை அரசினை சிங்கள பௌத்த அரசாக்குவதில் முன்னேறினர்.

*(தொடரும்)*

கேள்வி : தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு வெகுஜனப் பங்கேற்பு இருக்கவில்லை. அது வெகுஜனத் தன்மை பெறவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே முன்வைக்கப்படுகின்றது. இந்தத் தவறு வரலாற்றில் ஏன் இடம்பெற்றது? இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்?

பதில்: சமூகவியலாளர்களும், மானுடவியலாளர்களும் அந்தத் துறை சார்ந்த ஏனைய அறிஞர்களும் ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய விடயமிது. ஏனெனில் ஆயுதப் போராட்டக் காலத்திலும் வெகுஜனப் பங்களிப்பு குறைவாகவேயிருந்தது. மிதவாதிகளிடமும் அவ்வாறான வெகுஜனப் பங்களிப்பு இருக்கவில்லை. அவ்வாறிருந்தால் அவர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு வழி விட்டிருக்கமாட்டார்கள். அகிம்சைப் போராட்டத்தின் தோல்வியால்தான் ஆயுதப் போராட்டம் உருவாகியது என எங்களிடம் ஒரு தவறான கருத்துக் காணப்படுகிறது. அகிம்சைப் போராட்டமே நடக்கவில்லை என்றுதான் நான் கூறுவேன். எங்களுடைய அகிம்சைப் போராளிகள் அகிம்சைப் போராட்டத்தைச் சாகப் பயந்தவனின் ஆயுதமாகத்தான் கையாண்டார்கள். சாகத் துணிந்தவனின் ஆயுதமாக அவர்கள் கையாளவில்லை. அவ்வாறு கையாண்டிருந்தால் சாகத் துணிந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகியிருக்காது. எங்களுடைய மிதவாதிகள் சாகத் துணியவில்லை. இன்றும் இதேதான் நிலைமை. இடையிலே உருவாகிய ஆயுதப் போராட்டம் சாகத் துணிந்த போராட்டமாகவிருந்தது. ஆனாலும் அது இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டுவிட்டது. மோசமான பேரழிவுக்குப் பின்னரும் இந்த நிலைமை நீடிக்கும் காரணத்தால் தமிழ்த் தரப்புக்குத் தலைமை தாங்கும் எல்லோரும் இந்த விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் ஆகியோர் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலுள்ள பத்திரிகைகள் பொறுப்பேற்க வேண்டும்.

ஊடகங்களும் கூடக் கதாநாயகர்களைக் கட்டியெழுப்புவதிலும் தனிமனித ஆளுமைகளைக் கட்டியெழுப்புவதிலும் தாங்கள் செய்யாததை வேறொருவர் செய்யும்போது அதனை தூண்டுவதிலும்தான் கவனம் செலுத்துகின்றனவே தவிர மெய்யான பொருளில் வெகுசனப் பங்களிப்பை ஊடகங்களும் ஊக்குவிக்கும் வகையில் செயற்படவில்லை. வெகுஜனப் பங்களிப்புக் குறித்துச் சரியான தரிசனமுடைய ஊடக சக்தி இனித்தான் எழ வேண்டியுள்ளது.

கடந்த அறுபது ஆண்டு காலமாகப் பெற்ற படிப்பினைகளின் அடிப்படையில் இந்தத் தகவல் யுகத்திற்கு முற்றிலும் ஏற்ற வகையிலான வெகுசனப் பங்களிப்புக் குறித்து சரியான தரிசனமுடைய மென்சக்தி இனித்தான் எழுச்சி பெற வேண்டியுள்ளது.

கேள்வி : தமிழ் அரசியலின் வரலாற்றை நோக்கும்போது அரசியல் இயக்கங்களின் அமைப்புத்துறை மிகவும் பலவீனமாகவே இருந்தது. ஜனநாயகப் பொறிமுறைகள் எதுவும் பெரிதாக இருக்கவில்லை உட்கட்சிப் போராட்டத்திற்கான வழிகளிருக்கவில்லை. தனி நபர் ஆதிக்கமும் அதிகமாக இருந்தன. இந்த அமைப்புத்துறை நெருக்கடியைத் தீர்ப்பது எப்படி?

பதில் : தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தைப் பற்றியும், மக்கள் பங்கேற்புப் பற்றியும் அல்லது வெகுசனத் தரிசனமுடைய ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள் பெருமளவுக்கு இல்லை என்றே கூறலாம். தமிழ் மக்கள் மத்தியில் செயற்பாட்டு வெளி என்பதே சுருங்கிப் போனதொரு வெளியாகவே காணப்படுகிறது. இதற்கு ஆயுதப் போராட்டமும் ஒரு காரணம். இருந்தாலும் ஆயுதப் போராட்டமும் ஒரு காரணமென்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே வெகுசன பங்களிப்புக் குறைந்த, ஜனநாயகத்தைப் பற்றிய பூரண விளக்கமற்ற ஒரு அரசியலைத்தான் நடத்தி வந்திருக்கின்றார்கள். இதிலே மிதவாதிகளும் விலக்கல்ல. ஆயுதமேந்திய தரப்புக்களும் விலக்கல்ல.

அதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். ஒன்று இயல்பிலேயே தமிழ் மக்கள் மத்தியில் சரியான ஜனநாயகத் தரிசனமில்லை. ஜனநாயகத்தைப் பற்றிய விளக்கம் போதுமானதாகவிருக்கவில்லை. தேர்தலில் வாக்களிப்பதை மாத்திரமே தமிழ் மக்கள் தங்களுடைய ஜனநாயகப் பங்களிப்பாகக் கருதுகிறார்கள். அதற்கு மேல் தமிழ் மக்கள் மத்தியில் பங்கேற்பு ஜனநாயகம் என்பது வளர்ச்சி பெறவில்லை. இதற்கு முதலாவதாக அரசியற் கட்சிகள் செயற்பாட்டாளர்கள் பொறுப்பு.

இரண்டாவதாக ஜனநாயகமென்றால் என்ன? தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்திலிருக்கக் கூடிய பற்றாக்குறைகள் என்ன? போதாமைகள் என்ன? என்பன தொடர்பில் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. புத்திஜீவிகளும், அறிஞர்களும் இந்த விடயத்தில் உரிய பங்களிப்பைச் செய்யவில்லை. கருத்துருவாக்கிகள் என்று சொல்லப்படுகிறவர்களும் பங்களிப்பை வழங்கவில்லை. தமிழ்க் கல்வியியலாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள், செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் இவை அனைத்தும் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்புக்களை வழங்கவில்லை. செயற்பாட்டாளர்கள் என்று சொல்லக் கூடியவர்களாகத் தமிழ் மக்கள் மத்தியில் குறைந்த எண்ணிக்கையுடைய சிலரே காணப்படுகின்றனர்.

எங்களின் பள்ளிக்கூடம், வீட்டின் சமையலறை, வரவேற்பறை, அலுவலகங்கள், வைத்தியசாலைகள், சமூகத்திலே காணப்படுகின்ற பொது நிறுவனங்கள் என்பவற்றில் ஒன்றில் கூட ஜனநாயகமில்லை. இதைத் தமிழ் மிதவாதிகளும் பிரதிபலித்தார்கள். பின்னர் வந்த ஆயுதமேந்தியவர்களும் பிரதிபலித்தார்கள். ஆயுதப் போராட்டம்தான் எல்லாவற்றுக்கும் காரணமென்று கூறுகின்ற தமிழ் மிதவாதிகளும் கூடக் கடந்த ஆறு ஆண்டுகளாக தங்களுடைய கட்சிக்குள் ஜனநாயக உட்கட்டுமானங்களை வளர்த்தெடுக்கத் தவறிவிட்டார்கள். முடிவுகள் கீழிருந்து மேல்நோக்கியே எடுக்கப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ்த் தீவிரவாதத்திலிருந்து நாங்கள் பிரிந்து வந்துவிட்டோம். ஆயுதப் போராட்டத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறிக் கொள்கிற தமிழ் மிதவாதிகள் தங்கள் கட்சியை முழுமையான ஜனநாயகக் கட்டமைப்புக்கள் கொண்டதொரு கட்சியாகக் கட்டியெழுப்பவில்லை. கட்சிகளுக்குள்ளும் முடிவுகள் என்பது ஒரு சிலரால் மாத்திரம் மூடப்பட்ட அறைக்குள்ளும் எடுக்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

முடிவுகள் மேலிருந்து கீழ்நோக்கித் திணிக்கப்படுகின்றன. கீழ் மட்டத்திலிருப்பவர்கள் முடிவுகளை ஏற்குமாறு வற்புறுத்தப்படுகின்றனர். இதற்காக வேறு விதமான பேரங்கள் பேசப்படுகின்றன. நிலையான நலன்களின் அடிப்படையில் விட்டுக் கொடுப்புக்கள் நிகழ்கின்றன. முறையான ஜனநாயகப் பங்களிப்புடன் கீழிருந்து மேல் நோக்கி முடிவுகள் எடுக்கப்படவில்லை. கடந்த ஆறு ஆண்டுகளிலும் தமிழ் மிதவாதிகள் இந்த விடயத்தில் தோற்றுவிட்டார்கள். சமூகக் கட்டமைப்புக்களிலும் இவ்வாறான பிரச்சினை காணப்படுகின்றது. சமூகக் கட்டமைப்புக்குள் உள்ளடங்கும் அனைத்து இடங்களிலும் ஜனநாயகக் கட்டமைப்பு என்பது பலவீனமாகத்தானுள்ளது.

ஆகவே, இது தொடர்பில் முழுமையான ஆய்வு, கலந்துரையாடல் என்பன நடத்தப்பட வேண்டிய தேவை எங்களிடமிருக்கிறது. இந்தப் போதாமைகள்தான் ஆயுதப் போராட்டத்திலும் எதிரொலித்தது என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆயுதப் போராட்டத்தை வெளித் தரப்புகள் தங்களுடைய நலனுக்காக அதிலும் குறிப்பாக இந்தியா அவ்வாறு பயன்படுத்த முற்பட்டபோது ஆயுதப் போராட்டம் தன்னுடைய இயல்பான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்க முடியவில்லை.

அடுத்தது தமிழ்த் தேசியம் என எதனை நாங்கள் கருதுகிறோம் என்பதிலும் பிரச்சினை. எமது தமிழ்த் தேசியத்தின் பிரதான உள்ளடக்கமாக இருப்பது தமிழ் இனமான அரசியல்தான். ஆனால் மேற் கத்தைய அனுபவத்தின்படி தேசியத்தின் உள்ளடக்கம் ஜனநாயகம் என்பதேயாகும். ஆனால் எங்களுடைய அனுபவத்தின்படி தேசியத்தை விடவும் தமிழ் இனமான அரசியல் என்பதே முக்கியத்துவமானது. சிங்கள இனத்தின் பெரும்பான்மை யினரை முதன்மைப் படுத்துவதற்கெதிராக சிறிய இனம் எடுத்துக் கொண்ட தற்காப்புக் கவசமாகத்தான் தமிழ்த் தேசிய அரசியல் இன்றுவரை காணப்படுகின்றது. தமிழினம் தன்னு டைய அடிப்படை மூலக் கூறான ஜன நாயகத்தையே பலப்படுத்தத் தவறிவிட்டது. இதனால்தான் ஆயுதப் போராட்ட இயக் கங்களுக்குள் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டன.

மொத்தத்தில் தமிழ்த் தேசிய ஜனநாயக உள்ளடக்கக் கட்டமைப்பின் போதாமைக்கு ஆயுதப் போராட்டத்தை மாத்திரம் நாம் குறை சொல்ல முடியாது. ஏனெனில், இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் பாரம்பரியமாகவே இருந்து வருகிறது. ஆகவே தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தைப் பற்றியும் மக்கள் பங்களிப்பைப் பற்றியும் முறையான ஆய்வுகளும், எழுத்துக்களும் பிரசவமாக வேண்டும். அவ்வாறான நிலை ஏற்படும்போதுதான் தமிழ் மக்கள் தங்களுக்குரிய தீர்வு என்ன? என்பதற்கான விடையைக் கண்டுபிடிக்க முடியும். அடுத்த கட்டம் நோக்கி நகர முடியும்.


கேள்வி : நீங்கள் தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படை மூலக் கூறுகளைக் கூடப் பலப்படுத்தாத நிலைமையே காணப்படுகின்றது என்று கூறுகிறீர்கள். இவ்வாறான சூழ்நிலையில் அதனைப் பலப்படுத்துவதற்குத் தமிழர் தரப்பு என்ன செய்ய வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?

பதில் : தற்போது தமிழ் மக்கள் தங்களை சிறுபான்மையினராகச் சிந்திக்கின்றனரா அல்லது தேசிய இனமாகச் சிந்திக்கின்றனரா என்பதில் குழப்ப நிலையுள்ளது. சிறுபான்மை இனமாக எங்களை நாங்களே சிந்திக்கக் கூடாது. அவ்வாறு சிந்தித்தால் அதிகாரப் பரவலாக்கம் என்கிற சட்டகத்திற்குள், பொறிமுறைக்குள் அகப்பட்டுக் கரைந்து நீர்த்துப் போய்விடுவோம். இதனைத்தான் வெளிச் சக்திகளும் விரும்புகின்றன. ஆகவே, இந்த விடயத்திலே நாங்கள் கவனமாகவிருக்கவேண்டும். தமிழ் மக்கள் தங்களையொரு தேசிய இனமாகச் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் தங்களையொரு தேசிய இனமாகச் சிந்திப்பது எப்படி? தற்போது புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களும், உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களும் தங்களையொரு தேசிய இனமாகச் சிந்திக்க வேண்டும். நாங்கள் எங்களுடைய நிலம் என்று பார்த்தால் எங்கள் நிலம் முழுவதும் எம் கட்டுப்பாட்டிலில்லை. அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய அதிகாரமும் எங்களிடத்திலில்லை. மக்கள் தொகையைப் பார்த்தால் கூட அவர்கள் சிதறியே வாழ்கின்றனர். எங்களில் எத்தனைபேர் வன்னியின் உட்கிராமங்களுக்குள் சென்று குடியேறத் தயார்? எத்தனை பேர் தீவுப் பகுதிகளுக்குச் சென்று குடியேறத் தயார்? எங்களில் எத்தனை பேர் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியைக் கைவிட்டு கிராமங்களில் வசிக்கத்தயார்?

தற்போது எல்லைப்புறக் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் குறித்து நாங்கள் விவாதிக்கிறோம். ஆனால் எல்லைப்புறக் கிராமங்களில் தமிழ் மக்களைக் கொண்டு சென்று குடியேற்ற முடியுமா? வன்னியிலே இப்போது ஆட்செறிவு குறைந்த கிராமங்கள் நிறையவேயிருக்கின்றன. இவ்வாறான கிராமங்களில் நகர மையமாகச் சிந்திக்கக் கூடிய எங்களுடைய மக்களைக் குடியேற்ற முடியுமா? ஆகவே, தேசிய சனத்திரளைப் பரவலாக்கம் என்பதே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படவில்லை.


ஒரு தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து குடியேற்றங்களை உருவாக்குதல், புதிய கிராமங்களை உருவாக்குதல், சனத்தொகையைப் பேணுவது போன்ற விடயங்களில் கூட தமிழ் மக்களிடம் முறையான திட்டங்களில்லை. இது பற்றிய நீண்ட நோக்கிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**“ஒரு தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து குடியேற்றங்களை உருவாக்குதல், புதிய கிராமங்களை உருவாக்குதல், சனத்தொகையைப் பேணுவது போன்ற விடயங்களில் கூட தமிழ் மக்களிடம் முறையான திட்டங்கள் இல்லை. இது பற்றிய நீண்ட நோக்கிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.**



# இலங்கையில் இணக்க அரசியல் தோல்வியடைந்துள்ளது

## சமூக ஆய்வாளர் நிலாந்தனுடன் ஒரு நேர்காணல்



**ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் எல்லைகள், பாதைகள் எல்லாம் திறக்கப்பட்டு விட்டன. தமிழ்மக்கள் முழுக்க முழுக்க வெளிசக்திகளுக்குத் திறக்கப்பட்டு விட்டார்கள். இன்னும் சரியாகச் சொல்வதானால் தமிழ் மக்கள் திறந்த சந்தைப்பொருளாதாரத்தில் கூறுகளுக்கு திறக்கப்பட்டு விட்டனர்.**

**நேர்கண்டவர்:**
**செல்வநாயகம் ரவிசாந்**

சிங்கள மக்கள் தங்களுடைய நோக்கு நிலையிலிருந்து நீண்டகால நலன்கள் குறித்துச் சிந்திக்கிறார்கள். இதன் மூலம் கடந்த அறுபதாண்டு காலமாக அவர்கள் பல மூலோபாயங்களை வகுத்துச் செயற்படுகிறார்கள. சிங்கள அரசாங்கங்கள் இந்த விடயத்தில் தீர்க்க தரிசனமாகச் செயற்பட்டு அதனைக் கைக் கொண்டும் வருகின்றன. கிழக்கு மாகாணத்திலே அவர்கள் குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றுமிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்த விடயத்தில் தீர்க்கமானதொரு முடிவை எடுக்கவில்லை. முன்னர் அச்சுறுத்தல்சூழ் நிலையிலிருந்த காரணத்தால் குடியேற்றங்களை ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியதாகவிருந்தது. கடந்த ஆறு ஆண்டு காலமாக தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான சூழ்நிலை காணப்படவில்லை. நிலம் தமிழ் மக்களின் கட்டுப்பாட்டிலில்லை. பொருளாதாரத்தைப் பொறுத்த வரையிலும் உலகம் முழுவதும் இன்று திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் ஓரலகாகிவிட்டது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் எல்லைகள், பாதைகளெல்லாம் திறக்கப்பட்டு விட்டன. தமிழ்மக்கள் முழுக்கமுழுக்க வெளிசக்திகளுக்குத் திறக்கப்பட்டு விட்டார்கள். இன்னும் சரியாகச் சொல்வதானால் தமிழ் மக்கள் திறந்த சந்தைப்பொருளாதாரத்தில் கூறுகளுக்கு திறக்கப்பட்டு விட்டனர். நிதி மூலதனப் படர்ச்சி தங்குதடையின்றி மேற்கொள்ளும் வகையில் எல்லாக் கதவுகளும் தங்குதடையின்றித் திறக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் தற்போது உலகளாவிய சந்தைக்குள் வந்துவிட்டார்கள். இந்த நிலையில் தேசிய நோக்கு நிலையிலிருந்து தங்களுடைய சந்தையைப் பாதுகாப்பதற்குக் கூடச் சக்தியற்றவர்களாகவே தமிழ் மக்கள் காணப்படுகிறார்கள். அவ்வாறு பார்த்தால் தமிழ் மக்கள் தங்களுடைய தாயகத்தை சனத்தொகையை, பொருளாதாரத்தை, பண்பாட்டை, தங்கள் மொழியின் தனித்துவத்தை, தமிழ் மக்கள் தங்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தக் கூடிய கூறுகள் எதனையும் பாதுகாக்க முடியாத கட்டத்திலிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது எவ்வாறு? என்ற வினாவுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும். தேசியம் என்று வரும்போது நாங்கள் தேசியம் என எதனைக் கருதுகிறோம் எனச் சிந்திக்க வேண்டும். எங்களுக்குத் தேசியம் என்பதே பெருமளவுக்கு இனமான அரசியலாகத்தான் விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப் பிரக்ஞை. அந்தக் கூட்டுப் பிரக்ஞை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ் இனமான உணர்வின் கூட்டுத் தொகுதியாகத்தான் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் ஐரோப்பிய அனுபவத்தின்படி அந்தக் கூட்டுப் பிரக்ஞை அதிகபட்சம் ஜனநாயக உள்ளீட்டால் ஒளியேற்றப்பட வேண்டும். ஆகவே, நாங்கள் அதிகமான ஒளியைப் பாய்ச்சி தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கத்தை பிரகாசமாக்குகிறோமோ அதற்கேற்ப அங்கே காணப்படுகிற இருளான கருத்துக்கள், மயக்கமான பகுதிகள் அகற்றப்படும். இதனை நாங்கள் கடந்த ஆறு ஆண்டு காலமாகச் செய்வதற்குத் தவறிவிட்டோம்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இன மாகச் சிந்திப்பது என்பது தேசிய இனமென்றால் என்னவென்று விளங்கிக் கொண்டதன் பின்னரே சாத்தியமாகும். தேசியம் என்றால் மக்கள் திரளின் கூட்டுப் பிரக்ஞை. எனவே அந்தக் கூட்டுப் பிரக்ஞை அதிகபட்சம் ஜனநாயகத் தன்மை கொண்டதாகக் காணப்பட வேண்டும். எனவே தமிழ்த் தேசியம் என்பது அதிகபட்சம் ஜனநாயகத்தை அதன் உள்ளடக்கமாகக் கொண்டு காணப்பட வேண்டும். அவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியம் என்பது உட்சுருங்காததாகவும் வெளிவிரியும் தன்மை கொண்டதாகவும், ஏனைய தேசியங்களுக்கு அச்சுறுத்தல் அற்றதாகவும், ஏனையவர்களின் இருப்பை ஏற்றுக் கொள்வதாகவும் அனைத்துலகக் கவர்ச்சி மிக்கதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு பார்க்கும்போது தமிழ் மக்கள் தங்களையொரு தேசிய இனமாகச் சிந்திக்கும்போது தேசியத்தின் அடித்தளம் எது? உள்ளடக்கம் எது? என்பதைக் கண்டு பிடிப்பதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

தேசிய உள்ளடக்கமென்பது ஜனநாயகம். ஆகவே தமிழ்மக்கள் தங்களுடைய ஜனநாயக மூலக் கூறுகளைப் பலப்படுத்த வேண்டும். தங்களுடைய ஜனநாயக உட்கட்டுமானங்களைப் பலப்படுத்த வேண்டும். இயன்றளவு சமூகத்திலேயுள்ள எல்லா மட்டங்களிலும் ஜனநாயகக் கட்டுமானங்களை நிறுவ வேண்டும். பாடசாலை, சனசமூக நிலையங்கள், சிவில் அமைப்புக்கள் என அனைத்திலும் நிறுவுவதுடன் அது தொடர்பான உரையாடல்களையும் நிகழ்த்த வேண்டும். உரையாடல்கள் மூலமாகத் தமிழ் மக்கள் தங்களையொரு இறுக்கமான தேசிய இனமாகக் கட்டியெழுப்ப முடியும்.

தமிழ் மக்கள் தேசிய இனம் தொடர்பில் தங்களுக்குள் கலந்துரையாடிய பின் தேசியம் என எதனைக் கருதுகிறோம் என்கிற பிரயோக வடிவமானதொரு முடிவுக்கு வர வேண்டும். கற்பனை வேண்டாம்.

இவ்வாறு பிரயோகவடிவமானதொரு முடிவுக்கு வந்த பின்னர் மக்கள் கூட்டுப் பிரக்ஞையான தேசியத்தை அதிகபட்சம் ஜனநாயகத்தால் பிரதியீடு செய்யும்போது அது அதிகம் வெளிவிரியும் தன்மையுடையதாக மாறும். ஆகவே தேசியத்தை நாங்கள் எவ்வாறு பிரதியீடு செய்கிறோம் என்பது முக்கியம். ஜனநாயகத்தால் பிரதியீடு செய்தல் என்பதை நோக்கும்போது தமிழ் மக்களுடைய தேசிய அடிப்படைகள் பலப்படுத்தப்பட வேண்டும். ஜனநாயக அடிப்படைகள் கிராமங்கள் தோறும், நகரங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் பலப்படுத்துவது அவசியம்.

தமிழ் மக்கள் ஏன் தேங்கிப் போன அரசியல் நிலைமைக்குக் கடந்த ஆறாண்டு காலமாகத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் நாம் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயக அடிப்படைகளைப் பலப்படுத்துவதைக் கட்சிகள் செய்யாது. ஏனெனில் அவர்கள் பொதுமக்களைச் செயலற்ற வாக்காளர்களாக வைத்திருக்கவே விரும்புவர். தமிழ் நடுத்தர வர்க்கமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தாது, வாக்களித்ததுடன் கடமை முடிந்தது, அடுத்தவரின் பிள்ளைகள் சாகட்டும். அவ்வாறு சாவதை நாங்கள் விசிலடித்து வரவேற்கிறோம் என்கிற நிலைமைதான் காணப்படுகிறது. ஊடக முதலாளிகளிடமும் அவ்வாறான கருத்துக் காணப்படுகிறது. நாங்கள் தமிழ் ஊடகச் செயற்பாட்டாளர்களையும் ஊடக முதலாளிகளையும் எப்போதும் பிரித்துப் பார்க்க வேண்டும். ஊடக முதலாளிகள் எப்போதும் தான் சிந்திப்பான் மார்க்கெற்றுக்குள்ளால்.

ஆனால் ஊடகக்காரன் ஒன்றில் தொழிலுக்குள்ளால் சிந்திப்பான். இல்லாவிடில் இலட் சியத்துக்குள்ளால் சிந்திப்பான். அதற்குள்ளேயும் மார்க்கெற்றுக்குள்ளால் சிந்திப்பவனுமுண்டு. அவர்கள் முதலாளிகளுக்கு நெருக்கமானவர்களாக மாறிவிடுவார்கள். நாங்கள் ஊடக முதலாளிகளை விட்டு விட்டு ஊடகச் செயற்பாட்டாளர்களை இணைத்து ஜனநாயக அடிப்படைகளைப் பலப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மாத்தி ரமே தமிழ்த் தேசிய அடிப்படைகளும் பலம்பெறும்.

நாங்கள் தேசிய இனமாகச் சிந்திக்கத் தவறும் பட்சத்தில் சிறுபான்மையினர் என்கிற நிலையில் அதிகாரப் பரவலாக்கம் என்ற பொறிக்குள் சிக்கிக் கரைந்து நீர்த்து அமிழ்ந்து போய்விடுவோம்.

(தொடரும்)

# திருடியது ராஜபக்ச இல்லையேல் வேறு யார்?

டிரன் குமார பங்கமாரச்சி
இது நம் தேசத்திற்காக
தமிழில் – நப்ராஷா ராஜ்குமார்
நன்றி – ராவய

பசில் ராஜபக்ச அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டமையும் அதன் பின்பு வழமை போல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்தியும் இன்றைய நாட்களில் மிகவும் பிரபல்யமாக பேசப்படும் செய்திக் குறிப்புகளாகும். அரசியல் செல்வாக்குள்ள நபரொருவர் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது இக்கால வழமையாகிவிட்டது. இவ்வழமையின் புதிய வடிவமே பசில் ராஜபக்ச அவர்களாவார்.

ஜனாதிபதி தேர்தலின் முதற்கட்ட முடிவுகள் வெளியிடப்பட்ட மறு கணமே பசில் ராஜபக்ச அவர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறி கடந்த 100 நாட்களாக அமெரிக்காவில் வசித்து வந்தார். பசில் ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறியவுடன் ஏனைய ராஜபக்ச உறுப்பினர்களின் கதை முடிவுக்கு வந்து விடும். ஆனால் பசில் மட்டும் தப்பித்துவிட்டாரென பலராலும் எதிர்வுகூறப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவில் ஒன்றும் நடைபெறவில்லை.

ராஜபக்ச உறுப்பினர்களை பொறியில் சிக்குறச்செய்வது இலகுவான காரியமல்ல என்பது தெட்டத்தெளிவு. இதுவே பசில் ராஜபக்ச மீண்டும் நாடு திரும்புவதற்கு பிரதான ஏதுகாரணியாக அமைந்தது. பசில் நாடு திரும்பிய பொழுது அவரை வரவேற்கக் காத்திருந்த மக்களின் அளவைக் கொண்டே நம்மால் இதனை உறுதிசெய்துகொள்ள முடியும். ஊடகங்களிற்கு கருத்து வெளியிடுகையில் பசில் ராஜபக்ச அவர்கள் பின்வருமாறு கூறினார். அதாவது ..

"ராஜபக்ச குடும்பத்தினர் ஒரு சதத்தினையேனும் திருடவில்லை" தற்சமயம் திருடர்களைப் பிடிப்பதென்பது குப்பையில் கிடக்கும் குண்டுமணியை கண்டெடுப்பது போன்றசிரமமான செயற்பாடாகும். ஒரு சதமேனும் திருடவில்லையென்று கூறிய பசிலே மறு நாளே சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடுவெலை நீதவான் நீதிமன்றமானது பங்குனி மாதம் 30 நாள் பசில் ராஜபக்சவை கைதுசெய்யுமாறு உத்தரவிட்டது. இதன் பொழுது பசிலின் சட்டத்தரணியான யு.ஆர். டி.சில்வாவினால் நிதி குற்றவியல் விசாரணை அதிகாரிகளால் பசில் ராஜபக்ச அவர்கள் விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்படுவதனை நிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை நிராகரித்துவிட்டே நீதிமன்றம் இவ்வழைப்பாணையை விடுத்தது.

ராஜபக்ச அரசாங்கத்தின் அதிகாரமிக்க நபராக விளங்கிய பசில் ராஜபக்ச ஆரம்ப காலங்களில் ஐ.தே.க ஆதரவாளராகத் திகழ்ந்ததுடன் நீண்டகாலமாகவே ஐக்கிய அமெரிக்காவில் வசித்து வந்தார். 2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பொழுது அவர் இலங்கை திரும்பியவுடன் தன்னுடைய சகோதரரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களின் ஆலோசகராக செயற்பட்டு இந்நாட்டு மக்களின் மனங்களில் இடம்பிடித்தார். நாம் இப்படிக் கூறுவதற்குக் காரணம் யாதெனில் உத்தியோகபூர்வமற்ற இந்நாட்டு தலைவனாக பசில் ராஜபக்ச தன்னுடைய ஆற்றலை வளர்த்துக்கொண்டார். தற்சமயம் மஹிந்தவுடன் இருக்கும் அரசியற் தலைவர்களாகட்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகட்டும் அனைவரும் அன்று பசில் முன்னிலையில் பேசா மடந்தைகளாகவே செயற்பட்டனர். ஏனெனில் ஆரம்ப காலத்தில் ஆலோசகராக செயற்பட்ட பசில் ராஜபக்ச அவர்கள் பின் நாட்களில் இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவ்வனைத்துப் பதவிகளையும் மஹிந்த ராஜபக்ச அவர்களே இவருக்குச் சூட்டினார். அக்காலப் பகுதியில் பசில் ஒருவரே ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்தார். ராஜபக்ச குடும்பத்தினர் பிரகாசமாக ஜொலிப்பதில் பசில் முக்கிய பங்காற்றினார் என்பது நம்மால் மறுக்க முடியாத உண்மையாகும். பசில் தன்னுடைய அறிவாற்றலைக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே பிரச்சினைகளைத் தோற்றுவித்து எதிர்க்கட்சிகளின் பலத்தை இந்நாட்டில் குன்றச் செய்தார். இதன் மூலமாக ராஜபக்ச அரசாங்கத்தினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் சூத்திரதாரியாக பசிலே திகழ்ந்தார். எதிர்க்கட்சிகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொண்ட சூத்திரதாரியும் இவரேயாவார். ராஜபக்சவை சந்திக்க விரும்பும் ஒவ்வொருவரும் பசில் ஊடாகவே அவரை அடையவேண்டும். இதன் மூலமாக பசில் பிரதான ஆட்சியாளராக மாறினார். போரிற்குப் பின்னர் கோத்தபாய ராஜபக்ச மஹிந்தவின் பாதுகாப்பு ஆலோசகராகத் திகழ்ந்ததுடன் பசில் ராஜபக்ச அவருடைய அரசியல் ஆலோசகராக விளங்கினார். இவ்விருவரும் மஹிந்த ராஜபக்சவின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினர்.

**இக்காலப்பகுதியில் வர்த்தகத்துறையில் பசில் ராஜபக்ச அவர்கள் "மிஸ்டர் டென் பெர்சன்ட்" என்றே அழைக்கப்பட்டார் என்பது வெளிநாட்டவர் ஒருவரின் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக்கான முன்னாள் ஐக்கியநாடுகள் பிரதிநிதியான கோர்டன் அவர்களினால் எழுதப்பட்ட The Cage எனும் புத்தகத்தில் பசில் ராஜபக்சவை "மிஸ்டர் டென் பெர்சன்ட்" என்றே குறிப்பிடுகின்றார்.**

2010ம் ஆண்டு நேரடியான அரசியல் செயற்பாடுகளில் இறங்கிய பசில் அக்காலத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றிற்குத் தெரிவானினார். இம்மாவட்டத்தில் போட்டியிட்ட ஏனைய போட்டியாளர்கள் தங்களைக் காட்டிலும் பசிலிற்கே மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று கூறும் அளவிற்கு பசில் தன்னுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்தியிருந்தார். கம்பஹா மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற தினம் முதல் அவருடைய செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வளவு காலமும் திரைமறைவில் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் தற்சமயம் நேரடியாகவே மேற்கொண்டார். பசில் ராஜபக்சவிற்கு தன்னுடைய செய்நன்றியினை அறிவிக்கும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி என்கின்ற அமைச்சினை உருவாக்கி அதனை பசிலிற்கு பரிசளித்தார். அது பலம் பொருந்திய அமைச்சாக உருவெடுத்ததுடன் பசிலிற்காகவே உருவாக்கப்பட்ட அமைச்சாகியது.

பசில் ராஜபக்சவிற்குரிய பொருளாதார அமைச்சே இந்நாட்டிலுள்ள சிறு அபிவிருத்தித் திட்டங்கள் முதல் மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியிருந்தது. இவ்வனைத்து



நடவடிக்கைகளிலும் பசில் முக்கிய பங்காற்றியதுடன் இதற்கான அனுமதி மஹிந்த ராஜபக்ச அவர்களினால் இவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

## பத்து வீதம்

இக்காலப்பகுதியில் வர்த்தகத்துறையில் பசில் ராஜபக்ச அவர்கள் "மிஸ்டர் டென் பெர்சன்ட்" என்றே அழைக்கப்பட்டார் என்பது வெளிநாட்டவர் ஒருவரின் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக்கான முன்னாள் ஐக்கியநாடுகள் பிரதிநிதியான கோர்டன் அவர்களினால் எழுதப்பட்ட The Cage எனும் புத்தகத்தில் பசில் ராஜபக்சவை "மிஸ்டர் டென் பெர்சன்ட்" என்றே குறிப்பிடுகின்றார்.

எழுத்தாளர்பின்வருமாறுகூறுவதற்கான காரணம் யாதெனில் இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு திட்டங்களிலும் பத்து வீத கொமிஷன் கட்டாயமாக இவரிற்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் குறித்து ராஜபக்சவினருக்கு எவரேனும் முறையிடுவார்களாயின் அக்குறித்த நபர் தங்களது குடும்பத்திற்கெதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனரெனக் கூறப்பட்டது. இன்றும் இக்குடும்பத்தார் இக்கதையையே கூறுகின்றார்கள்.

## திவி நெகும

திவி நெகும திணைக்களத்தில் காணப்படுகின்ற நிதி மோசடி நடவடிக்கைகளே பசில் ராஜபக்சவிற்கெதிராகக் காணப்படும் பிரதான குற்றச்சாட்டுகளாகும். ரூ.6,500 மில்லியன் பெறுமதியான நிதி மோசடி நடவடிக்கைகள் தொடர்பாக பசில் ராஜபக்ச மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

திவி நெகும திணைக்களத்திற்குச் சொந்தமான இலங்கை வங்கிபத்தரமுல்லை கிளையிலுள்ள கணக்கிலிருந்த 4681 மில்லியன் ரூபாய்கள் எவ்வாறு செலவழிக்கப்பட்டதென்பது இன்று வரையில் நிலவுகின்ற மாபெரும் சந்தேகமாகும்.

வங்கி நிலையான கணக்கு இலக்கம் 76488489 இல் வைப்புச்செய்யப்பட்டிருந்த பணம் 2014ம் ஆண்டு மார்கழி மாதம் 31நாள் அதே வங்கியில் திவி நெகும திணைக்களத்திற்குச் சொந்தமான

(15 ஆம் பக்கம் பார்க்க)



# புஸ்வானமாகிய மைத்திரியின் 100 நாட்கள்

மைத்திரி அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் புஸ்வானமாகி விட்டது. ஏப்ரல் 23 ஆம் திகதியுடன் 100 நாட்கள் முடிவடைந்த போதும் முக்கிய மான வேலைத் திட்டங்களாக பிரச்சாரம் செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், தேர்தல் முறையை மாற்றுதல், அரசியலமைப்புப் பேரவையை நிறுவுதல், தகவல் அறியும் சட்ட மூலத்தை அங்கீகரித்தல் என்பன நடைமுறைக்கு வரவில்லை.

இவை எல்லாம் நடைமுறைக்கு வந்து, ஏப்ரல் 23 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. அவை எதுவும் நடக்கவில்லை. மாறாக அரசியல் பூகம்பமே இடம்பெற்றிருக்கின்றது. மகிந்தரின் மீள் எழுச்சி, ஜே.வி.பி.யின் உடைவு, மைத்திரியின் கட்டுப்பாட்டுக்குள் சுதந்திரக்கட்சியினர் இல்லாமை என் பனவை தான் நடைபெற்றிருக்கின்றன.

19ஆவது, 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தங்கள் நிறைவேறுவதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவு. 19 ஆவது திருத்தம், நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கம் பற்றியும் சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசியலமைப்புப் பேரவை என்பனவற்றின் உருவாக்கம் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் தேர்தல் முறை மாற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்கு தல் அரசியல் யாப்புப் பேரவையை உருவாக்குதல் என்பவற்றைப் பெரிய விவகாரம் ஆக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி முறை நீக்கத்தை தேர்தல் முறை மாற்றத்துடன் நிபந்தனைப் படுத்தியிருக்கிறார்கள். தேர்தல் முறையை மாற்றாமல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கினால் உறுதியற்ற அரசாங் கம் உருவாகும் என அவர்கள் கூறு கின்றனர்.

இவ்வாறு கூறினாலும் பிரதான காரணம் தொகுதி வாரித் தேர்தல் முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குச் சார்பானது என்பதே.

தேர்தல் முறை மாற்றத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் பெரிய அளவிற்கு விரும்பவில்லை. இதற்குக் காரணம் விகி தாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பானது என்பதே. இதைவிட தேர்தல்முறை மாற்றத்தை தமிழ், முஸ்லீம், மலையகக் கட்சிகளும் ஏற்கவில்லை. தமிழ்மக்களுக்கு இது பெரிய பாதிப்பைத் தரப்போவதில்லை என்றாலும் மலையக மக்களையும் வடகிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லீம் மக்களையும் இது நிறையவே பாதிக்கும். அவர்கள் இதனைக் கடுமையாக எதிர்க்கின்றனர். தேர்தல்முறை மாற்றச்சட்டம் தயாரித்தபோது இவர்களது ஆலோசனைகள் கேட்கப்படவில்லை. ஜே.வி.பியும் தேர்தல் முறை மாற்றத்தைக் கடுமையாக எதிர்க்கின்றது. அதனுடைய ஆசனங்களும் வெகுவாகக் குறையலாம்.

மகிந்தரின் மீள் எழுச்சி சாத்தியப் படக் கூடியதாக இருப்பதனால் மைத்திரி கூட ஜனாதிபதி முறை நீக்கத்தை விரும்ப வில்லை போலத் தெரிகின்றது. தேர்தல் இடம் பெற்றால் மகிந்தர் நிச்சயம் போட்டி யிடுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைச் சின்னத்தையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தையும் மைத்திரி கைப்பற்றி வைத் திருப்பதால் மகிந்தர் பொதுஜன முன் னணியின் கதிரைச் சின்னத்திலேயே போட்டியிட வாய்ப்புண்டு. அவர் போட்டி யிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 70வீத வாக்கு அவருக்கே அளிக்கப்பட லாம். சந்திரிகாவை பிரதம வேட்பாளராக நிறுத்தினாலும் மைத்திரி தரப்பு 30 வீதத் திற்கு மேல் வாக்குகளைப் பெற முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளைப் பொறுத்தவரை அதன்



பெரும்பான்மையான வாக்குகள் போர் வெற்றியைத் தொடர்ந்து மகிந்தரின் பக்கம் திரும்பியிருந்தது. எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் திரும்பியது. தற்போது அது மீண்டும் மகிந்தரின் பக்கம் சாத்தியமே உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தர் தோற்கடிக்கப்பட்ட முறையை பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஏற்கவில்லை. யுத்த வெற்றி வீரன் தமிழர்களினால் தோற்கடிக்கப்பட்டமையை அவர்கள் ஏற்கத் தயாரில்லை தற்போது இடம்பெறுகின்ற ராஜபக்ச குடும்பத்தின் மீதான விசாரணைகளையும் அவர்கள் ஏற்கவில்லை. அவற்றை ஒரு அரசியல் பழிவாங்கலாகவே அவர்கள் பார்க்கின்ற னர்.

மகிந்தருக்குத் தன் குடும்பத்தின் மீதான விசாரணைகளைத் தடுப்பதற்காவது அதிகாரம் தேவையாக உள்ளது. இதனால் அவர் எப்பாடுபட்டாவது அதிகாரத்தை மீளப் பெறவே முயற்சிப்பார். மகிந்தருக்குப் பின்னால் நிற்கும் சீனாவும் இதற்கான ஒத்துழைப்பினை வழங்கும். தற்போது தென்னிலங்கையில் இடம்பெறும் அரசியல் நிகழ்வுகள் இலங்கைத் தீவினை மையமாக வைத்த புவிசார் அரசியல் போட்டியின் விளைவுகள் என்றே கூறலாம். மகிந்தரின் மீள் எழுச்சி, ஜே.வி.பி.யின் உடைவு, ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சி என அனைத்திற்கும் சீனா பின் நிலை யில் நிற்கின்றது என்ற கருத்து பலமாக அடிபடுகின்றது.

ஜே.வி.பி.யின் உடைவிற்கு முழுக்க முழுக்க சீனாதான் காரணம் என்ற கதை தென்னிலங்கையில் பலமாகவே உள்ளது. தற்போதைய ஜே.வி.பி மைத்திரிக்கு ஆதர வாக இருப்பதனால் ஜே.வி.பியை உடைத்து அதன் முன்னாள் தலைவர் சோமவன்சவினை மைந்தருடன் சேர்க்க சீனா முயல்கின்றது என்றும் கூறப்படு கின்றது.

மொத்தத்தில் மைத்திரி அரசாங்கத்தின் 100 நாள் செயற்பாடுகள் மகிந்தரின் மீள் எழுச்சிக்கும், ஜே.வி.பியின் உடைவிற்கும், ஐ.தே.க வீழ்ச்சிக்கும் வித் துட்டுள்ளதே தவிர மைத்திரி அரசாங்கத் திற்கு பெரிய வெற்றிகள் எதனையும் கொடுக்கவில்லை.

---

(14 ஆம் பக்க தொடர்ச்சி)

(திருடியது.....)

மொபைல் வங்கி சேவை கணக்கு இலக்கமான 3417925 ற்கு மாற்றப்பட்டு பல்வேறுப்பட்ட நபர்களின் பெயர்களிற்கு காசோலை அனுப்பிவைக்கப்பட்டு அதன் மூலமாக கணக்கிலிருந்து இப்பணம் அகற்றப்பட்டுள்ளது. அதுபோலவே அக்குறித்த நிலையான வைப்பிற்குரிய வட்டி வருமானமான ரூ.36.6 மில்லியன் ரூபாய்களும் இவ் மொபைல் வங்கிக்கு மாற்றப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.

இதனைத் தவிர பொரளையிலுள்ள இலங்கை வங்கியில் திவி நெகும அத்தியட்சகரின் பெயரிலிருந்த கணக்கு இலக்கம் 7041562 லிருந்து 2014ம் ஆண்டு மார்கழி மாதம் 22ம் நாள் ரூ580 மில்லியன்களை மற்றும் ரூ.771 மில்லியன் களென இரு முறைகள் வங்கியிலிருந்து பணம் மீளப்பெறப்பட்டுள்ளதுடன் ஒரே முறையில் ரூ.1351 மில்லியன்கள் இவரு டைய கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்டுள் ளது. மேலும் அதே கணக்கிலிருந்து 2014 ம் ஆண்டு மார்கழி மாதம் 09ம் நாள் ரூ.70 மில்லியன்கள் மற்றும் ரூ225 மில்லியன்களென இருமுறை ரூ295 மில்லியன் பணம் மீளப்பெறப்பட்டுள்ளது. இப்பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பசில் ராஜபக்சவிடம் நீண்ட நேர விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும். இவ் விசாரணைகளின் விளைவாகவே பசில் ராஜபக்ச வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டி ருக்கின்றார்.

## ஹர்சவின் கண்டுபிடிப்பு


அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பங்குகொண்டு கருத்துரைக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டிசில்வா பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இடம் பெற்றுள்ள நிதி மோசடிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் தன்னிடம் இருப்பதாக அறிவித்தார். இதற்கு உதாரண மாக இவ்வமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட குளிக்கும் கிணறு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் கருத்துரைத்தார். இவ் வொரு குளியல் கிணறுகளை நிர்மாணிப் பதற்கும் ரூ. 30000-50000 வரையிலான பணம் கணக்கிடப்பட்ட பொழுதும் ஒவ் வொரு கிணற்றிற்கும் ரூ.5 இலட்சம் வரையில் செலவிடப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. சிறு அளவிலான வேலைத்திட்டங்களிலேயே இவ்வாறு பணம் கொள்ளையிடப்பட்டிருக்குமாயின் மாபெரும் திட்டங்களின் பொழுது எவ்வளவு பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்குமென வினவினார். தற்சமயம் இப்பிரச்சினைக் கான தீர்வினை மக்கள் முன்னிலையில் வழங்குவதற்கான காலம் எழுந்துள்ள தென்றும் அவர் குறிப்பிட்டார்.

பசில் ராஜபக்சவை கைதுசெய் வதற்குத் தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பும் கோரப்பட்டது. இதன் காரணமாகவே பசில் இலங்கையை வந்தடைந்தார் என்றும் கூறப்படுகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தல்களின் பொழுது மஹிந்தவின் தோல்விக்கு முழுப் பொறுப்பு பசில் ராஜபக்சவென அவர் சார்ந்த தரப்பினரால் கூறப்பட்டது. இவ்வனைத்து காரணிகளின் அடிப்படையிலும் பசில் நல்லாட்சி எனும் பேய் நாம் நினைத்த அளவிற்கு கருமை இல்லை என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும். அமைதியாக வெளிநாடுசென்ற அவர் நூறு நாட்கள் முடிவடையும் நாளில் சத்தம் எழுப்பிக்கொண்டு இலங்கையை வந்த டைந்தார். இதன் மூலமாக எந்தவொரு நபரையும் முகங்கொடுப்பது அச்சமற்றசெயல் இல்லையென அவர் நன்கறிந்துள்ளார்.

பசில் ராஜபக்சவை மாத்திரம் சிறையில் அடைப்பதன் மூலமாக ராஜபக்ச குடும்பத்தாரின் அனைத்து பாவங்களும் கழுவப்படுவதில்லை பசில் ராஜபக்ச வெறுமனே சூத்திரதாரியாகவில்லை. அவர் ராஜபக்சவினரின் நிலைத்து நிற்ற லிற்காகவே அவ்வாறு செயற்பட்டார். அப்படியாயின் பசில் என்பவர் வெறு-மனே தனி ஒரு நபரா? பசிலின் பெயருடன் தொடர்புடைய ராஜபக்சவினரும் இதற்கு உடன்பாடுடையவர்கள் அன்றோ?

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விற்கு விஜயம் செய்தல், ஊடகங்கள் முன் னிலையில் குற்றஞ்சுமத்துதல், நீதிமன்றம் செல்லுதல், சிறையில் அடைத்தல், அடைக் கப்பட்ட மறுகணமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படல், சிறிது காலத்தின் பின்னர் இப்பிரச்சினைக்கு என்ன நடக்கின்றது என்று தெரியாமலே இருத்தல், மேலும் சிறிது காலத்தின் பின்னர் மக்கள் மத்தியில் வேண்டாப் பேச்சாகவே இப்பிரச்சினை மாறிவிடுகின்றது. ஊடகங்களிற்கு இது நல்ல வேலைப்பளு மிக்க காலமாகும் அவையும் காலத்தால் மழுங்கடிக்கப்பட்டுவிடும். ஆனா லும் பசில் ராஜபக்ச என்ற நபர் ராஜபக்ச அரசாங்கத்தின் சூத்திரதாரி என்பதை ஒரு வரும் மறக்கக்கூடாது. பசில் நாட்டிற்குள் வந்தவுடன் தாங்கள் திருடவில்லையெனக் கூறினார். அப்படியாயின் உண்மையில் திருடியது யார்?

(சென்றவாரத் தொடர்ச்சி)



# கூட்டமைப்புக்கும் ஈ.பி.டி.பிக்கும் வேறுபாடு இல்லை

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் ஒரு நேர்காணல்**

கேள்வி:- புதிய தேர்தல் முறை தமிழ் மக்களுக்குச் சாதகமானதா?

பதில்:- எங்களைப் பொறுத்தவரையில் தேர்தல் முறை மாறலாம். இதில் மாற்றுக் கருத்து இல்லை. எங்களுடைய பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை குறைக்கப்படுமாயின் அது பாதிப்பாக அமையும். அது தவிர்ந்த மார்க்கங்களைச் செய்வதற்கு எங்களைப் பொறுத்தவரையில் வித்தியாசம் கிடையாது.

அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுதான் முக்கியம். அந்தத் தீர்வை விட்டு எந்தத் திட்டங்களைச் செய்தாலும் எங்களைப் பொறுத்தவரையில் எந்தவித சாதகத்தையும் கொடுக்கப் போவதில்லை. இதை எங்களுடன் சம்பந்தப்படாத விடயங்களாக நாங்கள் பார்க்கின்றோம்.

முன்னைய தேர்தல் முறையிலும் தமிழ்த் தேசம் பாதிக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள தேர்தல் முறையிலும் தமிழ்த் தேசம் பாதிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தேர்தல் முறையில் மாற்றம் வந்தாலும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டாமல் இப்படிப்பட்ட திருத்தங்களைச் செய்வதால் ஒரு நாளும் நாங்கள் உணரப் போவதில்லை.

கேள்வி:- சி.வி விக்னேஸ்வரன் அவர்களை கூட்டமைப்புக்குத் தலைமை வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள் அது பற்றிக் குறிப்பிடுக? மீண்டும் நீங்கள் தமிழரசுக் கட்சியுடன் இணைய வாய்ப்புக்கள் இருக்கின்றதா?

பதில்:- இல்லை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அண்மைக்காலங்களில் இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றார்.

அதுதான் தமிழர்களுக்கு இருக்கக் கூடிய தீர்வு என்ற விடயம் எமது கட்சி 2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகியபோது இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டுடன் இருக்கவேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆம் திருத்தத்துடன் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினையை முடக்கப் போகின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்துத்தான் வெளியேறினோம். 5 வருடங்களாக இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற நிலைப்பாட்டோடு தான் செயற்பட்டு வருகின்றோம். அத்துடன் பொறுப்புக் கூறல் என்ற விடயத்தில் இனப்படு கொலைக்கான ஒரு முழுமையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கேட்கின்றோம். விசாரணை என்பது வெறுமனே போர் நடைபெற்ற இறுதிப்பகுதியில் மட்டுமல்லாது 1948 ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக விசாரிக்கப்படவேண்டும் என்பது தான் எமது அடிப்படை நிலைப்பாடாக இருந்திருக்கின்றது. பொறுப்புக் கூறல் தொடர்பாக விக்னேஸ்வரன் ஐயாவும் இதே அடிப்படையில் ஒரு தீர்மானத்தைத் தானாக முன்மொழிந்து வடமாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். அந்த வகையில் விக்னேஸ்வரன் ஐயாவின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் விக்னேஸ்வரன் ஐயா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அல்ல. விக்னேஸ்வரன் ஐயா அதற்குள் நின்று கொண்டு இரண்டு தேசங்கள் ஒரு நாடு, இனப்படுகொலைத் தீர்மானம் என்பவற்றை நிறைவேற்றினாலும் ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு சம்பந்தன் ஐயா அல்லது சுமந்திரன் அவர்கள் சொல்லுகின்ற செயற்பாடாகத்தான் இருக்கப் போகின்றது. சரியான நிலைப்பாட்டைக் கூறுவதன் ஊடாக இது விக்னேஸ்வரன் ஐயாவினுடைய தனிப்பட்ட நிலைப்பாடாகத்தான் இருக்க முடியும். கட்சியினுடைய நிலைப்பாடாக இருக்க முடியாது. கட்சியினுடைய நிலைப்பாட்டைக் கூறாமல் தனிப்பட்ட நிலைப்பாட்டைக் கூறி வருவதன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றுவது மட்டும் தான் மிச்சம். அவர் கட்சியின் தலைமைப் பதவியை எடுத்து இவ் விடயங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அந்த பட்சத்தில் நாங்கள் அவர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகக் கூறியிருக்கின்றோம். அல்லது தலைமைப் பதவியைக் கைப்பற்றமுடியாவிட்டால் அவர் கூட்டமைப்பை விட்டு வெளியில் வர வேண்டும். அப்போது நாங்கள் அனைவரும் அவருடன் இணைந்து செயற்படுவோம். தொடர்ந்து கூட்டமைப்புக்குள் நின்று கொண்டு கூட்டமைப்புடைய நிலைப்பாடாக மாறாது வெறுமனே இந்த விடயங்களைப் பேசுவது ஏமாற்றாகக் கருதப் போகின்றோம் என்பதைப் பகிரங்கமாகக் குறிப்பிடுகின்றோம். இது வெறுமனே தேர்தல் நாடகமாகவும் இருக்கலாம் என்பதையும் மக்களுக்குக் குறிப்பிடுகின்றோம். ஆனால் விக்னேஸ்வரன் ஐயாவால் ஆக்கபூர்வமான மாற்றம் வரலாம் என்று நாங்கள் நம்புகின்றோம்.

கேள்வி:- தமிழ்த் தேசியப்பிரச்சிணை தொடர்பாக புலம் பெயர் தமிழர்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்ல தாயகத்திலுள்ள தமிழர்களும் கூட தமிழ்த் தேசிய முன்னணியின் நிலைப்பாட்டுடன் தான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இருக்கின்ற குழப்பம் என்னவென்றால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் தலைவரால் விரும்பி உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு. அவர்களும் இதே நிலைப்பாட்டில்தான் இருப்பார்கள் என்ற நம்பிக்கையால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள். கூட்டமைப்பு இந்த நிலைப்பாட்டுடன் இல்லை. ஈ.பி.டி.பியின் நிலைப்பாட்டுடன் தான் இருக்கின்றது. தேசியம் வெறுமனே மக்களை ஏமாற்றுவதாகப் பேசப்படுகின்றது என்று எப்போது மக்கள் உணர்கின்றார்களோ அண்டைக்கு உண்மையான மக்களின் நிலைப்பாடு எங்களுடன் தான் என்பது உணரப்படும்.

> “ விக்னேஸ்வரன் ஐயா அதற்குள் நின்று கொண்டு இரண்டு தேசங்கள் ஒரு நாடு, இனப்படு கொலைத் தீர்மானம் என்பவற்றை நிறைவேற்றி னாலும் ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு சம்பந்தன் ஐயா அல்லது சுமந்திரன் அவர்கள் சொல்லுகின்ற செயற்பாடாகத்தான் இருக்கப் போகின்றது.

கேள்வி:- வலி. வடக்கு நிலக்கீழ் மாசு தொடர்பான பிரச்சினை பற்றிக் குறிப்பிடுக? இப்பிரச்சினையின் பின்புலத்தில் அரசியல் இருக்கின்றதா?

பதில்:- எந்தவிதமான அரசியலும் இல்லை. இது மக்களின் பிரச்சினை. இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒயில் கழிவுகள் இன்றைக்கு இருந்துவிட்டு நாளைக்கு இல்லாமல் போகும் விடயம் அல்ல. அது சந்ததிகளைப் பாதிக்கக் கூடிய விடயம். புற்றுநோய் போன்ற மிக மோசமான நோய்களை ஏற்படுத்தக் கூடியது. இது அனைவருக்கும் தெரியும். எங்களுடைய நிலைப்பாடு மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும். நீதிமன்றம் முழுமையான விசாரணை நடத்த வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். நடுநிலையான முழுமையான விசாரணையின்றி மக்கள் அந்நீரைப் பருகுவது ஆபத்தான விடயமாக நாங்கள் கருதுகின்றோம்.

கேள்வி:- தமிழ் மக்களிற்கான தீர்வு என்று எதை நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்:- இனப்பிரச்சினை என்பது தமிழ்த் தேசம் என்பதைத் திட்டமிட்டு அழிப்பது. கடந்த 65 வருடங்களாக இது தான்நடந்து கொண்டு இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ்த் தேசம் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்துவது தான். இனப்பிரச்சினைக்கான தீர்வு தேசம் என்ற அங்கீகாரம் கிடைத்தே ஆகவேண்டும்.

தேசம் என்பது கற்பனை, தமிழ்த் தேசம் என்பதை கேட்கமுடியாது. கேட்கவும் கூடாது. நடைமுறைச் சாத்தியமான தீர்வு இணக்க அரசியல் தான் என்று கூறுகின்ற அத்தனை தரப்புக்களையும் மக்கள் கண்டறிந்து நிராகரிக்க வேண்டும்.

அது தான் இருக்கக்கூடிய ஒரே தீர்வு. அவ்வாறு நிராகரிக்க வேண்டிய தரப்புகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு பிரதான தரப்பு. அவர்களுடைய தலைவர் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார் தேசம் என்று பேசுவதெல்லாம் நடைமுறைச் சாத்தியமில்லாத அரசியல் என்று. மக்கள் தெளிவாக முடிவெடுப்பதுதான் அவர்களது எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும்.

(நன்றி : தமிழ்த்தந்தி)

# அழிக்கப்பட்ட கிராமம்

## ஏறாவூர்

எஸ்.ஜெயானந்தமூர்த்தி

மட்டக்களப்பு – திருமலை வீதியில் உள்ளது ஏறாவூர் கிராமம். இங்கு தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அருகருகாக அமைந்துள்ளன. கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைக்கிராமங்களுக்கு நடந்த அதே அனர்த்தங்களும் ஆக்கிரமிப்புகளுமே இக்கிராமத்திற்கும் நிகழ்ந்தது.

கடந்த 1983 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்திலிருந்தே எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா படையினராலும் சிங்களக் காடையர்களாலும் ஊர்காவல் படையினராலும் திட்டமிட்ட முறையில் துரத்தியழிக்கப்பட்டனர். அக்கால கட்டத்தில் இச்சம்பவங்கள் பொதுவாக மாவட்டத்தின் சிங்களக் கிராமங்களை அண்டியிருந்த எல்லைப்புறங்களிலேயே நிகழ்ந்தன. ஆனால் 90 ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான வேளையில் மாவட்டத்தின் எல்லைப்புறங்களில் எஞ்சியிருந்த கிராமங்கள் தவிர நகரை அண்டியதாக இருந்த தமிழ் - முஸ்லிம் எல்லைக் கிராமங்களுக்கும் அதே கதிதான் நடந்தது.

அது ஒரு பெரிய நிலப்பரப்பைக் கொண்ட கிராமம். நான்காம் ஐந்தாம் குறிச்சி உள்ளிட்ட பகுதி அது. ஏறாவூர் நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் இருந்தன. அதிலும் பொற்கொல்லர்களின் கடைகளே அதிகம். அங்கு ஆதிக்கம் செலுத்தியவர்களும் அவர்களே. எறாவூர் காளிகோவில் என்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்று. இந்த ஆலயமும் பொற்கொல்லர்களின் பரம்பரை ஆலயமாகும்.

ஏறாவூர் நகரில் நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் மாத்திரமின்றி பொதுச்சந்தையும் அமைந்திருந்தது. நூற்றுக்கணக்கான வீடுகள் உள்ள பெரிய கிராமம். இதைக் கிராமம் என்பதை விட ஒரு நகரமாகவே பார்க்க வேண்டியிருந்தது. இங்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களும் வெளியிடங்களைச் சேர்ந்த வர்த்தகர்களும் கடைகள் நடத்திவந்தனர். அது மாத்திரமின்றி சிங்களவர்களுக்கும் பல பெரிய கடைகள் இருந்தன. பொதுச் சந்தையில் தமிழர்களுக்கு மாத்திரமின்றி சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான கடைகளும் இருந்தன.

ஏறாவூர் முஸ்லிம் பகுதியில் அப்போது அதிகமான பெரிய கடைகள் இருக்கவில்லை. அவர்களும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் சந்தைக்கும் ஏறாவூர் தமிழ் நகருக்கே சென்று வந்தனர். மட்டக்களப்பு நகரிலிருந்தும் மக்கள் பொருட்கள் வாங்க வருவதுண்டு. இந்தச் சந்தைக்கு புல்லுமலை, பதுளை பகுதியிலிருந்து மரக்கறி, பழவகைகள் என்பன லொறிகளில் வந்து இறங்கும். இங்கு சென்றால் என்ன பொருட்களும் வாங்க முடியும் என்ற நம்பிக்கையில் தூர இடங்களில் இருந்தும் மக்கள் சந்தைக்கு வருவதுண்டு.

**ஏறாவூர் நகரில் நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் மாத்திரமின்றி பொதுச்சந்தையும் அமைந்திருந்தது. நூற்றுக்கணக்கான வீடுகள் உள்ள பெரிய கிராமம். இதைக் கிராமம் என்பதை விட ஒரு நகரமாகவே பார்க்க வேண்டியிருந்தது.**



ஏறாவூர் தமிழ் பகுதியில் அழிக்கப்பட்ட கடைத்தொகுதி



வெள்ளாமைச்சேனையில் மீளக்குடியேறும் கிராமவாசி

11.06.1990 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் கைவசமானது. இப்பொலிஸ் நிலையங்களைச் சுற்றிவளைத்த புலிகள் பொலிசாரை சரணடைய வைத்து பொலிஸ் நிலையங்களைத் தமதாக்கிக் கொண்டனர். இதேநிலைதான் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கும் ஏற்பட்டது. பல படை முகாம்கள் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இதனால் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை ஏற்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்புக்காக பாடசாலை, ஆலயங்களில் தஞ்சமடைந்தனர். அவை அனைத்தும் அகதி முகாம்களாக மாறின.

இந்த அச்சநிலை காரணமாக ஏறாவூர் தமிழ்க்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் குறிப்பாக எல்லைப்பகுதியில் இருந்தவர்கள் இங்கிருந்து வெளியேறி கிழக்குப் பல்கலையில் தஞ்சமடைந்தனர். சிலர் மயில் வெட்டுவான், கரடியனாறு, கோப்பாவெளி ஆகிய இடங்களுக்கும் சென்று விட்டனர்.

இந்த வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து மேலதிக இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர். இதுவொரு விசேட படையணி. 'கொளக் கொட்டி' என்று அழைக்கப்பட்ட இப்படையணியை பின்னர் எமது மக்கள் 'வெட்டுப் பாட்டி' என்றும் அழைத்தனர். அந்தளவுக்கு இவர்கள் பொதுமக்களை வெட்டிக் கொலை செய்திருந்தனர். வெலிக்கந்தையிலிருந்து புறப்பட்ட இவர்கள் முதலில் வாழைச்சேனையை அடைந்தனர்.

முன்னர் இருந்த பொலிஸ் நிலையங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் கடமைகளில் ஈடுபட்டனர். இராணுவ முகாம்களும் தொடர்ந்து இயங்கின. இக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் எவரும் வெளியேறவோ வீதியில் நடமாடவோ முடியாதநிலை இருந்தது. இராணுவத்தினரின் கண்ணில் தென்பட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டனர். வீதிகளில் சடலங்கள் அடிக்கடி எரியும் நிலை இருந்தது. மட்டக்களப்பு நகரிலும் பொதுமக்கள் வீதியில் போட்டு எரிக்கப்பட்டனர். இவ்வாறான அச்ச நிலையைப் பயன்படுத்தியே முதலில் ஏறாவூர் தமிழ்க் கிராமம் அழிக்கப்பட்டது. முதலில் எல்லைப் பகுதியிலிருந்தவர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டன. சில வீடுகள் எரிக்கப்பட்டன. இவற்றைப் படையினரின் உதவியுடன் ஊர்காவல் படையினர் செய்ததாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் படிப்படியாக பல வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பொருட்கள் சூறையாடப்பட்டன. கடைகள் உடைக்கப் பட்டு பொருட்கள் ஏற்றப்பட்டன. சந்தையில் உள்ள கடைகளும் உடைக்கப்பட்டு பொருட்கள் ஏற்றிச்செல்லப்பட்டன. வீடுகளிலிருந்த கதவு, யன்னல், கூரை என்பன கழற்றப்பட்டன. இராணுவத்தினரும் இவற்றைக் கழற்றிக் கொண்டு தமது முகாமுக்குக் கொண்டு சென்று காவலரண்கள் அமைக்கவும் பதுங்கு குழிகள் அமைக்கவும் பயன்படுத்தினர்.

நிலைமை ஓரளவு சுமுகமடைந்து மக்கள் சிறிது சிறிதாக நடமாடக் கூடிய நிலை ஏற்பட்டது. எனினும் ஏறாவூர் நான்காம், ஐந்தாம் குறிச்சியில் மக்கள் முழுமையாகக் குடியமர முடியாத நிலை இருந்தது. அவர்கள் திரும்பிச் சென்று பார்த்தபோது பல வீடுகள் இருக்கவில்லை. எரிக்கப்படடும் உடைக்கப்பட்டும் கிடந்தன. எனினும் சில குடும்பங்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியிருந்தன.

இதேநிலைதான் ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராமத்தின் எல்லைப்பகுதியில் இருந்தவர்களுக்கும் இடம்பெற்றது. ஏறாவூர் முஸ்லிம் கிராமத்தின் மறுபுறத்தின் எல்லையில் உள்ளது தான் ஆறுமுகத்தான் குடியிருப்பு.

இந்த வன்முறைகளின் போது ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயமும் சேதமாக்கப்பட்டது. அங்கிருந்த பொருட்கள் சூறையாடப்பட்டன. முன்னர் இப்பாடசாலை மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். ஆனால் இன்று இப்பாடசாலை மிகவும் கீழ் மட்டத்திலுள்ளது. அருகிலிருந்த காளிகோவில் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

இங்குள்ள வசதி படைத்தவர்கள் அதிலும் பொற்கொல்லர்கள் தமது கடைகள் எரிக்கப்பட்ட நிலையில் தற்போது புத்தளம், சிலாபம், கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு நகரம் போன்ற இடங்களில் பரந்து வாழ்கின்றனர்.



## எத்தனை நாளி துயின்றிருப்பாய் என் அருமை தாய்மண்ணே!

# மலையக தேசியம் 2

## சிதைக்கப்படும் தமிழ்மொழி



**வோல்டர் டெரி**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

மலையக மக்களின் தாய் மொழியான தமிழ் மொழி, தாய் மொழி என்ற வகையிலும், மலையகத் தேசிய இனத்தின் அடையாளம் என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்நிலையில் தமிழ்மொழியினுடைய அந்தஸ்து தொடர்பில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான முயற்சிகளையும் சுருக்கமாக நோக்குதல் இன்றியமையாததாகும். வரலாற்றுப் பதிவுகள் இலங்கை தேசியத்தை முதலில் வலியுறுத்தியது யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஆகும். முழுமையான சுதந்திரம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி 1931 இல் தேர்தலை யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் பகிஷ்கரித்தது. 1944 இல் டொனமூர் அரசாங்க சபையில் ஆங்கிலம் ஆட்சி மொழி என்பதற்குப் பதிலாக சிங் களத்தை ஆட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற பிரேரணையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்தார். கல்குடா தொகுதி உறுப்பினர் நல்லையா சிங்களமும், தமிழும் என்ற பிரேரணையைக் கொண்டு வர அப்பிரேரணை பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



இடதுசாரிகளும் சிங்களமும் தமிழும் அரச கரும மொழியாக ஏற்கப்பட வேண்டுமென வலியுறுத்தினர். இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி தீர்மானமும் நிறைவேற்றியது. 1951 இல் இலங்கை சுதந்திர கட்சி உருவாக்கப்பட்ட போது அதன் கட்சிக் கொள்கையாக சிங்களமும் தமிழும் அரச கரும மொழி என அறிவிக்கப்பட்டது. ஆனால் 1955 இல் இந்த நிலை மாறியது.

எஸ்.டபிள்யு. ஆர்.டீ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ய.தாநாயக்க தலைமையிலான பாஷா பெரமுனயும், பிலிப் குணவர்த்தன தலைமையிலான நவ லங்கா சம சமாஜக் கட்சியும் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கி "தனி சிங்களச் சட்டம்" என்ற கோஷத்தை முன் நிறுத்தினர்.

1954 இல் பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணம் கொக்குவிலில் வைத்து சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழியாக்குவதாக உத்தரவாதமளித்தார். ஆனால் 1955 இல் களனி மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி "சிங்களம் மட்டும் ஆட்சி மொழி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இருந்த போதிலும் 1956 இல் பண்டாரநாயக்க, தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதாக அறிவித்தார். இந்நிலையிலும் லங்கா சம சமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரி கட்சிகள் பண்டாரநாயக்கவுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்தன.

1956 ஜூன் 5ஆம் திகதி பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால் தனிச் சிங்களம் சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது. இதை எதிர்த்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியினரால் காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் காடையர்களினால் தாக்கப்பட்டது. பிறகு 1956 ஜூன் 25 ஆம் திகதி தனிச் சிங்களம் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. விவாதத்தின் போது இடதுசாரிகள் எதிர்த்தனர். ஆனால் தமிழரசுக் கட்சி மட்டுமே தொடர்ந்து எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தது.

. 1957 இல் பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் ஊடாக வட-கிழக்கில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக அறிவிப்பதாகவும், பிராந்திய சுயாட்சி வழங்குவதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்ட கண்டி யாத்திரை களனியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும், பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்கு மத்தியில் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை கிழித் தெறிந்தார்.

1958 இல் பண்டாரநாயக்க அரசாங்கத்தினால் வாகனங்களில் ஆங்கில எழுத்திற்குப் பதிலாக சிங்கள "ஸ்ரீ" எழுத்து அறிமுகம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து வட- கிழக்கு பகுதிகளில் தமிழர்கள் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை அடக்க அரசாங்கத்தினால் இராணுவம் பயன்படுத்தப்பட்டது. சிங்களப் பகுதிகளில் (குறிப்பாக அம்பாறை, பாணந்துறை பகுதிகள்) தமிழர்கள் இனவாதிகளால் தாக்கப்பட்டு, உடமைகள் சூறையாடப்பட்டதுடன், உயிர்களும் பறிக்கப்பட்டன. இப்போராட்டம் ஸ்ரீ போராட்டமாக மாறியது.

மலையகத்திலும் ஸ்ரீ போராட்டம் எதிரொலித்தது. 1958 மார்ச் 30 ஆம் திகதி அட்டன்- பொகவந்தலாவை பாதையில் ஓடிய இ.போ.ச. பஸ்களில் சிங்கள ஸ்ரீ எழுத்தை அழித்து தமிழ் ஸ்ரீ எழுத்தை பொறித்தனர் மலையக இளைஞர்கள். தொடர்ந்து பொகவந்தலாவை நகரில் நடந்த மொழியுரிமைப் போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரான்சிஸ், ஐயாவு ஆகிய இரு மலையக இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்தது. அதில் தமிழ்மொழி அமுலாக்கம், மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குதல், பிராந்திய சுயாட்சி, குடியேற்றங்களை நிறுத்துதல் என்பன அடங்கியிருந்தன. 1961 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் வட- கிழக்கு பகுதிகளில் சிங்கள மொழியை அமுலுக்குக் கொண்டு வந்தது. இதனை எதிர்த்து வட- கிழக்கு தழுவிய ரீதியில் கச்சேரிகளுக்கு முன்னால் ஒரு மாத காலம் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப்பட்டது. இராணுவத்தைக் கொண்டு இப்போராட்டம் முடிவுறுத்தப்பட்டதுடன் சுதந்திரன் பத்திரிகை சீல் வைக்கப்பட்டு, தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

1965 இல் பெரும்பான்மை கிடைக்காததால் ஏழு கட்சிகளின் கூட்டணியாக அமைந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் டட்லி – செல்வா ஒப்பந்தத்தை செய்தது. பிறகு குடியேற்றம், மாவட்ட சுயாட்சி, தமிழ் மொழி அமுலாக்க விஷேட மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இந்த மசோதாவை சுதந்திரக் கட்சியும், இடதுசாரிகளும் எதிர்த்தனர்.

*(தொடரும்)*

> **1957 இல் பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் ஊடாக வட-கிழக்கில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக அறிவிப்பதாகவும், பிராந்திய சுயாட்சி வழங்குவதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதை எதிர்த்து ஜே. ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்ட கண்டி யாத்திரை களனியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும், பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்கு மத்தியில் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.**






# மாதொருபாகன்

(நாவல்)

9

பெருமாள் முருகன்

**பெருமாள் முருகன் தமிழ்நாட்டின்புகழ்பெற்றஎழுத்தாளர். இவருடைய "மாதொருபாகன்" என்னும்இந்தநாவலை எதிர்த்து சாதி அமைப்புகளும் மதவாத அமைப்புகளும் ஹர்த்தால் போராட்டங்களை நடாத்தின. இதனால் கவலையுற்ற பெருமாள் முருகன் தான் ""மாதொருபாகன்" நாவலை திரும்பப் பெறுவதாகவும் இனிமேல் எதுவும் எழுதப் போவதில்லை எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்தும் எழுதுமாறு வேண்டுகின்றோம். அவருக்கு ஆதரவுதெரிவித்து இந் நாவலை தொடராக வெளியிடுகின்றோம்.**

**வே**ம்பும் பாலையும் அடர்ந்திருந்தன. இரண்டு மூன்று கொன்றை மரங்கள் ஓங்கி வளர்ந்து கொத்துப் பூக்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தன. வனம் முழுக்கக் காசரளி எங்கும் புதர் போல மூடிக் கிடந்தது. கையகலத் தடங்கள் வனத்திற்குள் இருந்தன. எந்தப் பக்கமிருந்தும் பாவாத்தா கோயிலுக்கு வரலாம்.

காளி சொன்னான். 'மச்சான். இந்த வனத்துக்குள்ளயும் ஓரெடத்தக் கண்டுபுடிடா. எப்பவாச்சும் வந்தம்னா ஆவும்டா.'

முத்து சிரித்தான். 'இதுவரைக்கும் மனுசன் கண்டு புடிக்காமையா இருப்பான்? அங்க பாரு' என்று காட்டினான்.

வெளியே புதராய்த் தெரிந்த காசரளிக்கு நடுவில் வட்டமாய் மனிதர்கள் உட்கார்ந்திருந்த தடம். சில சீட்டுகள் இறைந்து கிடந்தன. ஒன்றிரண்டு போத்தல்கள் ஓரங்களில் உருண்டு கிடந்தன.

'மனிசனுக்கு இப்படி எடம் தேவப்படுதுடா. மாப்ள. இந்த மாதிரி எடத்தத் தேடித்தான் எப்பவும் அலையறான். செல பேரு கண்டுபுடிச்சர்றாங்க. செல பேரு தேடிக்கிட்டே இருக்கறாங்க. செல பேரு கண்டுபுடிச்சாலும் அங்க போறத்துக்குப் பயப்படறாங்கடா' என்று விவரித்தான் முத்து.

'என்னய உடுடா சாமி' என்று காளி பாவாத்தா கோயிலை நோக்கிப் போனான். சாதாரணமாகப் படுத்துக்கிடந்த பெண்ணை அங்கே காணோம். சிவப்பு நிற ஆடையில் உடல் முழுக்கத் தூவப்பட்ட சிவப்பில் ஆக்ரோசம் கொண்ட பெண் தெரிந்தாள். மிக லேசான சிவப்பைக் கண்ணுக்குத் தடவிப் பெரும்உக்கிரத்தைக்கொண்டுவந்திருந்தார் பூசாரி. காளிக்கும் முத்துவுக்கும் பேச்சே இல்லை. வாயைக் கட்டிக் கொண்டு பூசை செய்தார். மணியோசை மட்டும் தனித்துக் கேட்டது. படையலின்போது சிறு போத்தலில் சாராயத்தை எடுத்துக் கொடுத்தான் முத்து. பூசாரி அதைச் சொல்லவில்லை. எப்படியோ முத்து தெரிந்து வைத்திருந்தான். கோழி அறுத்து ரத்தம் முழுவதையும் அம்மாவின் காலடியில் விட்டார்.

சமைத்து முடித்துச் சாப்பிட்டார்கள். பெருங்கூட்டுச் சேவல். காளி, பொன்னா, அவன் அம்மா. மாமனார் வரவில்லை. அவர் எப்போதும் இது மாதிரிவிஷேசங்களில் தலைகாட்டவிரும்பமாட்டார். மாமியார், மச்சினன், அவன் பெண்டாட்டி அவ்வளவு தான். ஆறு பேர் சாப்பிட்டுத் தீருமா. பூசாரியும் உண்டார். என்றாலும் கறி மிஞ்சிற்று. முழுவதையும் அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும். பூசாரி வனம் விட்டு வெளியேறி மண்டபங்களில் இருந்த பிச்சைக்காரர்கள் நான்கைந்து பேரைக் கூட்டி வந்தார். அவர்களின் பாத்திரங்களில் நிறைத்ததும் சந்தோசத்தோடு போனார்கள்.

பொன்னாமனநிறைவோடுஇறங்கினாள். மலைக்குப் போகும் தருணங்களில் அப்படியே பாவாத்தா கோயிலுக்கும் போய் வந்தான் காளி. பல மாதங்கள் பூசைத்துணி மாறாமலே இருந்தது. அன்றைக்குப் பூசாரி அரையணாகூட வாங்க மறுத்துவிட்டார். அந்தக் காட்டுவாசிப் பெண் விட்ட சாபத்திற்குக் கண்டிப்பாய் விமோசனம் கிடைத்திருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

பாவாத்தா பூசைக்குப் பின் பொன்னாயியும் கூட மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தாள். அடுத்து வந்த மாதங்களில் ரொம்பவும் எதிர்பார்த்தாள். இருபது நாட்கள் ஆகிவிட்டால் போதும். நிலை கொள்ளாமல் தவிப்பாள். 'ஆண்டவனே, இந்த மாசமாச்சும் என் வவுத்த அடச்சிரு' என்று வேண்டுவாள். ஒரு நாள் தள்ளிப் போனாலும் 'அதுதான்' என்று உற்சாகம் பொங்கத் திரிவாள். அடுத்தநாள் தீட்டாகி விட்டால் இழவு வீடுதான். அதுமாதிரி நடந்துகொள்வாள். உண்டும் உண்ணாமலும் விழுந்து கிடப்பாள். அப்போதெல்லாம் அவன் அம்மாவிடம்தான் சோற்றுக்குப் போக வேண்டியிருக்கும். கோழி அறுத்து வேலெடுத்து வைத்துப் பாவாத்தாளின் தாகம் தணித்தும் கூட ஒரு வழிபிறக்கவில்லை.

மறுபடியும் எப்போதாவது மலைக்குப் போக நேர்ந்த தருணங்களில் எல்லாம் வனத்திற்குள் போய்ப் பாவாத்தாளின் காலடியில் நிற்பான்.

'காலகாலமாக உந்தாகம் அடங்காத இருக்குதா? உன் நீட்டுன நாக்கத் தள்ளி உள்ள சேக்க என்னால் ஆவாதம்மா. நான் சாதாரண மனுசன். ஏழேழு ஜென்மத்துக்கும் என்னால் ஆவறதச் செய்றம். ஊரு வாயிலிருந்து என்னக் காப்பாத்தாயா. கேக்கற நாய்களுக்குப் பதில் சொல்லி முடியல. பொன்னா துரும்பாப் போயிக்கிட்டு இருக்கறா. நான்தான் தத்தேரிப் பரம்பரையில பொறந்து தொலச்சிட்டன். பொன்னாவ எதுக்காயா பழி வாங்கற?' என்று மனமுருகக் கேட்பான்.

ஆனால் பாவாத்தா தன் கோபத்தைத் தணித்துக் கொள்ளவேயில்லை.

பலகாரத்தைத் தின்றுவிட்டுக் கட்டிலில் படுத்த அவனுக்குத் தூக்கம் வரவில்லை. என்றாலும் வெயிலுக்குக் குளுமையாய் இருந்த நிழலும் மெல்ல வீசிய பூங்காற்றும் கண்களை மூடி இருக்கச் செய்தன. உள்ளே சமையல் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் ஓசை கேட்டது. புரண்டு புரண்டு பார்த்துவிட்டுக் கட்டில் கீரிச்சிட எழுந்து உட்கார்ந்தான். தேர் நோம்பியும் பலகாரமும் சந்தோசமாகவே இல்லை. ஏதேதோ எண்ணங்களைக் கூட்டி வந்து மனதைக் குழப்புகின்றன. முத்து எங்கோ போயிருக்கின்றான். இன்றைக்கும் காட்டில் வேலையா. முத்து யாருக்கும் தெரியாத புதுப்புது இடங்களைக் கண்டுபிடித்தும் உருவாக்கியும் வைத்திருப்பான்.


போன முறை வந்தபோது கிணற்றுக்குக் கூட்டிப் போனான். தண்ணீர் குறைவாகக் கிடந்தது.

"இதுல எப்படிடா மச்சான் நீத்தமடிக்கறது," என்று காளி கேட்டான்.

'இத்தன வருசம் என்னோட பழகி நீ புரிஞ்சுகிட்டது இவ்வளவுதானாடா,

> பாவாத்தா பூசைக்குப் பின் பொன்னாயியும் கூட மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தாள். அடுத்து வந்த மாதங்களில் ரொம்பவும் எதிர்பார்த்தாள். இருபது நாட்கள் ஆகிவிட்டால் போதும். நிலைகொள்ளாமல் தவிப்பாள். 'ஆண்டவனே, இந்த மாசமாச்சும் என் வவுத்த அடச்சிரு' என்று வேண்டுவாள். ஒரு நாள் தள்ளிப் போனாலும் 'அதுதான்' என்று உற்சாகம் பொங்கத் திரிவாள். அடுத்தநாள் தீட்டாகிவிட்டால் இழவு வீடுதான். அதுமாதிரி நடந்துகொள்வாள். உண்டும் உண்ணாமலும் விழுந்து கிடப்பாள். அப்போதெல்லாம் அவன் அம்மாவிடம்தான் சோற்றுக்குப் போக வேண்டியிருக்கும்.

நீத்தமடிக்கவா உன்னயக் கூட்டியாந்தன்? வா, வந்து பாரு, அசந்து போயிருவ' என்று படிகளில் இறங்கினான்.



ஆழக்கிணறு. முழுக்கப் பாறை. அந்தக் காலத்தில் பாறையை உடைத்து இத்தனை ஆழம் தோண்ட என்ன கஷ்டப்பட்டார்களோ, படி சரியாக இறங்கி ஓரிடத்தில் நின்று கொஞ்சம் சமதளமாகிப் பின் மறுபடியும் இறங்கிற்று. அந்த சமதளத்தில் நின்ற முத்து மேலே அண்ணாந்து பார்த்தான். ஆள் தலையோ நிழலோ தெரியவில்லை. 'மாப்ள பாத்து வரணும்' என்று சொல்லிவிட்டுக் கீழிறங்கும் படிக்கு எதிர்ப்புறச் சுவரில் ஒரு கல்லை எட்டிப் பற்றிச் சட்டென ஒரு பொந்துக்குள் போய்விட்டான். கல்லும் முள்ளும் காடும் மேடும் காளிக்கு அத்துபடிதான். என்றாலும் முத்துவைப் பின்பற்றி அந்தப் பொந்துக்குள் நுழையத் தயக்கமாயிருந்தது.

(தொடரும்....)




# கூன் பாஸி
# (Koon Pasi)
## போதைக்கு எதிரான போர்

ஜெ.பிஸ்மி

**மத** அடிப்படைவாதத்தை அடியொற்றிய ஆட்சி, அதிகாரங்கள் கொண்ட, ஈரானில் திரைப்படக் கலை அடைந்திருக்கும் வளர்ச்சி பிரமிக்க வைக்கும் விஷயம். சர்வதேசத் திரைப்பட அரங்கில், வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகளே பொறாமைப் பெருமூச்சுடன் அண்ணாந்து பார்க்கும் உயரத்தை எட்டியிருக்கின்றன ஈரானிய திரைப்படங்கள்! உலக அளவில் மிகச் சிறந்த படங்கள் ஈரானில் தயாராவது மட்டுமின்றி, பல்வேறு சர்வதேசத் திரைப்பட விழாக்களில் சிறந்த படங்களுக்கான, படைப்பாளிகளுக்கான மற்றும் கலைஞர்களுக்கான விருதுகளை ஈரானே தட்டிச் செல்கிறது.

ஈரானிய திரைப்படங்கள் உலகத் தரத்துடன் உருவாகின்றன, விருதுகளைக் குவிக்கின்றன என்பதை விட, பெரும்பாலும் அவை பெண் இயக்குனர்களால் எடுக்கப்பட்டவை என்பது மேலும் ஆச்சரியப்படுத்தும் செய்தி.

ரக்ஷன் பானி எட்மேட் (Rakhshan Bani-Etemad) ஈரானிய பெண் இயக்குனர்களில் மிகவும் முக்கியமானவர். ஈரானிய திரைப்பட வரலாற்றில் மட்டுமல்ல, கடந்த கால் நூற்றாண்டு கால உலகத் திரைப்பட வரலாற்றிலும் தவிர்க்க முடியாத படைப்பாளியாய் தன் அடையாளத்தைப் பதித்திருக்கிறார் இவர். 53 வயதான ரக்ஷன் பானி இத்தனைக்கும் ஏராளமாக ஆவணப்படங்களையும், குறும்படங்களையும் இயக்கியிருந்தாலும் - ஒன்பது திரைப்படங்களை மட்டும் இயக்கியவர். அவற்றில் ஏறக்குறைய எல்லாப் படங்களுமே பேசப்பட்ட படைப்புக்கள்! குறிப்பாய் காரேஜ் அஸ் மகதூதே (Off the limit), ஜர்த் ஏ கனாரி (Canary Yellow), நர்கீஸ் (Nargess), ருசாரி அபி (The Blue Veilid), பனூ-ஏ-ஆர்திபெஹெஸ்த் (The May Lady)இ ஸிர்- ஏ-பூஸ்த் - ஏ- ஸஹர் (Under the skin of the city) போன்ற படங்கள்!

ஃபார்ஸி மொழியில் எடுக்கப்பட்ட 'கூன் பாஸி' (Mainline) 2006 ஆம் ஆண்டு வெளியாகி, ரொரண்டோ சர்வதேச திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த பார்வையாளர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். சிலர் 'இதெல்லாம் நிஜம்தானா?' என்று இயக்குனர் ரக்ஷன் பானியிடம் சந்தேகக் கேள்வி எழுப்பினார்கள். காரணம் 'கூன் பாஸி' திரைப்படத்தில் துகிலுரிக்கப்பட்டிருந்த நிஜம்.

உலகளாவிய அச்சுறுத்தலாக இருக்கும், மனித இனத்துக்கே சத்தமில்லாமல் சவக்குழியை வெட்டிக் கொண்டிருக்கும் பிரச்சினையான போதை உட்கொள்ளும் பழக்கம், ஈரானையும் விட்டு வைக்கவில்லை. இரண்டு மில்லியன் பேர், குறிப்பாக இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர், ஈரானில் போதைக்கு அடிமையாகிக் கிடக்கின்றார்கள். போதையின் பிடிக்கு ஈரானிய இளம் பெண்களும் தப்பவில்லை என்பது வெளியுலகுக்குத் தெரியாத, அதிர வைக்கும் சோகம் மற்றும் நிஜம்.

'கூன் பாஸி' திரைப்படத்தில் ரக்ஷன் பானி கையிலெடுத்து இந்த அபாயகரமான அவலத்தையே! இதே விஷயத்தை ரக்ஷன் பாணி தன் முந்தையபடங்களில் ஒன்றான ஸிர்-ஏ-பூஸ்த் - ஏ- ஸஹர் (Under the skin of the city) படத்திலும் கோடிட்டுக் காட்டியிருப்பார். அதில் இத்தனை வீரியம் இல்லை. 'கூன் பாஸி' அளவுக்கு அந்தப்படம் மனசைப் பிய்த்துப் போட்டதாகவும் நினைவில்லை.

திருமணத்திற்குத் தயாராக இருக்கும் ஒரு இளம் பெண்ணின் வழியே போதைப்பிரச்சினையை எடுத்துச் சென்றதும். ஈரானிய நடுத்தரக் குடும்பங்களின் நரம்புகளிலும் போதை நஞ்சு கலந்து விட்டதென்ற யதார்த்தத்தை மறைக்காமல், பிரச்சினையை அவர் அணுகிய விதமும்தான் 'கூன் பாஸி' படம் பிரத்தியேகக் கவனம் பெற்றதற்கான காரணம் என்பதை படம் பார்க்கும் போது உணரலாம்.

டெஹ்ரானில் வசிக்கும் சாரா நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண். டொரண்டோவில் இருக்கும் சாராவின் வருங்கால கணவன் அவளுக்கு அன்பொழுகப் பரிசுப் பொருட்களை அனுப்புகிறான். அதை என்னவென்று அறியக்கூட விருப்பமில்லாமல்

எச்சரிக்கையோடு வடக்கு டெஹ்ரானில், காஸ்பியன் அருகில் இருக்கும் போதை மறுவாழ்வு மையத்துக்கு சாராவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்கிறாள். அங்கே தன் மகளின் மீட்சிக்காக சிமா படும் சிரமங்கள் ஒரு பக்கம், போதையின் பிடியிலிருந்து மீள முடியாமல் துடிக்கும் சாராவின் மரணத்துக்கு ஈடான போராட்டம் இன்னொரு பக்கம்.... போதையின் கொடூரத்தை இதைவிட உக்கிரமாய் உணர்த்த முடியாது என்பதாக பார்வையாளர்களை பதைபதைக்க வைக்கிற காட்சிகள் அவை. போதை நுகர்வு பற்றி இதற்கு முன் எத்தனையோ திரைப்படங்களைப் பார்த்திருக்கின்றோம். "கூன் பாஸி" படம் ஏற்படுத்தும் தாக்கம் ஒப்பிட முடியாதது. திரையில் விரியும் ஒவ்வொரு காட்சிகளும், போதைக்கு எதிரான போர் முழக்கம் என்றால் மிகையில்லை. கூன் பாஸி படத்தைத் தூக்கிப்பிடிக்கிற தூண்கள் சிமா, சாரா கதாபாத்திரங்கள்! இந்த இரு பாத்திரங்களே ஒட்டுமொத்தப்படத்தின் உயிர் நாடி. சிமாவாக நடித்திருக்கும் பிடாஃபராஹி (Bita Farahi), சாராவாக நடித்திருக்கும் பரன் கோஸாரி (Baran Kosari) யின் நடிப்பை, நடிப்பு என்று தான் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

கொடுத்திருக்கின்றது. குறிப்பாக சாரா, போதை அடிமைகளின் அக, புற உலகை சிறு பிசிறில்லாமல் பிரதிபலித்திருக்கின்றார்.

சாராவை உயிரோட்டமுள்ள பாத்திரமாகப் படைப்பதற்காக இயக்குனர் ரக்ஷன் பானி எடுத்துக் கொண்ட முயற்சிகளை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். போதை அடிமைகளுக்கு சிகிச்சை அளிக்கும் மையத்துக்குச் சென்று, அங்கே சிகிச்சைக்காக வந்த ஒரு நோயாளியின் குடும்பத்துடன் ஒரு தாதிப் பெண்ணாகவே தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் தூங்கிய பிறகு தூங்கி, அவர்கள் விழித்துக் கொள்வதற்கு முன் எழுந்து, அவர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் கவனித்திருக்கிறார். போதைக்கு அடிமையான தங்களின் மகளை மீட்க அந்தக் குடும்பத்தினர் எடுத்துக் கொண்ட சிரமம், அந்தப் பெண் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பட்ட அவஸ்தைகள், அவளுக்கும் குடும்பத்தாருக்கும் இடையிலிருந்த உறவு வெளிப்பாடு என ஒவ்வொரு விசயத்தையும் கவனித்த பிறகே "கூன் பாஸியின் திரைக்கதையைத் திட்டமிட்டிருக்கிறார் ரக்ஷன் பானி! திரைக்கதை அமைக்கும் பாணியில் அவருக்கு உதவியவர் இப்படத்தின் இணை இயக்குனரான மொஸென் அப்துல் வஹாப் (Mohsen Abdolvahab) இவரும் ஈரானிய இயக்குநரில் முக்கியமானவர்.

ரக்ஷன் பானியின் களப்பணி நிகரானது. சாரா பாத்திரத்துக்குத் தேர்வு செய்யப்பட்டதும். பரன் கோஸாரி மேற்கொண்ட பணி. சாராவாக நடிக்கத் தேர்வானதும் இவர் செய்த

**திருமணத்திற்குத் தயாராக இருக்கும் ஒரு இளம் பெண்ணின் வழியே போதைப்பிரச்சினையை எடுத்துச் சென்றதும். ஈரானிய நடுத்தரக் குடும்பங்களின் நரம்புகளிலும் போதை நஞ்சு கலந்து விட்டதென்ற யதார்த்தத்தை மறைக்காமல், பிரச்சினையை அவர் அணுகிய விதமும்தான் 'கூன் பாஸி' படம் பிரத்தியேகக் கவனம் பெற்றதற்கான காரணம் என்பதை படம் பார்க்கும் போது உணரலாம்.**

விட்டேத்தியான மனநிலையில் இருக்கின்றாள் சாரா. மகளின் உற்சாகமின்மையின் காரணம் புரியாமல் தவிக்கும் சாராவின் அம்மா சிமாவுக்கு, பின்னர் தெரியவரும் உண்மை அவளது உலகத்தை கணநேரத்தில் சூன்யமாக்கி விடுகிறது. திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் தன் மகள் சாரா போதைப்பழக்கத்துக்கு அடிமையாகி இருக்கிறாள் என்பதே அது. வாழ்க்கையின் ஆதாரப்பிடியே அறுந்து போனதாய் நினைத்து, இடிந்து போகும் சிமா, மகளைக் கட்டிக் கொடுப்பதற்கு முன் அவளை அந்த அழிவிலிருந்து மீட்க வேண்டும் என்று நினைக்கிறாள். சிமாவின் போராட்டம் தான் "கூன்பாஸி" திரைப்படம்.

உலகம் முழுக்கத் தாய் என்பவர்கள் ஒரே மாதிரித்தான். தன் மகளின் நல்வாழ்வு பற்றி மட்டுமே சிந்திப்பவர்கள். சாராவின் தாய் சிமாவும் அப்படியே! தன் மகளின் போதைப்பழக்கம் யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது என்று



வேறு வழியில்லாமல் உண்மையில் சின்ன அசைவில் கூட நடிப்பின் செயற்கைத்தனத்தைக் காணமுடியவில்லை என்பது நடிப்புக்கே புதிய இலக்கணத்தைக்

முதற் காரியம்.. போதை மறுவாழ்வு மையத்துக்குச் சென்றதுதான். சுமார் மூன்று மாதங்கள் அங்கேயே தங்கிப்

(23 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதை படைப்போம்



## விழிப்பு!

இருட்டுக்குள்ளே,
இமைத்துக் கொண்டிருந்த
என் கண்களுக்கு
விழிப்பு வந்தது- மெதுவாக
விழித்துப் பார்க்கிறேன்....
மனிதன் நவநாகரீகத்தில்
மோகங் கொண்டு – அதன்
போர்வைக்குள் அகப்பட்டு
உணர்வூட்டுவாரின்றித்
தினம் தினம் சீரழிக்கின்றான்.

சந்தியிலே நிற்கின்ற
இளைஞர்களினால்
வேலைச் சுமை தாங்க முடியாது
வெந்து கொள்ளும்
அம்மாமார்...
தினமும் நெற்றி வியர்வை
சிந்தக் குடும்பத்துக்காய்
உழைத்து
வீட்டுச் செலவுக்கே
காசில்லாது வெந்துகொள்ளும்
அப்பாமார்...

பக்கத்து வீட்டுக் குடிகார
அப்பனின் குடியால்
அவன் குடும்பம் அன்றாடம்
அவதியுறும் நிலை
அச்சச்சோ! அவன் வாயால்
சகிக்க முடியா உச்சரிப்புக்கள்
தலை குனிந்து வீதியிலே
தயங்கிச் செல்லும் யுவதி மீது
சகிக்க முடியாத வர்ணனை
உச்சரிப்புக்கள்...

சீதனக் கொடுமையால்
ஆசைகளை வீட்டிலே
பூட்டிவைத்து
அழகு பார்க்கும் எத்தனையோ
பேர்....!
பெற்றெமையெல்லாம் பேணி
வளர்த்தாளாக்கிய அம்மா
அப்பா
யாருமற்ற அநாதைகளாய்த்
தஞ்சம் புகும் முதியோரில்லம்
ஐயோ இதென்ன கொடுமை!
என்னால் பார்க்கவே
முடியவில்லை.
மீண்டும் கண்களை நான்
இறுக மூடிக் கொள்கிறேன்.

-கவியாக்கம்
செல்வநாயகம் ரவிசாந்
வீரமனை, குப்பிளான்.

## ஓர் அகதி விண்ணப்பம்

குளிருக்கு அஞ்சி
தொலை தேசம் போன சூரியன்
துருவம் வந்தது மீண்டும்

வெட்கத்துடன் ஜன்னலிடை முகம் காட்டி
துயில் எழுப்பி
எத்தனை நாளாயிற்று என்று சொல்லிப் போனது அது.

காணுமிடங்களில் ஒளிதுலங்க,
துயில் கலைந்து எழுகிறது கோடைகாலத்துத்
துருவ உலகம்

பனி போர்த்தி நின்ற மரங்களின் தேகம்
மீண்டும் பூக்களின் வாசம் தரும்.
மனிதரைப் போலவே
மரங்களும், செடிகளும், நிலமும் காற்றும்
கோடையில் உயிர் பெறும்
ஆடை விலத்தி வெய்யிற் சூடு காணும்
பெண்கள் அழகு காணலாம் இந்தக் கோடையிலும்.

காற்று வெளியில் நின்று உலாவலாம்
கடல் நீரில் விழுந்து மகிழலாம்.
கோடைகாலத்துத் துருவம் இப்படித்தான்.
நள்ளிரவுச் சூரியனோடு
குளிரை மறந்து அழகு துலங்கும்.

கோடைக்கும் குளிருக்கும் ஏற்றதாய்
வாழ்வை ரசிக்கும் மனிதரின் உலகில்
கோடை காலத்துச் சலனம் ஏதுமில்லை
என்னிடம் இன்று
என் நினைப்பெல்லாம் முற்றுப் பெறாத
ஓர் அகதி விண்ணப்பம் பற்றியதாய் இருக்கிறது.

மழைக்காலப் பொழுதில் அகதியான
தேசத்தையும் மனிதரையும் கூட
மறந்து நாளாயிற்று.

மறுகரையில் காத்திருக்கும் மனைவிக்கு
முற்றுப் பெறாத என் விண்ணப்பம் பற்றிப்
புதிதாய்க் கூற ஒரு வாக்குறுதி தேவை,
யார் தருவீர்?

மேன்மையானவரே!
கோடையில் துயருற்றிருக்கும் என்னையும்
ஓர் அகதியாய் ஏற்றுக் கொள்ள மாட்டீரோ?

அருச்சுனா

## முகங்களும் திரைகளும்

இன்னும் என்ன இருக்கு?
கனவுகளைச் சேகரித்து வைத்திருக்கின்ற
பொக்கிஷங்களும் காலியாகின.

இலைகளையுதிர்க்கும் போதே
இங்கே துளிர்க்கும் நம்பிக்கையோடு
மரங்கள்.
ஒவ்வொரு பருவ காலங்களிலும்
ஒவ்வோர் உயிர்ப்பு.
எல்லாக் காலங்களையும் தொலைத்து
'நம்பிக்கை' மீதே




நம்பிக்கையிழந்து போக,
சாகாவரம் பெற்றுவிட்டதாய்
கவலைகளும், கண்ணீரும்....

காலியாகப் போன
எல்லா இதயங்களிலும்
போர்வைகள்,
நிழல்கள் கூட வெறுப்பை
உமிழும்.

'ஈபிள்' கோபுரம் மாத்திரமல்ல
இங்கே எல்லாமே
கூனிக்குறுகிப் போய்விட்ட
எமக்கு முன்னால்
மிக உயரம் தான்.

ஆணிவேர் தறித்து
அலங்காரம் செய்து
எங்கெங்கோ
மரம் நாட்டினோம்.

முளைவிட்டவை தவிர,
கருகிப் போனவையும்
இவற்றில் அதிகம்
சூரியன் இடம் பெயர்ந்து விட்ட
பின்னரும்
எம் தேசத்தில் முளைவிடும்
விதைகள்
இன்னும் எந்தக் காற்று
எங்கெல்லாம் அவற்றை
எடுத்துச் சென்று புதைக்குமோ?

கால்களை இழக்கும்
பாரத்தினூடு
நாட்கள் அறுபடும்

முகமூடி தொலைய
எல்லா மனிதரும்
நிர்வாணமாயினர்.

இன்னும் என்ன?

கல்லறைகளுக்குப்
பூச்சுப் பூசுவதற்கும்
வர்ணங்களைத்
தொலைத்துவிட்டு
விழிகள் இமைக்க
மறுக்கின்றன.

எல்லா முகங்களும்
எல்லாத் திரைகளும்
நாட்கணக்காக அழுக்கேறி....

எந்த உலகம் உன்னதமானது?
எந்த வாழ்க்கை உயர்ந்தது?

கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இழந்து போக,
புத்தகங்களை
நெருப்புத் தின்கிறது.

- வசந்தி

## ரகஸ்யம் I

அண்டப் பெருவெளியில்,
அக்னித் துளி ஒன்றின்,
ஆண்டாண்டு காலக் குளிர்வில்,
உயிர்த் துளிகளாய்,
இன்று நீ, நான், அவன், அவள்,
அவர்கள்...
அனுபவமின்றி அறுக்கப்பட்ட
ஸ்படிகப் பிரதிபலிப்பாய்
குலைந்து சிரிக்கின்ற
வாழ்க்கைத் துண்டங்கள்
அடுத்ததறியா அவலத்துடன்...

பதுங்கிக் கிடக்கின்றன
கோடானு கோடி ரகஸ்யங்கள்
பிரக்ஞையின் பிடிக்குள்
பிடிபடாமல்...

பொதி அவிழும் கணமொன்று
பித்தாக்கிப் போடும்,
மொழி வசப்பட
கவிதை கட்டவிழும்
அல்லாடும் அலையொன்று
அக்னி நட்சத்திரமெடுத்து
எழுதும் என் சரித்திரம்
அதில் உன்னிருப்பும்...
காலத்துளிக்குள் கண்டு
கொணாத படி மௌனத்தில்
பொதிந்து கிடக்கும்

பிரபஞ்ச ரகசியங்கள்
பஞ்ச பூதங்களுக்குள்

பேசிக் கொண்டேயிருக்கின்றேன்.
பனிப் பாளமாய்
உறைந்து கிடக்கிறது
மௌனம்-
உருகுவதற்கான உத்வேகத்துடன்
உத்தேச வெப்ப நிலைக்காய்
ஆண்டாண்டு கால
கர்ப்பப்பை ஒடுக்கல்களில்

இறுகிக் கிடக்கும்
ஜனன ரகசியங்கள்
ஆவேச வெடிப்புக்காய்
மனசின்
மடிப்புக்களிலெல்லாம்
மடித்து
வைத்திருக்கின்றேன்.
மரபுகளின்
நீசத்தனங்களில்
நீலம் பாரித்துப் போன
என் கனவுகளை

# காட்டுப்பூனைகளும் பச்சைக்கிளிகளும்



தி. ஞானசேகரன்

அறையின் நான்கு பக்கச் சுவர்களும் என்னை நோக்கி நகர்கின்றன. மெதுமெதுவாக நகர்கின்றன. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தச் சுவர்களுக்குள் நான் நசுங்கிச் சாகப் போகிறேன்.

தலை சுற்றுகிறது. நெஞ்சு விம்மித் தணிகிறது. இதயம் படபடக்கிறது. தேகம் குப்பென்று வியக்கின்றது. கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டு நான் வீறிட்டு அலருகிறேன். சுவரில் மாட்டப்பட்டிருக்கும் மணிக்கூட்டில் நேரம் காலை எட்டு மணி. அதன் டிக் டிக் சத்தம் பெரிது பெரிதாகிக் கொண்டே வருகிறது...என்னை நெருங்கி நெருங்கி வருகிறது. ஏ.கே 47 இன் சத்தம் போல் என் காதைப்பிளக்கிறது.

"சும்மா சத்தம் போடாதயடி பிள்ளை.." அம்மா அடுப்படியில இருந்து பலமாகக் கத்துகிறா.

கண்களைப் பொத்தியிருந்த கைவிரல்களை சிறிது விரித்து, நீக்கலினூடாகப் பார்க்கின்றேன். இப்போது சுவர்கள் பின்புறமாக நகரத் தொடங்குகின்றன. சிறிது நேரத்தில் மீண்டும் தமது இடத்தில் பொருந்திக் கொள்கின்றன.

நேரம் எட்டு ஐந்து. ரியூசன் வகுப்புக்கு நேரமாகிறது. வசந்தி, கவிதா, பூரணி, நான் எல்லோரும் சேர்ந்துதான் சைக்கிளில் ரியூற்ரறிக்குப் போவோம். இண்டைக்குக் "கெமிஸ்றி கிளாஸ்" ஸேர் ஒன்பது மணிக்கெல்லாம் வந்துவிடுவார்.

"அம்மா.. அம்மா.. கதவைத் திறவுங்கோ.... நேரமாச்சு. நான் ரியூசனுக்குப் போக வேணும்"

"...."

நான் கதவைப் படபடவெனப் பலமாகத் தட்டுகிறேன்.

"இவளோட பெரிய கரைச்சல்.. ரியூசனுக்குப் போற நேரம் வந்திட்டால் அலட்டத் தொடங்கிவிடுவாள்" அம்மா முணுமுணுக்கிறா.

"கிணிங்... கிணிங்..."

தெருவிலை நிண்டு வசந்தி பெல் அடிக்கிறாள். என்னைக் கூட்டிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறாள்.

"அம்மா கதவைத் திறவுங்கோ... ஏன் பூட்டி வைச்சிருக்கிறியள்? வசந்தி என்னை விட்டுட்டுப் போகப்போறாள்."



அவள் என்னை விட்டுட்டுப் போனா, நான் தனியாகத்தான் போக வேணும். இனிமேல் நான் அந்தப்பக்கம் தனியாகப் போக மாட்டன். எனக்கு பயமா இருக்கு.. தனியாக அவங்கடை "சென்றி" யைத் தாண்டிப் போறதெண்டா.... வசந்தி கூட வந்தாப் பயமில்லை.

"அது வசந்தியில்லப் பிள்ளை, வேறையாரோ தெருவிலை பெல் அடித்துக் கொண்டு போகினம். நீ சும்மா சத்தம் போடாமல் இரு"

அம்மா பொய் சொல்றா. வசந்தியின் பெல் சத்தம் எனக்குத் தெரியும். போறது வசந்திதான். கதவைத் தட்டித்தட்டி அம்மாவைக் கெஞ்சிக் கெஞ்சி நான் சோர்ந்து போகிறேன். கதவைத் தட்டிய கைகள் வலிக்கின்றன.

வசந்தி போயிருப்பாள் ரியூசன் தொடங்கிற நேரமாச்சு. அவள் தனியாகத் தான் போனாளோ... அல்லது கவிதா, பூரணி எல்லாரும் சேர்ந்து போயிருப்பினமோ...? எப்படிப் போனாலும் அவங்கள் சும்மாவிடமாட்டாங்கள். சென்றியிலை சோதித்துத் தான் அனுப்புவாங்கள். ஐ.சி. யைத் திருப்பித் திருப்பிப் பார்த்து... ஸ்கூல் பாய்க்குகளைக் கொட்டிக்கிளறி, கேள்வியல் கேட்டு....

சின்ராசு கார் ஓட்டிவரும் சத்தம் கேட்கிறது. யன்னல் பக்கம் சென்று வெளியே பார்க்கின்றேன். யன்னலில் ஒரு பக்கக் கதவு உடஞ்சு தொங்குது... இழுத்துப்பூட்ட ஏலாது.

"அட சின்னராசு, இங்கை வாடா.... அச்சாப்பிள்ளையல்லே... இந்த அறை கதவைத் திறந்து விடடா."

**போன மாசத்தில ஒருநாள் மைமல் பொழுது.... "றக்" ஒண்டிலை வந்து அந்தப் பெரிய வீட்டிற்கு முன்னால இறங்கினாங்கள். வீட்டையும் வளவையும் சுத்தி சுத்தி பாத்தாங்கள். அடுத்த நாள் மரங்கள் தறிச்சு விழுகிற சத்தம் கேட்டுது. பனையளைத் தான் தறிச்சவங்கள். பனை யாழ்ப்பாணத்தின் சின்னம், கற்பகத் தரு எண்டு எங்கடை ஆட்கள் சொல்லிறவை. இவையளுக்கு பனையளைத் தறிச்சாத்தான் பாதுகாப்பாம்!**

அவனுக்கு நான் சொல்லிறது கேட்கேலை. விர்ரென்று அவன் கார் வேகமாக ஓட்டும் போது வாயிலிருந்து எச்சில் பறக்கிறது... தூவானமாய்த் தெறிக்கிறது. கால் இடறி விடப்போகும் நேரத்தில் சமாளித்துக் கொண்டு கியறை மாற்றுகின்றான்.

ரிவேஸ் கியர்-பின்புறமாக வேகமாய் ஓடிவந்து விறாந்தையின் முன் நிப்பாட்டுகிறான்.

அவன் எங்கள் வீட்டிற்கு வரும் போதெல்லாம் விறாந்தையில் தொங்கும் கிளிக் கூண்டின் பக்கம் போவான். "ரிவிரஸ" இராணுவ நடவடிக்கையின் போது நாங்கள் ஊரைவிட்டு ஓடி வன்னிக்குப் போயிருந்த காலத்திலை ஒரு கிளி பிடிச்சனாங்கள். திரும்பி வரேக்கை அதையும் கொண்டு வந்திட்டம்.. அது என்ரை செல்லக்கிளி.

சின்னராசு தினமும் கிளி சாப்பிடுகிறதுக்கு ஏதாவது கொண்டுவந்து கொடுப்பான். வெகு நேரமாய் கிளியுடன் பேசுவான். அவனைக் கண்டுவிட்டால் கிளிக்கும் குதாகலம் பிறந்துவிடும், ஏதேதோ பேசும்.

யன்னலினூடாக வீட்டின் முன் புறத்தைப் பார்க்க முடியாது. அதனாலை சின்னராசு என்ன செய்யிறான் எண்டு என்னால் பார்க்க முடியவில்லை.

சின்னராசு மீண்டும் காரை ஸ்ராட் செய்கிறான்.

"அடே என்றை ராசாவெல்லே... கதவைத்திறந்து விடடா... நான் அவனிடம் மீண்டும் கெஞ்சுகிறேன்.

"முடியாதக்கா... திறந்துவிட்டா மாமி என்னைப் பேசுவா" என்று சொல்லிக் கொண்டே கார் ஓட்டியவண்ணம் அவன் விரைகிறான்.

எனக்கு மீண்டும் தலை சுத்துகிறது. திடீரெண்டு நாலு பக்கச் சுவர்களும் கைகோர்த்துக் கொண்டு என்னைச் சுற்றி வட்டமாய்ச் சுழல்கின்றன. "ஐயோ... ஐயோ..." நான் கண்களை மூடிக் கொண்டு வீரிட்டு அலறுகிறேன். நெஞ்சு படபடக்கிறது. தேகம் வியர்வையில் நனைகிறது. மயக்கம் வருகிறது. நான் நிலத்திலே சாய்கிறேன். எவ்வளவு நேரம் மயங்கிக் கிடந்தேனோ எனக்கே தெரியாது.

விழித்தெழுந்த போது உடம்பெல்லாம் வலியெடுக்கின்றது., சோர்வாக இருக்கிறது.

இப்ப ரியூசன் முடிஞ்சிருக்கும். முந்தி வடக்கு சந்தையிலை "சென்றி" இருந்தபொழுது எங்களுக்கு எந்தக் கரச்சலும் இல்லை. பனை வடலியலுக்குப் பின்னால இருந்து எழும்பி வருகிற சூரியனை ரசித்தபடி நாங்கள் ரியூசன் வகுப்பிற்குப் போகிறனாங்கள். சென்றிப் பக்கம் போகமலே ரியூற்றிற்குப் போகலாம். இப்ப இடத்தை மாத்திப் போட்டாங்கள். எங்கட வீட்டிலை இருந்து நாலு வளவு தள்ளி சென்றி போட்டிருக்கிறாங்கள்.

போன மாசத்தில ஒருநாள் மைமல் பொழுது.... "றக்" ஒண்டிலை வந்து அந்தப் பெரிய வீட்டிற்கு முன்னால இறங்கினாங்கள். வீட்டையும் வளவையும் சுத்தி சுத்தி பாத்தாங்கள். அடுத்த நாள் மரங்கள் தறிச்சு விழுகிற சத்தம் கேட்டுது. பனையளைத் தான் தறிச்சவங்கள். பனை யாழ்ப்பாணத்தின் சின்னம், கற்பகத் தரு எண்டு எங்கடை ஆட்கள் சொல்லிறவை. இவையளுக்கு பனையளைத் தறிச்சாத்தான் பாதுகாப்பாம்!

(தொடரும்)

இது நம்தேசம்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்


இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல:96, கிருல வீதி, கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635 பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: peesl@peesl.lk இணையத்தளம்: www.pccsl.lk

# நூல் அறிமுகம்

## புயல் மழைக்குப் பின்னான பொழுது




**ஆசிரியர்** :- த.ஜெயசீலன்
**பக்கம்** :- 80
**வெளியீடு** :- அருணன் பதிப்பகம், நல்லூர்.
**விலை** :- 250.00

சுண்டுக்குழி த.ஜெயசீலனின் "புயல் மழைக்குப் பின்னான பொழுது" என்ற கவிதை நூல் வெளிவந்திருக்கின்றது. நல்லூரிலுள்ள அருணன் பதிப்பகம் இதனை வெளியிட்டிருக்கின்றது. மொத்தம் 57 கவிதைகள் 80 பக்கங்களில் வெளிவந்திருக்கின்றன. அன்றாட மன நெருக்கடிகளை பாடுபொருட்களாகக் கொண்ட கவிதைகளே இவை.

பிராத்தனைகள், வந்தபாதை, பிறைபார்த்தல், அலைவரிசை உன்னை உணர், நிச்சயங்களற்ற நெடுவாழ்வு, கடலடி, தொடுகை, புயல் மழைக்குப் பின்னான பொழுது, சாட்சி போன்ற 57 தலையங்கங்களில் கவிதைகள் வெளிவந்திருக்கின்றன.

அவருடைய கவிதைகளில் மிகவும் முக்கியமான கவிதை "புயல் மழைக்குப் பின்னான பொழுது" என்ற கவிதையாகும். இதுவே நூலின் தலைப்பாகவும் வந்துள்ளது. போருக்குப் பின்னரான அவலநிலையை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

"சிறை மீண்ட செல்வங்கள்
செல்லாத காசுகளாய்
தெருக்களில் நிறைய
எவரெவரோ பொறுக்குகிறார்.
தவறித் தொலைந்து காணாமல் போய்விட்ட
உறவுகளின் வெற்றிடத்தை
நிரப்பின கான் அந்நியங்கள்"

புனர்வாழ்வுபெற்றவர்களின் அவல நிலையினை கவிஞர் விளக்குவதாகப் பொருள் கொள்ளலாம். அதேவேளை வெற்றிடத்தைப் பயன்படுத்தி போராட்டத்தோடு தொடர்பில்லாத அந்நியர்கள் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறார்கள் என்பதையும் கவிதை குறிப்பிடுகின்றது.

எல்லோரும் வாசிக்க வேண்டிய முக்கியமான கவிதை நூல் இதுவாகும்.

**சி.அ.யோதிலிங்கம்.**

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(நட்டமெனக் கூறும்......)

தொழிலாளர்களுக்குரிய சம்பள அதிகரிப்பை காலம் தாழ்த்தாது செய்யவேண்டும். இல்லையேல், தோட்டங்களை மக்களிடம் கையளித்துவிட்டு வெளியேறலாம்.

இந்நிலையில், அரசாங்கம் கம்பனித் தோட்டங்களைப் பொறுப்பேற்று தொழில் அனுபவமும், முதிர்ச்சியும், கடின உழைப்பிற்கும் சொந்தக்காரர்களான மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டவும், விவசாயம் செய்யவுமான காணியை உறுதிப்பத்திரத்துடன் கொடுப்பதோடு, மலையக தொழிலாளர்களையும் சிறுதோட்ட உரிமையாளர்கள் என்ற நிலைக்கு உயர்த்தவேண்டும். இவ்வாறு செய்தால் மட்டுமே மலையகத்திற்கும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது வாழ்வு கலாசாரத்திற்கும், கூட்டு வாழ்விற்கும் பாதுகாப்பு கிடைப்பதோடு, பொருளாதார, சமூக அபிவிருத்தியும் ஏற்படும்.

இன்று சிறு தோட்ட உரிமையாளர்களே 70% தேயிலை உற்பத்தியை மேற்கொள்வதோடு, சமூக பாதுகாப்போடும், கௌரவத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய கௌரவத்தை மலையகபெருந்தோட்டத்தொழிலாளர்களும் அடையவேண்டும். ஏனெனில், இவர்களும் இந்நாட்டின் பிரஜைகளே.

இன்றைய இக்கட்டான அவசர கால கட்டத்தில் மலையக அரசியல் கட்சிகளும், அவற்றிற்கு துணை நிற்கும் தொழிற்சங்கங்களும் தமது மலட்டு அரசியலை கைவிட்டு முதலாளித்துவத்தின் எடுபிடிகளாக நின்றுதொழிலாளர்களை ஒடுக்கும் வன்புணர்ச்சியில் ஈடுபடாது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி சுதந்திர வாழ்வை அடிப்படையாகக் கொண்டு செயற்பட சமூக சக்திகளோடு கை கோர்க்க வேண்டும் என்பதோடு, மலையக மக்களின் விழிப்பே மலையகத்தின் எதிர்காலம் என மலையக சமூக ஆய்வு மையம் வலியுறுத்துகின்றது.

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(கூன் பாஸி....)

போதை அடிமைகளைப் பற்றி ஆராய்ச்சி, சிகிச்சை தரும் டாக்டர்களுடன் விவாதம் என உண்மையைத் தேடி அலைந்திருக்கின்றார். பாத்திரத்தின் நம்பகத் தன்மைக்காக இயக்குநரும் நடிகையும் எடுத்துக் கொண்ட அதிகபட்ச அக்கறையே "கூன் பாஸி" யை உலகம் முழுக்கப் பேச வைத்தது. இவ்விசயத்தில் இருவருக்கும் உள்ள ஒற்றுமைக்குப் பின்னால் இன்னொரு விசயமும் இருக்கிறது. பரன் கோஸாரி வேறு யாருமல்ல. இயக்குநர் ரக்‌ஷன் பானியின் மகள் தான்.

"கூன்பாஸி" ஈரானிய பின்னணியில் எடுக்கப்பட்டாலும், போதைப்பிரச்சினை என்பது இன்றைக்குச் சர்வதேசப் பிரச்சினை. என் படம் ஒரே யொரு போதை அடிமையைத் திருத்தினாலே என் உழைப்புக்கு வெற்றி கிடைத்ததாக அர்த்தம் என்கிறார் இயக்குநர் ரக்‌ஷன் பானி. தன்னடக்கத்துடன் இப்படி சொல்கிறார் இவர். உண்மையில் கூன்பாஸியைப் பார்த்தால் ஒவ்வொரு போதை அடிமைகளும் அந்தக் கணமே அதிலிருந்து மீள்வார்கள் என்பதே நிஜம்!

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(சந்திரிகாவிற்கான...)

கொலை, நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் படுகொலை, கிரிசாந்தி குமாரசுவாமி படுகொலை, பண்டாரவளை பிந்தன்வெவ சிறைக்கைதிகள் படுகொலை, மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை என்பன சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே அரங்கேற்றப்பட்டன. முப்படைகளின் தலைவராக சந்திரிகா இருந்ததினால் இவரது கட்டளைகள் இன்றி இந்தப் படுகொலைகள் நடந்திருக்கும் எனக் கூற முடியாது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் சந்திரிகா பதவியிலிருந்த காலத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினராலேயே கொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. குமார் பொன்னம்பலம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரே சந்திரிகா தன்னை கொலை செய்யலாம் எனக் கூறியிருந்தார்.

இக்காலத்தில் தமிழ் மிதவாதிகளின் அரசியல் நிலைப்பாடு வேறு, புலிகளது அரசியல் நிலைப்பாடு வேறு என்றே பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சமாதானச் செயற்பாட்டுக்கு எதிராகப் புலிகள் உள்ளனர் என இந்த மிதவாதிகள் எனக் கூறப்படுகின்ற சம்பந்தன், நீலன் திருச்செல்வம் வகையறாக்கள் சர்வதேச ரீதியாக பிரச்சாரம் செய்தனர். குமார் பொன்னம்பலம் அதனை நிராகரித்து தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதனை சர்வதேச ரீதியில் வலியுறுத்தினார். அதன் மூலம் ஒரு நாட்டிற்குள் தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்ட தீர்வைப் பெறுவதே புலிகளினதும், தமிழ் மிதவாதிகளினதும் அரசியல் இலக்கு என வாதிட்டார். தேர்தல் வரும்போது புலிகள் குமார் பொன்னம்பலத்தை முதன்மைப்படுத்தக் கூடிய நிலையும் இருந்தது. குமார் பொன்னம்பலம் முன்னிலைக்கு வந்தால் புலிகள் வேறு, மிதவாதிகள் வேறு என்ற பிரச்சாரத்தைக் கொண்டுசெல்ல முடியாமல் போய்விடும் என்பதற்காகவே அவர் கொலை செய்யப்பட்டார்.

இனப்படுகொலை என்பது வெறு மனவே உயிர்க்கொலை மட்டுமல்ல. ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியலைக் கொலை செய்வதும் இனப்படுகொலைதான். சந்திரிகா தமிழ் மக்களது அரசியலையும் தமிழ் உயிர்களையும் கொலை செய்த ஒரு இனப்படுகொலையாளி. அவரது கைகள் முழுவதிலும் தமிழனின் இரத்தக் கறை. அந்த இரத்தக்கறை காய்வதற்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு பாவமன்னிப்பு வழங்கியுள்ளது.

சுயமரியாதை என்பது ஒவ்வொரு இனத்திற்கும் உண்டு. அந்த இனத்திற்கு தலைமை தாங்கும் அரசியல் இயக்கத்தினாலேயே அது வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திரிகாவிற்கு பாவமன்னிப்பு வழங்கியதன் மூலம் தமிழ் மக்களின் சுயமரியாதையை மிக மோசமாக அவமானப்படுத்தியுள்ளது.

இதைவிட இன்னோர் முக்கிய அபாயம் உண்டு. சந்திரிகாவின் பிரசன்னம் சர்வதேச விசாரணையையும் பலவீனப்படுத்தப் போகின்றது. சந்திரிகா எங்கள் தலைவி. இது எங்களுடைய அரசாங்கம் என நாங்களே தலையில் தூக்கி வைத்தால் இந்த அரசாங்கத்தை பலவீனப்படுத்தக்கூடிய எந்தச் செயலையும் சர்வதேச சமூகம் செய்யப்போவதில்லை. நாம் சந்திரிகா காலத்து படுகொலையையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு கோரி வருகின்றோம். அந்தக் கோரிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கவனத்தில் எடுக்காவிட்டாலும் அதற்கு ஒரு சர்வதேச ரீதியான பெறுமதி உண்டு. எதிர்காலத்தில் அக்கோரிக்கை ஏற்கப்படக்கூடிய சூழலும் உருவாகலாம். சந்திரிகாவுடனான உறவு அதனையும் பலவீனப்படுத்தப்போகின்றது.

சம்பந்தனும், சுமந்திரனும் செல்கின்ற இடமெல்லாம் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறுகின்றனர். ஆனால் அரச பயங்கரவாதம் பற்றி அவர்கள் வாயே திறப்பதில்லை. இன்று அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட சந்திரிகாவையே தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுகின்றனர்.





திருகோணமலை நகராட்சி மன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கான பதவியுயர்வு வழங்காமை, சுகாதார ஊழியர்கள் நியமனத்தில் முறைகேடு, உறவினர்களை பணிக்கு அமர்த்துதல், தன்னிச்சையாக செயற்படுதல் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகராட்சி மன்ற தவிசாளர் கந்தசாமி செல்வராசா ஈடுபட்டு வருவதைக் கண்டித்து திருகோணமலை நகராட்சி மன்ற ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தவிசாளரின் உருவப்பொம்மையையும் எரித்துள்ளனர்.






வடமராட்சி கிழக்குப் பிரதேசம் அபிவிருத்திகளில் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்து மருதங்கேணியில் ஆர்ப்பாட்டம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு.




மன்னார் மாவட்ட பியர் வாலிப விளையாட்டுக்கழகத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றியீட்டிய வீரர்களுக்கு த.தே.ம.மு கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

# மே தினம் 2015



## மாபெரும் பொதுக்கூட்டமும் இசைநிகழ்ச்சியும்



**இடம் - நடராஜா அரங்கு**
**கொட்டடி கடற்கரை, பருத்தித்துறை**

**காலம் - 01.05.2015 - பி.ப: 3.30 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



**இது நம்தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.**
**வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறின்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 29.04.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.